செந்தமிழ் தொகுதி.

4. தை. மாசி

1929-30

1, 2

JL
Y592Cm,211, N27CH.
N29. 4 . 1-4.
129813

Registered M 1514. சுக்கில௵ தை, மாசி



# ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம்

சுக்கிலஹு (மாசிமீ 1930ஹு பிப்ரவரிமீ—மார்ச்சுமீ)

தக்ஷிணாயனம், ஹேமந்தரிது,

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய சிரார்த்த திதி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | 1 | புத | ○ச 28-18 | பூ 21-38 | சி 60 | 2 | 1 | குன் | தெமே | பௌர்ணமி |
| 13 | 2 | வியா | பௌ 18-53 | ஆ 14-8 | சி 14-8 அ | 2 | 1 | பௌ பிர | தெற்கு | |
| 14 | 3 | வெ | பிர 9-58 | ம 6-58 | அ 6-58 சி | 2 | 1 | துதி | மேற்கு | |
| 15 | 4 | சனி | துதி 2-3 திரி 55-23 | பூ 0-43 உ 55-58 | சி 0-43 ம | 2 | 1 | திரி | வடமே | |
| 16 | 5 | ஞா | சது 50-30 | அ 52-38 | அ 52-38 சி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 17 | 6 | திங் | பஞ் 47-28 | சி 51-28 | பி 51-28 அ | 2 | 0 | பஞ் | பூமி | |
| பிப்ரவரிமீ 18 | 7 | செ | சஷ் 46-38 | சு 52-30 | சி 52-30 ம | 2 | ½ | சஷ் | கிழக்கு | |
| 19 | 8 | புத | சப் 47-55 | வி 55-28 | சி 60 | 2 | ½ | சப் | வடக்கு | |
| 20 | 9 | வியா | அஷ் 51-10 | அ 60 | சி 60 | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 21 | 10 | வெ | நவ 55 58 | அ 0-15 | சி 0-15 ம | 1 | ½ | நவ | தெமே | |
| 22 | மாசிமீ 11 | சனி | தச 60 | கே 6-28 | சி 60 | 1 | ½ | தச | தெற்கு | |
| 23 | 12 | ஞா | தச 1-48 | மூ 13-38 | அ 13-35 சி | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 24 | 13 | திங் | ஏகா 8-8 | பூ 21-3 | ம 60 | 1 | ½ | துவா | மேற்கு | |
| 25 | 14 | செ | துவா 14 38 | உ 28-38 | அ 28-38 சி | 0 | ½ | ... | வடமே | |
| 26 | 15 | புத | திர 20-15 | தி 35-50 | சி 35-50 பி | 0 | ½ | திர | வடகிழ | மஹா சிவராத் |
| 27 | 16 | வியா | சது 26-·0 | அ 42-30 | சி 42-30 ம | 0 | 0 | சது | ஆகாசம் | |
| 28 | சுக்கில 17 | வெ | ●அ 31-25 | ச 48-33 | சி 60 | 0 | 0 | அமா | பூமி | அமாவாசை |
| 1 | 18 | சனி | பிர 35-28 | பூ 53-45 | ம 53-45 சி | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 2 | 19 | ஞா | துதி 33-48 | உ 58-13 | அ 60 | 0 | ½ | துதி | வடக்கு | |
| 3 | 20 | திங் | திரி 41-13 | ரே 60 | சி 60 | 0 | ½ | திரி | தென்கி | |
| மார்ச்சுமீ 4 | 21 | செ | சது 42-35 | ரே 1-43 | சி 60 | 0 | ½ | சது | தெமே | |
| 5 | 22 | புத | பஞ் 42-40 | அ 4-10 | ம 4-10 சி | 0 | ½ | பஞ் | தெற்கு | |
| 6 | 23 | வியா | சஷ் 41-40 | *பர 5·28 | சி 5-28 ம | 1 | ½ | சஷ் | மேற்கு | கிருத்திகை |
| 7 | 24 | வெ | சப் 39-20 | கி 5-33 | சி 5-33 ம | 1 | ½ | சப் | வடமே | |
| 8 | 25 | சனி | அஷ் 35-35 | ரோ 4-13 | அ 4-13 | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 9 | 26 | ஞா | நவ 30-30 | மி 1-38 தி 57-45 | சி 60 | 1 | ½ | நவ தச | ஆகாசம் | |
| 10 | 27 | திங் | தச 24-5 | பு 52-43 | அ 52-43 | 2 | 0 | ஏகா | பூமி | |
| 11 | 28 | செ | ஏகா 16-58 | பூ 47-3 | சி 60 | 2 | 1 | துவா | கிழக்கு | |
| 12 | 29 | புத | துவா 9-8 | ஆ 40-28 | சி 60 | 2 | 1 | திர | வடக்கு | |
| 13 | 30 | வியா | திர 1-0 சது 52 58 | ம 34-33 | அ 34·33 சி | 2 | 1 | சது | தென்கி | |

சென்னை-600 008
9-JUN 1930
...RAS ...

## உள்ளடக்கம்

கடவுள் வணக்கம்; முன்னேற்றக் கண்ணிகள் 2
பத்திரிகாசிரியர் முன்னுரை 3
சமயப்பகுதி:—இந்து தெய்வமூர்த்தத் தத்துவார்த்த விளக்கம். 5.
ஒழுக்கப்பகுதி:—தூய உணவும் ஒழுக்க மேம்பாடும். 7
செங்குந்த யாத்திரை வாசி:—செங்குந்தர் வரலாறு. 9
புது உலகமும் பழைய உலகமும்:—சூரிய மண்டலம். 11
இளைஞர் பக்கம்:—‘இடி—மழை’— ஒரு சிறு கதை. 13
சுகாதாரப் பகுதி:—காற்று. 19
வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும் 22
மாதர் பகுதி:—பெண் கல்வி 26
உலக விநோதங்கள் 30
ஆன்றோர் அமுதமொழி 32
பிரமனை வெல்லல் 33
சென்ற மாதம் நடைபெற்ற பல மகாநாடுகள் 35
ஒற்றுமை 37
அனுதாபம் 38
வர்த்தமானம் 39
காஞ்சிபுரத்தில் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகா நாடு 41
நமது கடிதங்கள் 42
விகடத் துணுக்குகள் 45
செங்குந்தர் கிளர்ச்சி 46
பஞ்சாங்கம்
கல்விநிதிச் சீட்டுப் பரிசுகள் வந்த எண்கள்

## கடவுள் துதி

எண் சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
யாரமிர்தே யென்கண்ணே யரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங் கேளே. —(தாயுமானர்)

### கூத்தர் துதி.

பல்லவி.

போற்றுங்கள் போற்றுங்கள் போற்றுங்களே-புகழ்
நாட்டுங்கள் நாட்டுங்கள் நாட்டுங்களே.

அநுபல்லவி.

கூத்தர் பதாம்புயத்தை ஏத்தும் மெய்யன்பினேடு
(போ)

சரணங்கள்.

பார்புகழ் புண்ணிய குந்தர் குலந்தனில் சீர் நிறைய
மயம் சோபிக்கத்தோன்றி
நேர் நெறி நின்றுமே நித்தியமான
துதியதனை மதிவலியால் ஈட்டுபெருங் கூத்தர்
பதம் (போ)
என்றுந் தமிழன்பர் ஏதமிலெண்ணத்தில் நின்று
நிலவி நன்னீள் மகிழ்வீயுந்
துன்று நயநிறை தூயதமிழ்ப்பா
யாத்ததனுல் எவ்வுலகும் ஏத்துந்தனிக் கூததர்
பதம் (போ)
எங்கும் பரவிய செங்குந்தர் தம்புகழ் பொங்கியே
தங்கிடத் தண்ணளியோடு
பங்கமிலீட்டி யெழுபதாம் நூலைப்
பாடியதால் நம்மிடையே நீடுபுகழ் பெற்றவரைப்
(போ)
மன்னர் சோழரது மந்திரியாகி மதியோடு வீரமே
மாண்புடன் காட்டிப்
பின்னுமவர்பதம் பெற்றுப் பாராண்ட
கவியரசர் புவியரசர் ஏத்துஞ் சக்ரவர்த்தி பதம்
(போ)
செங்குந்தா சென்னியி னுதலமேறிச் சீருடன்
பனுவல் செப்பிய பின்பே
எங்கு நிறைந்திடு மெம்மானருளால்
வெட்டுசிரம் ஒட்டக்கவி பாடுமொட்டக் கூத்தர்
பதம் (போ.

### செங்குந்தர் முன்னேற்றக் கண்ணிகள்.

(தசரத ராஜகுமாரா மெட்டு)

முன்னேற்றமதை நாமே நாடுவோம்: முயன்றிடு
வோம்; அதைப்பெறுவோம்; மகிழ்ந்திடுவோம்.

[தோம்
கைதனில் வேல்கொண்ட கடவுட் குலத்துதித்
மூவுலகுந் துதிக்கும் முன்னோர் வழிவந்தோம்
சூரசம்மாரஞ் செய்ய சோதரற்குதவினேம்
நங்குலப்புகழ் பெரிதல்லவோ? உரித்தல்லவோ?
அரிதல்லவோ? தொன்மைத்தல்லவோ

பொங்கு தமிழ்ப்பாவிசை புகழ்ப்படிக்காசரும்
எங்கும் பரந்தவிசை யிரட்டைக்கவிகளும்
ஓங்கும் புகழுடை பொலிவொட்டக் கூத்தரும்
நமது குலத்தினிலேயுதித்தார்: மிகத்தழைத்தார்;
நன்மையிழைத்தார்; புகழுடம்பெடுத்தார்)
சூரனையழித்துச் சுரர்துயர் தீர்த்ததும்
அஞ்ஞானமொழிந்திட அறுமுகன் பெற்றதும்
வீரவாகு முதலோர் வீரியம் சிறுத்ததும்
கைக்கோளர் கையிலங்கு குந்தமே; செங்குந்தமே;
தனிக்குந்தமே; தசைசாறுங்குந்தமே.

தமிழகத் திலங்கிய நாடுகள் மூன்றில் :
தலைமையாய் நிலவிடு சோழ நன்னாடு
மன்னிய சீருடன் மிளிரச் செய்தீர்கள் [வரே
வள்ளன்மை வீரங்கொள் கைக்கோளரே, புகழா
கண்யசீலரே; தகைமையாளரே;
சோழர்தம் சபைதனில் புகழொடு திகழ்ந்தோம்
சொல்லருஞ்சிறப் பொடுதுதிபல நுகர்ந்தோம்
அன்னவரமர்களில் ஆண்மைவிளங்கிடப்
பகைவர்புறங்காட்ட ஓட்டினேம்; வீரங்காட்டி
னேம்; புகழ்நாட்டினேம்; பெருமையீட்டினேம்.

இவ்விதஞ் செல்வத்திலும் இணையில் வீரந்தனிலும்
கவிமதியனைய நற்கலைகள் பலவேறிலும் [தோ
குழைந் நல்லன்பிலும் கொடையிலும் நிறை
தற்காலந்தாழ்நிலையில் நிற்கின்றோம்; செயல் ம
தோம்; புகழ்மறந்தோம்; உறக்கங்கைகொ
டே.

ஆகையால் தாழ்மையாக அந்தகாரம்விட்டு
மேன்மையாம் ஒளிதனில் மேவிடவிரும்பின்
நாம்கொள் வேண்டுதல் நன்முயற்சியேயா
முன்னேற்றமதை நாமே நாடுவோம்; முயன்
வோம்; அதைப்பெறுவோம்; மகிழ்ந்திடுவோ

ஜெ. தங்கவே

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர் :—பண்டிதர். பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—ச } சுக்கிலஞு தை, மாசியீ {பகுதி—க, உ

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மித்திரனுக்கு நான்காம் ஆண்டின் தோடக்கம்.

நமது 'மித்திரன்' பிறந்து மூன்றுண்டுகள் முடிந்து நான்காமாண்டு தொடங்கி யிருக்கிறது. வருஷத்துக்கு வருஷம் அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்திருக்கிறுன். விஷய புஷ்டியிலும் சந்தாவுணவூட்ட முன் வந்துள்ள அன்பர்கள் தொகையிலும் அவனுக்கு நிகரான சமூகத் தொண்டியற்றும் மாத 'மித்திரன்' இல்லையெனவே அவனைப் பல வகுப்பினர்களும் தினசரிப் பத்திரிகாசிரியர்களும் மதிப்புரை அனுப்பிய வேறு பல அறிஞர்களும் கூறியிருக்கின்றனர். யாவரும் புகழ்ந்து பாராட்டத்தக்க இந்நிலைக்கு நமது 'மித்திரன்' வரத் துணையாய் நின்ற வியாச கர்த்தர்களுக்கும் சந்தா நேயர்களுக்கும் எமது நன்றி என்றும் உரியதாகுக.

இவ்வாண்டில் புத்துடை யணிந்து புதுப் பொலிவுடன் துலங்கவேண்டு மெனும் ஆர்வம் அவனுள் உதித்திருக்கின்றது. அவ்வார்வ மேலீட்டால் அவன் தன்னை அழகுறச் சிங்காரித்துக் கொள்ளும் அலுவலில் இறங்கிச் சிறிது காலம் தாழ்த்திவிட்டான். தம்மை அலங்கரித்துக்கொள்ள அவாவும் சிறுவர்களுக்குக் காலம் கடப்பது தோன்றுதன்றே ? அதுவுமன்றி, அவனைச் சிங்காரித்து விடவேண்டியவர்களும் இடையில் வேறு அலுவலில் தமது முழுகவனத்தையும் செலுத்த வேண்டியவர்களாக இருந்தனர். நமது கல்வி நிதிச் சீட்டினைச் சென்ற ஜனவரியீ 26உ காஞ்சிபுரத்தில் குலுக்க வேண்டியதின் நிமித்தம் ஒய்வு ஒழிவின்றி எமது கவனமும் காலமும் எமது தோழர்களின் கவனமும் காலமும் சமர்ப்பிக்கப் பெற்றிருந்தன. இன்னோரன்ன காரணங்களால் நமது 'மித்திரன்' சிறிது காலந் தாழ்த்தி உலாவ வருகின்றுன். அவனது புறப்பொலிவைக் காணும் மகிழ்ச்சியிடை அன்பர்கள் அவனது காலதாமதத்தை மன்னித்தருளுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

### செங்குந்தர் கல்வி நிதி.

கல்விநிதிச் சீட்டுக்களின் விற்பனையால் ஒரு லக்ஷத்துக்குச் சுமார் மூலதனம் திரட்டிச் செங்குந்த மாணுக்கர்கள் உபகாரச் சம்பள நிதி யொன்றும் தரும விடுதியொன்றும் ஏற்படுத்த உச்தேசித்திருந்தோம். எனினும், சீட்டு விற்பனையால் கல்விநிதிக்கு எஞ்சி நிற்கும் மூலதனம் பத்தாயிரமே. இத்தொகை மிகக் குறைந்ததென்பதைக் குலாபிமான மிகுந்த அன்பர்களனைவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். அது நாம் மேற்கொண்டுள்ள தொண்டிற்கு மிகமிகச் சொற்பமானது

என்பதை யுணர்ந்து பல தயாளகுண சீலர்கள் தமக்குக் கிடைத்துள்ள பரிசுப்பணங்களையும் கல்விநிதிக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு அன்பு கனிந்த நிரூபங்கள் எழுதியிருக்கின்றனர். அவர்களுக்குச் செங்குந்த உலக முற்றிலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. எஞ்சியுள்ள தொகை சிறிதெனினும் அதற்கு வரும் வட்டி வருவாயைக் கொண்டு நிலையாகப் பதினைந்து இருபது மாணுக்கர்களுக்கு வருஷாவருஷம் உபகாரச் சம்பளங் கொடுத்து வரலாம்.

ஏழை மாணுக்கர்களுக்கு உண்டி உடை உறையுள் முதலியவைகளோடு இதர உபகாரங்களையும் கொடுக்க வேண்டுமென்றாலும், வெளி நாடுகளுக்குத் தக்க அறிவாளிகளை யனுப்பிக் கைத்தொழில் நுட்பங்களையும் வியாபார முறைகளையும் ஆராயவேண்டுமென்றாலும், இத்தொகையினின்று கிடைக்கக் கூடிய வரும்படி எவ்விதத்திலும் போதாது. இதைப்போல் பல மடங்கு பொருள் திரண்டால் தான் இத்தகைய குல முன்னேற்றத் தொண்டுகளைச் செய்ய ஏது உண்டாகும். பரோபகார சிந்தை யுள்ளவர்களும் குலமுன்னேற்றத்தில் மிக்க ஆர்வம் படைத்தவர்களும் இது விஷயத்தில் கண்கணிப்பார்களெனவே நம்புகின்றோம்.

இந்நம்பிக்கையில் எமக்கு உறுதியை உண்டாக்குவன சென்ற மகாநாட்டுப் பந்தலில் பெருந்தொகைகளை நமது கல்வி நிதிக்கு நன்கொடைகளாக வழங்கிய அன்பர்களின் அபிமானமும், அவர்களைப்போல் மேலும் பெருந்தொகைகளை நமது கல்விநிதிக்கு நன்கொடைகளாக வழங்க உத்தேசித்திருப்பதாக எமக்குத் தெரிவித்துள்ள நேயர்களின் பேரார்வமும், சென்னையிலும் சைதாப்பேட்டையிலும் காஞ்சியிலும் இதர இடங்களிலும் நமது தலைச் சங்கத்தின் பேரால் உண்டிகளை வைத்தும் மகமை வழங்கியும் உதவிவரும் வியாபாரங்களின் மங்குதலில்லாத குலப்பற்றுமே யாம்.

செங்குந்த உலகம் இத்தகையோர்க்குப் பட்டிருக்கும் கடமையை எவராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது.

ம. ச.

## சட்டசபை தேர்தல்.

குடியாத்தம் திரு. M. V. பீமராஜ முதலியரவர்கள் வடஆற்காடு ஜில்லாவிற்குச் சட்டசபை அங்கத்தினராகத் தேர்தல் அவாவுவதாகக் கேள்விப்பட்டு மிக மகிழ்ந்து அவர் வெற்றியடைந்து வருமாறு துணைபுரிய எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

---

## கல்வி நிதிக்கு நன்கொடை

கோலாலம்பூர், 12-2-30

மலாய் நாட்டுக் கடிதம்

கனம் செங்குந்த மித்திரன் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு

அன்புமிக்க ஐயா!

புரட்டாசித் திங்கள் சஞ்சிகையில் "வேண்டுகோள்" இந்நாட்டில் உறங்கிக் கிடந்த செங்குந்த மகாஜனங்களைத் தட்டி எழுப்பி புத்துயி ரளித்திருக்கிறது.

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

ஆகவே இங்குள்ள செங்குந்த மஹா ஜனங்கள் 7—11—29 ஸ்கந்த ஸஷ்டி தினத்தன்று ஓர் அவசரக் கூட்டம் கூடி சில தீர்மானங்கள் செய்யப்பட்டது.

தாய் நாட்டில் நமது சமூக முன்னேற்றத்தைக் குறித்து நமது தலைவர்கள் ஆற்றிவரும் கடமைகளில் தாங்கள் கூடியவரை ஒத்துழைப்ப தவசியம் என்றும் சமஸ்த செங்குந்தக் குடும்பத்தவர்களும் மித்திரனுக்குச் சந்தாதாரராய்ச் சேரவேண்டுமென்று வற்புறுத்தி தீர்மானங்கள் செய்ததன் பயனாக 11 - சந்தாதாரர்களிடம் கையொப்பம் வாங்கியதுடன் செங்குந்த மாணவர்களுக்கு ஓர் கல்வி நிதியும் திரட்டி இத்துடன் கரு. பெரி. பள 5118 நெ. உண்டியல் 1-க்கு ரூ. 295—0—9 இந்த ரூபாய் இருநூற்று தொண்ணூற்றைந்தும் முக்கால் வீசமும் பெற்றுக்கொண்டு பத்திரிகையில் பிரசுரிப்பதுடன் துகை பெற்றுக்கொண்டதற்குத் தாக்கல் எழுதக் கோருகிறோம். கொடையாளர்களின் பெயரும் சந்தாதாரர்களின் பெயரும் இத்துடன் அனுப்பியிருக்கின்றோம். இங்ஙனம்,

க. குமரவேல், சா. முத்துவேல், ச. முத்துக்குமாரு.

23-1-30 திரு. S. குழந்தைவேல் முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய தலைச் சங்க நிர்வாகக் கூட்டத்தில் மலையாளம் ஜில்லா பாலப்புரம் செங்குந்தர் சங்கமும், வட ஆற்காடு திருப்பத்தூர் செங்குந்தர் சங்கமும், தலைச்சங்கத்தின் கிளைகளாக அங்கீகரிக்கப் பெற்றன.



## சமயப் பகுதி

# இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம்

கண்டாச்சிபுரம், திரு. வை. ச. இராமலிங்க முதலியார்.

தொகுதி 3, 458-ம் பக்கத் தொடர்ச்சி

### தக்ஷிணாமூர்த்தம்

அரவநெடுங்கடலாடை பூண்டிலங்கு மிம்மகிலத்தில், அறம், பொருள், இன்பம், வீடென்பனவாகிய புருடார்த்தங்கள் நான்கினுள், நாலாவதாகிய, முத்திப்பேற்றை விரும்பினோர் நிஷ்காமிய தவஞ்செய்து வணங்கி வழிபாடாற்ற நின்றமைவது மேற்கூறிய தக்ஷிணாமூர்த்தம். விதிமுறை யமைக்கப்பெற்றிலங்கும் நமநிந்து சிவாலயங்களில் திருமால் பதிமண்டபத்தின்கண் (உட்பிரகாரம்) தக்ஷிணபாரிசத்தில் தென்முகமாக இம்மூர்த்தங் காணப்படுகின்றது. இது கைலாயகிரியில் இறைவன் தக்ஷிண திசையை நோக்கிக் கல்லால மரத்தின் நீழலில் பிரமபுத்திரர்களாகிய சநகனாதிமுனிவர் நால்வருக்கும் திரிபதார்த்தவுண்மையாகிய பசுபதி-பாசலட்சணங்களை உபதேசித்த அவசரம். தக்ஷிணம் என்பது வடமொழி. தென்மொழியில் தெற்கு என்று பொருள் படும். இதனை,

"துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்
தொழுதருகில் வீற்றிருப்பச் [கள்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தி
சொரூபானு பூதிகாட்டிச் [யே
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே." என்னும்

தாயுமானவர் வாக்கானும், "எந்தை வடவாற்பரம குரு வாழ்க" "மற்றது போழ்திற் றொல்லை மறைப்பொருள் வடத்தின் பாங்கர்ப், பெற்றிடு சனகனாதி முனிவரர்" என்பது போன்ற அருமைச்செய்யுள் வாக்கானு முணர்க. தவிர ஒவ்வொரு சிவாலயத்திலும் உட்பிரகாரத்தில் மூலட்டான மூர்த்திக்கு வலப்புறமாக வெளிப்புறத்தில் கல்லால விருக்ஷத்தின் கீழ் மகரிஷிகள் நால்வர் புடையில் விளங்க மோன நிலைகாட்டி இறைவன் வீற்றிருக்கும் பாவனையாகத் தென் முகம் நோக்கி சிலாவிக்கிரகம் (தக்ஷிணாமூர்த்தி) அமைக்கப்பெற்றிருப்பது கண்கூடாகக் காணத்தக்க போதிய சான்றாயமையும். இறைவன் கல்லால விருக்ஷத்தின் கீழ்த் தென்முகமாகவிருந்து முனிவர்களுக் கருள் செய்தா ரென்பதை "சதுர்முகன் தனயரான நால்வருந் தக்ஷிணத்தின், எதிர்முக மாயமைந்த ஈசனைக் கல்லாலின் கீழ், முதிருறு தவமியற்றி மூன்றரை கோடி கற்பம், பதிமுகத்தினையே நோக்கிப்பார்த்த பின் முத்தரானார்" எனவரு மான்றோர் வாக்கா னுய்த்துணர்க.

இகலோக வாழ்க்கையை வெறுத்து ஞான நிலையையடைய விரும்பினோரும், யோகாப்பியாசிகளும், இல்லறம் துறந்த சுத்த மெய்ஞ்ஞானிகளும் தங்களிஷ்ட சித்தியடைந்து முத்திப்பேறெய்த, இம்மூர்த்தியை உள்ளன்போடு தியானித்து வணங்கி வழிபடுதல் வேண்டும். இம்மூர்த்தியின் வழிபாட்டால் இம்மையில் நற்புகழும், நல்லாரிணக்கமும், யோக சாதனையும், மறுமையில் பவப்பிணி யற்று அழியாவின்பப் பெருவாழ்வாகிய முத்திப்பேறும் எளிதில் கிடைக்கும் என்பது திண்ணம். இதனை,

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்க முதற் கற்ற கேள்வி, வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்தபூரணமாய் மறைக்கப்பாலாய், எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச் சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்" என்னுந் திருவிளையாடற் புராணக் காப்புச் செய்யுளானறிக. ஆதலினிறைவ னத்தாபதருக்காகத் தக்ஷிணாமூர்த்தமாயமைந்து ஞானபோதம் நல்கிய வரலாற்றை யீண்டொரு சிறிதறைவாம்.

முன்னொரு காலத்தில் உலகமாதாவாகிய பார்வதி தேவியார், தன் நாயகனாகிய சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! தேவரீரை வணங்காத சிவாபராதியாகிய தக்ஷனால் வளர்க்கப்பட்ட இவ்வுடலும், அவன் மகளாக வளர்ந்து, அதனாலெனக்குற்ற "தாக்ஷாயணி" என்னுந் திருநாமமும் மாறும் வண்ணம் அடியேற் கின்னருள் சுரப்பீராக" என்று விண்ணப்பித்து நிற்க, பெருமான் மகிழ்ந்து, "ஏ பெண்பாவாய்! இமயமன்னன் நின்னை மகளாகப்பெறக்கருதி நெடுநாளா யருந்தவம் பயில்கின்றனன். ஆதலின் அவன் பாலுற்று வளர்ந்திருப்பாயாக; பின்னர்யாம் வந்து நின்னை மணஞ்செய்வோம்," என்றருளிச்செய்தனர். விடையூர்திபால் விடைபெற்று, அவ்வாறே அம்மையார் பர்வதராஜன் தவச்சூழலில் இளங்குழந்தை வடிவெடுத்துத் தோன்ற, மன்னன் கண்டெடுத்து மனைவி கைக்கொடுத்து மகிழ்ச்சியுடன் வளர்க்க, ஐயாண்டு சென்றளவில் அரனை மணஞ் செய்வான் வேண்டித் தனது தாதையின் அனுமதி பெற்று, இமயமலைச் சாரலிற் செய்விக்கப்பட்ட பர்ணசாலையொன்றில் தேவியார் இறைவனை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தனர்.

எம தன்னையா ரிவ்வாறு தவத்திருக்கையில் பிரம புத்திரர்களாகிய ஸநகன், ஸநந்தனன், ஸநாதனன் ஸநத் குமாரன் என்னு முனிவோர்கள் நால்வரும் வேத ஆராய்ச்சி பல செய்து முடித்தும்

அரியபல நோன்பாற்றியும் மனந் தெளியாராய், நந்திதேவ ரனுமதிபெற்றுக் கைலைமலை யடைந்து, கண்ணுதற்பரமனைத்தரிசித்து வணங்கித் தங்குறை கூற, கிருபா நிதியாகிய பெருமான் அவர்களைத் தனதருகிருத்தி, நந்திதேவரை யழைத்து மன்மதனொருவனைத்தவிர, மற்றேனையோர் யாவர் வரினும் சந்நிதானத்துள் வரவிடா தொழிக வெனக் கட்டளையிட்டு அவர்கள் விருப்பின் பாங்கர் சிவாயமங்களிற்கூறப்பட்ட உண்மைப்பொருளை ஐயந்திப்பற வுணர்த்தி வெளியிட்டனர். ஸநகனாதியர் பின்னும் சங்கரனை நோக்கி "அருட்பெருங் கடலே! காற்றி லலைபட்ட விளக்கென, அடியேங்கள் மனம் அலைபட்டு விரிந்து கிடத்தலின், அவை யொடுங்கும் வண்ணம் எங்களுக்கு ஞான பாதத்தைப் போதிக்க வேண்டும் என்று விண்ணப்பித்தனர். அதற்குப் பெருமான் இளமுறுவல்பூத்து, அதுவாக்கினாற் சொல்லலாவதன்று; அப்பொருளிவ்வாறே சும்மாவிருப்பதாகும், என்றுத் தமது திருக்கர மொன்றனைத்திருமார்பிற் சேர்த்து சின்முத்திரை காட்டி, யோகு செய்பவர்களைப் போன்று, அம்முனி சிரேஷ்டர்களுணர்ந்து கொள்ளும்படித் திருவுள்ளங் கொண்டு தாமே சிறிது பொழுது அத்தகைய நிலையினின் றுணர்த்து வித்தனர். இதனை,

"துன்றுநெடுஞ் சடைமுனிவர்க்குணர்தது மாற்றாற்
றுலங்குமொரு கர்முரத்திற் றேயச் சேர்த்தி
மூன்றகுவர் புரமெரித்த பரமன் ஞான
முத்திரையாங் குறிகாட்டி முனிவரே போல்
ஒன்றொருநுண் கணப்பொழுதி யோக மாகி
யுறைந்தனனங் கவரருள்பெற் றுய்யுமாறு"

எனவருங் கந்த புராணச் சுருக்கச் செய்யுளானுணர்க. இதனையே நம் தாயுமானவரும்,

"கல்லாலி னீழறனி லொருநால் வர்க்குங்
கடவுணீ புணர்த்துவதுங் கைகாட் டென்றாற்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றி கடல்கடக்குந் துணிபே யன்றோ"

என்று கூறியிருத்தல் காண்க. எல்லாம் வல்ல இறைவன் அம்முனிவர்களுக் கிவ்வாறு யோக நிலையையுணர்த்த, அதனாலவர்கள் நால்வரும் மனமொடுங்கி ஞானநிலை யுணர்ந்து பேரின்ப வெள்ளப்பெருக்கிலாழ்ந்து அரன் முகத்தை நோக்கியபடியே யிருந்து சிவஞானங் கைகூடப்பெற்று, மனோ வாக்குக் கருவி கரண மோய்ந்து செயலற்ற நிலையிலிருந்து சிவனோடிரண்டறக் கலந்தன ரென்பது சரித்திரம், இதனை.

"ஆன்றநாற் சனக னாதி நால்வரு மரன் முகத்தை
மூன்றரை கோடி கற்பம் பார்த்தபின் முத்தரானார்"
எனவரும் முதியோர் வாக்கானுணர்க.

இப்படி இறைவன் முனிவர்கள் பொருட்டு யோகு செய்திருந்த ஒரு கணப்பொழுதானது திருமால் பிரமன் முதலிய தேவர்கட்கு அநேக யுகங்களாயிற்று. பூவுலகில் மானிடர்களுக்கான கால அளவோ கணிக்கலாந் தன்மைத்தன்று. இந்த காலையிற்றான் சூரபதுமனது கொடிய ஆட்சியானது நடந்து கொண்டுவந்தது. அதனால் மெலிவுற்ற தேவர்கள் இறைவன் யோக நிலையினின்று நீங்கி மலைமகளை மணக்குமாறு மன்மதனை யரன்பால் விடுப்ப, அவன் பஞ்ச புஷ்பபாணங்களை ஐயன் மேலெய்ய, நெற்றி விழித்தீயால் நீறாயினன். அதுகண்டு இரதி தேவிபுலம்ப, சிவபெருமான் உமாதேவியாரை மணந்த திருக்கல்யாண மகோற்சவ காலத்தில் மன்மதனை யெழுப்பித்தந்தனர். பின்னர் முருகக் கடவுள் தோன்றி சூரசம்மாரஞ் செய்து, தேவர் துயரகற்றினர் என்பது பின் சரிதை. சுகராதி மகரிஷிகள் பலரும் மேற்கூறிய தக்ஷிணாமூர்த்தியை வழிபட்டு ஞானபோத மமைந்ததாகப் பல சரித்திரங்கள் காணப்படுகின்றன. ஆதலின் இறைவன் தம்மை யடைந்த சத்தாத்துமாக்களின் பவப்பிணி யொழித்து ஞானபோதம் நல்கிப்பொன்றாப் பெருவாழ் வளிக்கிறான் என்பதும், யோக மார்க்கத்தன்றி யெளிதில் முத்தி சித்திக்கா தென்பதும், இம்மூர்த்தத்தால் நாம் அறிந்து கொள்ளக்கூடிய முக்கிய விஷயம். ஆதலின் யாவரும் இம்மூர்த்தத்தை பக்தி, சிரத்தை வைராக்கியத்தோடு வணங்கி வழிபட்டு ஆன்மப் பேறடைவார்களாக. சுபம்.

(தொடரும்)


13 A.

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புதுமாடல்

கைக்கெடியாரங்கள்.




இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம். ரு. 4-15-0 வி. பி. வேறு.

ஜினைன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.




## ஒழுக்கப் பகுதி

# தூய உணவும், ஒழுக்க மேம்பாடும்

திரு. ஆ. வே. முத்தைய முதலியார் பி. ஏ., பி. எல்., புதுவை.

மானிட வாழ்க்கை இனிது நடைபெறவும், மனிதப்பிறவியினாலாக வேண்டிய வேலை முற்றுப் பெறவும், அதற்கு மேலாயதோர் நிலையை அடைவதற்காகவும், அமைந்துள்ள அல்லது அமைத்துக் கொள்ளும் வழியே ஒழுக்கம் என்பதாகக் குறிப்பிட்டு சிறு வியாச மொன்று நமது மித்திரன் தொகுதி ௩, பகுதி ௪ல் (சுக்கில சித்திரை) வெளிவந்தது. அதன் தொடர்பாக பின் வரும் விஷயங்கள் கவனிக்கற்பாலன.

வாழ்க்கை இனிது நடைபெறுவதென்றால் தூலமாக நமதுடலும் அதனுள்ளீடுபட்டிருக்கும் உயிரும் இன்பம் நுகர வேண்டு மென்று சொன்னோம். எனவே, உடல் நலனை நாம் பெரிதும் கவனித்தல் வேண்டும். உடல் நலத்திற்கு இன்றியமையாத மித உணவு, தூய உணவு, சுத்த பானம் இவைகளைக் கொள்ளவும் - அதிக உண்டி, அன்னிய பதார்த்தங்கள், மதுபானம், மயக்கந் தரக்கூடிய பொருள்கள் இவைகளைத் தள்ளவும் வேண்டும்.

இதில் மித உணவு என்றால் அவரவர்கள் தேகத்திற்குத் தக்கபடி மிதமேயன்றி எல்லோருக்கும் ஒரேபடித்தாய் அளவு குறித்த லியலாத காரியம். குறித்தாலும் அந்த அளவு சிலருக்கு மிதமாயும், சிலருக்கு குறைவாயும், பலருக்கு அதிகமாயும் இருக்கும். ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் தேக நிலையை நன்குணர்ந்து உட்கொள்ளும் உணவானது இரைப்பையை அதிகமாக கனப்படுத்தியும் அதிக வேலை செய்யும்படியும் ஆக்காத அளவிலிருக்க வேண்டும். நமது உள் அவயவங்களும் தூல முறையில் இயந்திரங்களேயாகும். இயந்திரங்களை அதிகமாக ஓட்டுவதாலும், அதிக நேரம் நடக்க வைப்பதாலும், அவைகளுக்குப் பழுதுகளேற்படுகின்றன வென்பதை நாம் உணருகிறோம். நமது சொந்தமாய், நம்முள்ளேயே நடந்துக் கொண்டிருக்கும் அதிசயமான, நுட்பமான இயந்திரங்களாகிற தீனிப்பை, ஈரல்கள், குடல்கள், இதயம் முதலியவைகளுக்கும் அசாக்கிரதையால், அதிக வேலையால் பழுதுகள் உண்டாகின்றன வென்பதை மாத்திரம் நாம் உணராதிருப்பது கண் மூடித் தனமல்லவோ?

எனவே மித உணவு நமது தேக நலனுக்கு அவசியம். அதுபோலவே தூய உணவும். தூய உணவென்றால் நமது இரத்தத்தில் கலப்பதாலும், மூளையில் பரவுவதாலும், நரம்புகளில் அமைவதாலும் தேகத்திற்கு சுக உணர்ச்சி, சுறுசுறுப்பு, ஊக்கம் இவைகளை உண்டுபண்ணக் கூடிய உணவென்பதேயாகும். இங்கும் குறிப்பிடவேண்டியதொன்றுண்டு. தூய உணவுகளெனப் பொதுவாக நூல்களில் வகுக்கப்பட்டவைகளிலும் வித்தியாசங்களுண்டு. அவரவர்கள் தேகங்களுக்குத் தக்கவாறு, சில நன்மை தரக்கூடியனவாயும், சில பிரயோஜன மற்றனவாயுமிருக்கு மென்பதைக் கண்டு கொள்வதவசியம். எல்லோருக்கும் ஒரே மாதிரியான உடம்பும், உறுப்புகளும், நரம்புத்தாரைகளும் இல்லை யென்பது வெளிப்படையான உண்மை. சீதோஷ்ணம், அலைச்சல் முதலியவைகளை யெல்லோராலும் ஒரே வகையாகத் தாங்கும் ஆற்றலில்லை. சில தேகங்கள் எவ்வளவு தூல வேலையையும் செய்யும், மூளை வேலை சிறிதாயினும் அவைகளுக்குக் களைப்பைக் கொடுக்கும். வேறு தேகங்களுக்கு மூளை வேலை யாதொரு களைப்பையும் கொடாது. தூல வேலையைச் செய்வதென்றால் முடியவே முடியாது. ஆகையாற்றான் ஒவ்வொரு தேகத்திற்கும் ஒத்ததான தூய உணவைத் தெரிந்து கொண்டு அவ்வுணவையும் மிதமாகக் கொண்டால் உடல் நலம் குன்றாது, நோய் வாய்ப்பட மாட்டோம். அதுபோலவே நாம் கொள்ளும் பானம், நீர், தூயதாயும், மிதமாயு மிருக்க வேண்டும். நமக்கு நோயுண்டாவதற்குக் காரணம் முக்கியமாக உணவின், பானத்தின் தகராறுகள் தான்.

உடலுக்கு சோம்பல், அசதி, நரம்புக் கிளர்ச்சி, மயக்கம், இவைகளை உண்டு பண்ணும் உணவுகளை நீக்க வேண்டு மென்பது மேற் சொன்ன நியாயங்களாலேயே யேற்படுகிறது.

அன்றியும் தூல தேகத்திற்கும் நுண்ணிய தேகமாகிய மனதிற்கும் அன்னியோன்னிய மிருப்பதால் தூல உணவின் சாரத்தால் மனதும், மனதின் விகாரத்தால் தூல தேகமும் மாறி நிற்பது கவனிக்கற்பாலது. வெகுதூரம் சுற்றி வந்து வியர்வை, அழுக்கு நிறைந்த தேகத்தை தூய நீரால் கழுவியவுடன் மனதும் ஒருவித அமைதியை அடைகிறதை நாம் உணர்கிறோம். இக்கருத்தைப் பற்றியே இறைவனை வழிபடுவதற்கு முன் தேக சுத்தி முதலிய வெளியேற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதுபோலவே நமது மனதில் பெரியதோர் குழப்பம் ஏற்பட்டிருந்தால், அந்த சமயம் நாம் எவ்வளவுதான் தேகத்தைச் சுத்தப் படுத்தினாலும், மனது நிலைப்படுவதில்லை; தேகமும் அமைதிப் படுகிறதில்லை; தேகத்தில் சுக உணர்ச்சி யேற்படுகிறதில்லை. மனது குழப்பமின்றி நிற்கும்போது தான் இந்த தூலசூக்கும பரஸ்பரம் நமக்கு நன்கு புலப்படுகிறது. இக்காரணம் பற்றி, தூல தேகத்திற்கு மித உணவு, தூய உணவு, மிதபானம், தூய பானம் இவைகள் இன்றியமையாததாயினும், மன அமைதியும் இன்றியமையாததே. இவ்விரண்டும் கைகூடி வந்தால் தான்

இவ்விரண்டையும் சாதித்துக் கொண்டால் தான், உடலும் மனமும் சேர்ந்து இன்பமனுபவிக்கலாம். இவ்வின்பமே இவ்வுலகின் உண்மையின்பமாகும். தனியாக உடலும் மனதும் அனுபவிக்கும், அனுபவிக்கக் கூடிய, இன்பமானது சிறு இன்பமேயாகும் தனித் தேக வின்பத்தினல் மனதிற்கும், தனி மனோவின்பத்தினல் உடலுக்கும் இன்னல் விளையக் கூடியதென்பதை, யோக முறைகளில் ஈடுபட்டு நவிப்பட்டவர்களால் தெரிந்து கொள்ளக் கிடக்கிறது.

இதன் மூலமாக நாம் உணர வேண்டியது, தேக நிலையும், மனோ நிலையும் ஒத்து நிற்றலே இன்பத்திற்கு ஊற்று என்பதேயாகும். இந்த உண்மை இதோடு நில்லாமல் இன்னும் எல்லா விபகாரங்களுக்கும், எல்லா விஷயங்களுக்கும் பொருந்தி நிற்கு மென்பதைக் காணலாம். ஒற்றுமையே இன்பம் பயக்கக்கூடியது. இந்த ஒற்றுமையே உயிர் விபகாரங்களில் ஒருமை யென்பதாகக் கூறப்படுவதும்

உடம்பிற்கும் மனதிற்கும் ஒற்றுமையை யேற்படுத்துவதே எல்லா ஒழுக்க நூல்களின் உட் கருத்து. ஆனல் அந்த ஒழுக்க நூல்களின் கருத்தை விட்டு, எழுத்தை மாத்திரம், எடுத்துக் கொண்டு, காலதேச நிலைகளுக் கொத்த வண்ணம் ஒழுக்கத்தின் வெளித்தோற்றங்கள், ஒழுக்க நியதிகள் மாறி வரும், மாறவேண்டு மென்பதை யுணராததால், விபரீத உணர்ச்சிகளேற்பட்டு, சச்சரவுகளுக்கும், எண்ணங்களுக்கும் இட முண்டாகி விட்டது.

இது வரையில் உடம்பின் உணவை, பானத்தைப்பற்றிப் பொதுவாகச் சொன்னேம். மனதின் அமைதியைக் குறிப்பிட்டோம். அம்மனதின் அமைதியானது எவ்வகையாக அமையக் கூடியது? மனதிற்கும் மிதமான, தூய உணவு உண்டோ? அசுத்த உணவு இல்லையோ? வென்பதை இனி விசாரிப்போம்.


## மகா நாட்டு மலர்.

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு **8** தபாற் செலவு அணு **3**

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.


நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்களா? இல்லையாயின், உடனே உங்கள் சந்தாவை அனுப்பி விட்டு ஒவ்வொருவரும் இயன்ற அளவு புதிய சந்தாக்களைச் சேர்த்தனுப்புங்கள்.



# செங்குந்த யாத்திரை வாசி

## செங்குந்தர் வரலாறு.

தொகுதி 3, 464-ம் பக்கத்தொடர்ச்சி

'எனதன்பிற்குரிய சகோதரர்களே! இப்போது மணி 7-30 ஆகிறது; இன்னும் உங்களை காக்க வைத்திருப்பது தகுதியல்ல. ஆகையால் விஷயத்தைச் சுருக்கமாகவே சொல்லுகிறேன். நம் முன்னோரது வரலாற்றைச் சரித்திர ஆராய்ச்சி முறையில் கூறுங்கால் அது புராணங்களில் கூறும் வரலாற்றிற்குச் சிறிது மாறுபட்டேயிருக்கும். அதனல் நீங்கள் தப்பு அபிப்பிராயங் கொள்ளலாகாது. புராணக் கூற்றை ஈண்டு யானும் கூறின் அது சரித்திர ஆராய்ச்சியாகாது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் மறை மொழியை உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். இங்குள்ளோர் பக்குவத்தை நோக்கி இரண்டொரு மாறுபாடுகளை விட்டு விடுகின்றேன்.

சரித்திரம் எழுதும் வழக்கமில்லாத ஒரு நாட்டிலுள்ள ஒரு சமூகத்தின் வரலாற்றைச் சரித்திர முறையில் கூறுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பழைய தமிழ் நூல்கள், பாரம் பரியங்கள், கல்வெட்டுகள் முதலியவற்றையே ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து சரித்திரத்தை ஒருவாறு தயாரிக்க வேண்டும். யான் இதற்கென ஆராய்ச்சி செய்தவனல்ல. தமிழிலக்கணமுடையார் முதல் மாணுக்கனை அன்னத்திற் கொப்பிட்டிருப்பது ஈண்டு கவனிக்கத் தக்கது.

தமிழ் நாட்டுப்பண்டைய நூல்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலியவை அக்காலத்திலிருந்த வேளாளர், பாணர், முதலிய பல்வினத்தவரது பெயர், தொழில் முதலியவற்றைக் குறித்துக் கூறுகின்றன. தமிழகத்தில் அக்காலத்து நெசவுத் தொழிற்காரர்கள் இருந்திருக்கிறார்கள் என்று மாத்திரம் தெரிகிறதே தவிர நம் மரபைக் குறிக்கும் கைக்கோளர், செங்குந்தர் என்ற பெயர்கள் அவற்றுள் காணப்படவில்லை. இதனல் சங்க நூல்கள் செய்யப்பட்ட காலத்தில் செங்குந்தர்கள் தமிழகத்தில் இருந்தார்கள் என்று சொல்லக்கூடவில்லை. அவ்வாறாயின் நம் குலத்தைப்பற்றிக்கூறும் பழைய நூல்கள் எவை எனில் கந்தபுராணமும், ஈட்டி எழுபதுமே என்னலாம். ஈண்டு உங்களுக்குக் கூறவிரும்பும் விஷயமொன்று உண்டு. அதாவது நமது குல சிகாமணியாகிய கவிச் சக்கரவர்த்தியாரை, ஒப்புயர்வற்ற புலவர் என்றும், ராஜ தந்திரி என்றும் கூறக் கேட்டுள்ளோம். அப்பெரும் புலவரை யான் ஒரு சரித்திர நிபுணரென்றும் கூறுகிறேன். கூத்தர் பிரானே முதல் முதலாக நம்குல வரலாற்றை ஆதியோடந்தமாய்த் தெளிவாக ஒழுங்குற தமது தெய்வீக நூலாகிய ஈட்டி எழுபதில் எடுத்துக் காட்டியவர். பின்னர் தோன்றிய பிள்ளைத் தமிழ், திருக்கை வழக்கம் முதலிய பிரபந்தங்களுக்கும் ஆதாரமாயிருப்பவை மேற்கூறிய இரு நூல்களேயாம். ஒருக்கால் நம் முன்னோர்கள் சங்க நூல்கள் செய்யப்பட்ட காலத்தில் இருந்தார்கள் என்று ஒப்புக்கொண்டாலும் அவர்களுக்கு அக்காலத்தில் தொழிலாக இருந்தது நெசவல்ல வென்பதையும், மிகச் சிறு தொகையினராகவே இருந்திருக்க வேண்டு மென்பதையும் மறுக்க முடியாதென்றே சொல்லலாம்.

சரித்திர ஆராய்ச்சிப்படி பொதுவாக இமசேது பரியந்தமுள்ள நமது தேசத்திலும், சிறப்பாக விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள தென்னிந்தியாவிலும் ஆதியில் குடியிருந்து வந்த மக்கள் தமிழர்களேயாவர். பல்லாயிர வருஷங்களுக்கு முன்னர் வட தேசங்களிலிருந்து ஆரியர் முதலிய பல வகுப்பினர் கூட்டங் கூட்டமாகக் கைபர், போலன் கணவாய்களின் மூலமாகவும், திபேத்து, மங்கோலியா, தேசங்களிலிருந்து குளிர் நிறைந்த இமயமலையின் தாழ்ந்தப் பிரதேசங்கள் மூலமாகவும் வந்து, சிந்து, கங்கை, முதலிய நதிகள் சூழ்ந்த பிரதேசங்களில் குடியேறினர். பின்னரும் பாரசீகர், சித்தியர், மகம்மதியர் முதலியவர்களும் இந்தியாவின் செழிப்பையும், செல்வத்தையும் பற்றிக் கேள்விப்பட்டு சிலர் சாதாரணக் குடியேறுங் கூட்டங்களாகவும், மற்றுஞ் சிலர் படையெடுத்துப் போர் செய்து வென்றும் வந்து சேர்ந்தனர். பல்வகைப்பட்ட நாகரீகங்களையும், பாஷைகளையும், மதக்கொள்கைகளையும், உடையவர்கள் இவ்வாறு வந்து சேர்ந்ததனல் தமிழ் மக்களது நாகரீகம், மதக்கொள்கை, முதலியவை பெரிதும் மாறுபாடடைந்தன. கடலும், மலையும் இயற்கை அரணுக அமைந்துள்ள இந்து தேசத்தில் வெளிநாட்டவர் இவ்வளவு சுலபமாக உட்புகுவதற்குக் காரணங்கள் இல்லாமற் போகவில்லை. சுருங்கக் கூறின், அதிக உஷ்ணத்தாலும், அநேக ஜீவநதிகளுண்மையால் வளம் பெருகி ஜீவாதாரமான தானியங்கள் பெரு முயற்சியின்றிக் கிடைத்தலினல் உண்டான கவலையின்மையாலும் அக்காலத்திய இந்நாட்டு மக்கள் மேற்கூறிய காரணங்களில்லாத வெளி நாட்டவரைக் காட்டிலும் உடல் வலிமை குன்றி இருந்தனர். அன்றியும் ஒரு சிலர் தவிர மற்றையோர் இங்கு படைவீரராகப் பயிலுவதில்லை. இக்காரணங்களால் உடல் வலிமை மிகுதியும் உடைய வெளிநாட்டவர் சுலபமாக உட்புகுந்தனர். இதனல் இந்நாட்டவரைக் காட்டிலும் வடக்கேயுள்ள குளிர் நாட்டு மக்கள் மிக்க வல்லமை யுள்ளவர்களாயிருந்தார்கள் என்று விளங்குகின்றது.

இனி நம்குல முதல்வர்களாகிய ஒப்புயர்வற்ற நவவீரர்களது வரலாற்றைக் குறித்து ஆராய்வோம். கந்தபுராணமும், ஈட்டி எழுபதும் நம்குல தெய்வமாகிய ஸ்ரீ ஆறுமுகப்பெருமானும், அவரது துணைவராகிய நவவீரர்களும் கைலேயங்கிரியில் அவதரித்ததாகக் கூறுகிற்கும் (ஈண்டு முருகப்பெருமானது அவதாரத்தைப்பற்றிக் கூறும் தத்துவார்த்தங்களைப் பற்றியாவது, உட்கருத்துக்களைப்பற்றியாவது யான் எடுத்துக்கொள்ளவில்லை. அவற்றை மற்றொரு சமயம் ஆராய்வோம்) கைலேயங்கிரியானது இமயமலையின் வடசாரலில் இருக்கிறது. அப்பிரதேசங்களில் இன்னும் அநேக மகரிஷிகளும் மகாத்மாக்களும் தவஞ்செய்து கொண்டிருப்பதாக கருதப்படுகிறது. அம்மலை வெண்ணிறமுடையதே. அது தெய்வீகம் பொருந்தியது என்பதிற் சந்தேகமேயில்லை. எல்லாமாய் அல்லவுமாய் விளங்கும்சிவ பரம்பொருளின் அருட்திறத்தையும்,சர்வவல்லமையையும் உள்ளங்கைநெல்லிக்கனியெனக் காட்டக்கூடிய இடம் அதுவே என்பதில் ஐயமில்லை. அங்கு அவதரித்த நவவீரரது பேராண்மை, இணையற்ற வீரம், பேராற்றல் முதலியவற்றைக் குறித்து ஐயங்கொள்ள வேண்டியதுமில்லை. மிகத்தாழ்ந்து, நிலைகுலைந்து, சீர்கேடுற்றிருக்கும் இக்காலத்திலும் நம்மவர்கள் தெய்வ பக்தியையும், அடியார்க்குத் தொண்டாற்றலையும் கைவிட்டாரில்லை யென்றால் நம்முன்னோர்களாகிய வீரர்களின் தெய்வ பக்தியைக் குறித்து சந்தேகிக்கவும் இடமுண்டோ ?

ஸ்ரீ ஆறுமுகப்பெருமான் தம்பியரோடு எழுந்தருளி யிருப்பது வடக்கிலுள்ள இமயமலையின் வடக்கிலிருக்கும் கைலையங்கிரியிலேயே என்பது கந்தபுராணம் முருகப்பெருமான், சூரபதுமனோடு போர்செய்ய வருங்கால் காசி, ஸ்ரீ சைலம், வேங்கடம், காளத்தி, ஆலங்காடு, கச்சி, சேய்ஞலூர் முதலிய தலங்களைக் கடந்து திருச்சீரலைவாய் அடைந்தார் எனக் கூறுதலால் விளங்குகிறது. முன்னர் கூறியபடி குளிர் மிகுந்த வட இமயமலைப் பிரதேசத்திலிருந்து வந்த நவவீரர்கள் அழகிய வெண்ணிறமும், ஆண்மையும், வீரமும், ஊக்கமும் பொருந்தியவர்களாகவே இருந்திருக்கவேண்டும். பண்டைய காலத்து அரசர்கள் பிரசித்திபெற்ற சேனைத் தலைவர்களையும், போர்வீரர்களையும் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துத் தம் சேனைகளைப் பலப்படுத்திக்கொள்வது வழக்கம். இவ்வழக்கம் தற்காலத்திலும் இருந்து வருவது நாம் உணராததல்ல. ஆகவே நவவீரரின் பேராற்றலை புணர்ந்த முசுமுகச் சோழன் என்பான், அன்னாரை வேண்டிக் கொணர்ந்து சேனைத்தலைவராக்கிப் பல நாடுகளையும் வென்று செங்கோலோச்சினன். குந்தமென்னும் ஈட்டியினைத் தமது சிறப்பாயுதமாகக் கொண்ட செங்குந்தவீரர்களைப் படைத் துணைவராகக்கொண்டு பகை நீக்கி அரசாண்டமையின் அதுமுதல் முசுமுகன் என்னும் அவ்வரசனது பெயர் முசுகுந்தன் என வழங்கலாயிற்று.

ஒரு சாரார் நவவீரர்களைச் சகோதரர்கள் என்றும், மற்றொரு சாரார் ஒரே இனத்தைச் சார்ந்த வீரர்கள் ஒன்றிய மனமுடையவராய் சகோதரப் பான்மை பூண்டு இருந்தவர்கள் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வாறு பண்டு சகோதரப் பான்மை பூண்டு பல சிறு கூட்டத்தவர் அநேக நாடுகளைச் ஜெயித்து ராஜ்ஜியங்களும் ஸ்தாபித்து ஆண்டதாக சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர். சோழனது படைத் துணைவராக வரவழைக்கப் பெற்ற நம் மூதாதையர் சோழ அரச குடும்பங்களிலேயே மணம் செய்து கொண்டார்கள். இவர்கள் கைலாயத்திலிருந்து வந்தவர்களானபடியாலும், முருகவேளைச் சகோதரராகப் பாவித்தவர்களான படியாலும் சைவசமயிகளே என்பதை யாரும் மறுக்க இயலாது. உலகத்தில் ஜனத்தொகை சொற்பமாக இருந்த அக்காலத்தில் மக்கள் அனைவரும் பல சிற்சிறு கூட்டங்களாக ஆங்காங்கு வசித்து வந்தார்கள். ஒவ்வொரு கூட்டத்தவரும் பெரும்பாலும் தத்தமக்குரிய தேவதைகளை அல்லது ஒரே கொள்கை யுடையவராயினும், தம் ஆத்மார்த்த மூர்த்தங்களை ஆராதித்து வந்தார்கள். (இதை விரிக்கிற் பெருகும்) அத்தகையினர் தங்கள் குடியேற்ற நாட்டிலும் அவற்றின் வழிபாட்டினைப் பரப்ப முயன்று வந்தனர். அன்னவருள் நடராஜ மூர்த்த வழிபாட்டினை நமது தமிழகத்தில் பரவச்செய்த தில்லைமூவாயிரவரும் ஒரு கூட்டத்தாராவர்.

வீரவாகாதிய பெரியோர்கள் ஐம் முகச்சிவத்தையும், அறுமுகச்சிவத்தையும், வழிபட்டு வந்தவராயினும், வடநாட்டு மன்னன் ஒருவனால் ஆத்மார்த்தமாக வைத்து பூஜிக்கப்பட்டு வந்த தியாகராஜ மூர்த்தத்தினிடத்து அத்தியந்த பக்தி யுடையவர்கள். ஆகையால் இவர்கள் சோழநாட்டிற்கு வந்த பிறகும் அதனை மறந்தாரில்லை. அம்மன்னவன் தனது பகைவனை வெல்லும் பொருட்டு இவர்கள் உதவியை நாடிய காலத்து அப்பகை களைந்து அவனிடமிருந்த தியாகராஜ மூர்த்தியைப் பரிசாகப் பெற்று திருவாரூர் முதலிய சோணாட்டுத்தலங்களில் வைத்து வணங்கி வரலாயினர்.

பின்னர் இம்மகாவீரர்கள் வழித் தோன்றிய செங்குந்தர்களும் சோழர்களுக்குப் படைத்துணைவராகவே இருந்து வந்தனர். நாளடைவில் ஜனத்தொகை பெருகியபோது பல நாடுகளிலும் குடியேறிய குந்தர்கள் சிதைந்தும், பிற இனத்தவரோடு கலந்தும் போகாதபடியும், நல்லொழுக்கம் சைவாச்சாரம், முதலிய நன்னெறிகளினின்று பிறழ்ந்து போகா வண்ணமும் கருதி நாடு வகுத்து கட்டு திட்டங்களை ஏற்படுத்தி வைத்தனர். நாட்டுத் திட்டங்களைப்பற்றி உங்களுக்கு விளக்கிக் கூற வேண்டியதில்லை. நாடு வகுத்தகாலம் ஆயிர வருஷங்களுக்கு மேற்பட்டிராதென்றே கருதுகிறேன். நமது வரலாற்றிற்கு ஆதாரநூல்களுள் ஒன்றாகிய ஈட்டி எழுபது என்னும் தெய்வீகப் பிரபந்தத்தில் நமது நாட்டு விவரங்களைப்பற்றியாவது நாம் பிரதான ஸ்தானமாகக் கருதிவரும் மாகாநாட்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)






## சூரிய மண்டலம்

திரு. ஒ. சிங்காரவேலு

### நமது பூமியின் தமக்கை தங்கைமார் அவைகளில் ஜீவனுண்டோ?

நாம் வாழும் இந்தப் பூமியைத் தவிர பல பூமிகள் ஆகாயத்தில் உலாவுகிறதை வான சாஸ்திரிகள் கண்டு பிடித்து வருகிறார்கள். நமது பூமியைப் போன்று சூரியனைச் சுற்றியோடும் கிரகங்கள் ஒன்பது இருக்கின்றன. இவை யாவும், மேக ரூப சித்தாந்தப்படி, சூரியனிடமிருந்து பிரிந்து வந்தவை. இவைகளில், மெற்குறி, வீனஸ் இவை பூமிக்குட்புறமும், மார்ஸ், அஸ்டிராய்டஸ், ஜூபிடர், ஸாடர்ன், யுரானஸ், நெப்டியூன் ஆகிய பூமிக்கு வெளிப்புறமும் ஓடுகின்றன. இந்தக் கிரகங்கள் சூரியனைச் சுற்றி ஓடுகின்றன. இந்த நவக்கிரகங்களைச் சுற்றிச் சில சந்திரர்கள் ஓடுகிறார்கள். நமது பூமியைச் சுற்றி 27 நாட்களுக்குள் ஓடி வரும் சந்திரனைப் போல, மார்ஸைச் சுற்றி இரண்டு சந்திரர்களும், ஜூபிடரைச் சுற்றி 8 சந்திரர்களும், ஸாடர்னைச் சுற்றி 9 சந்திரர்களும், இதற்கப்பாலுள்ள நெப்டியூன், யூரேனஸ்களைச் சுற்றி 4-ம், 1-ம் ஓடுகின்றன. இவைகளுடன் காலா காலங்களில் சூரியனைச் சுற்றி வரும் தூமகேதுக் களுமுண்டு. இவைகளன்றி, கோடானு கோடி "மீடியார்ஸ்" எனப்படும் எரி நட்சத்திரங்களுமுண்டு. இவையனைத்தும் நமது சூரிய மண்டலத்தைச் சேர்ந்தவை. பல ஆண்டுகளாக உண்டாயிருக்கும் சங்கை ஒன்று. அதாவது. இந்தச் சூரிய மண்டலத்தைச் சேர்ந்த உலகங்களில், நம்மைப் போன்ற அல்லது நமக்குக் கீழ்த்தரமான உயிர்கள் உண்டாகவாவது, வாழவாவது இடமுண்டா ? சென்ற நூறு வருஷங்களாக, இவ்வுலகங்களைப்பற்றித் தூரதிருஷ்டிக் கண்ணாடியாலும், இன்னும் பலவித நுட்பமான கருவிகளாலும், விசேஷ விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன. இந்த உலகங்களில் சில, நமது பூமியைவிடச் சிறியவையாயும், மற்றுஞ் சில பெரியவையாயும் இருக்கின்றன. இவைகளின் அளவு பின் வருமாறு:—

| | |
|---|---|
| மெற்குறி | ...ஒரு பட்டாணிப்பயிர். |
| வீனஸ் | ...ஓர் அங்குலப் பந்து. |
| பூமி | ...ஓர் அங்குலப் பந்து. |
| மார்ஸ் | ...அரை அங்குல கோலி குண்டு. |
| ஆஸ்டிராய்டஸ் | ...நெல் விதைகள். |
| ஜூபிடர் | ...11 அங்குலப்பந்து. |
| சனி அதாவது ஸாடர்ன் | ...9 அங்குலப் பந்து. |
| யுரானஸ் | ...4 அங்குலப் பந்து. |
| நெப்டியூன் | ...5 அங்குலப் பந்து. |
| சூரியன் | ...30 அடி வட்டம். |
| சந்திரன் | ...ஒருசிறிய பட்டாணிப் பயிர் |

### உயிர் வாழ்க்கை.

இவைகளில் உயிர்கள் வாழ முடியுமா ? இரண்டொரு வான சாஸ்திரிகள், சிலவற்றில் மாத்திரம் உயிர் வாழக்கூடும்; மற்றவைகளில் வாழமுடியாது என்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

சூரியனில், நமக்குத் தெரிந்த உயிர்கள் உண்டாவதற்காவது, வாழ்வதற்காவது முடியாது. அஃது அளவுக்கெட்டாத ஒரு பெரு நெருப்பு. அதன் தீட்சண்யத்தில், லோகங்கள் யாவும் காற்று மயமாவதுடன், பரமாணுக்களாக மாறிவிடும். இந்தப் பிரசண்டத்தீயில் எந்த உயிர் உண்டாகக்கூடும் ? முடியாது.

---

செங்குந்தர் வரலாறு 10-ம் பக்கத் தொடர்ச்சி.

டைப் பற்றியாவது ஒரு பிரஸ்தாபமும் இல்லை. பெரும்பாலும் சோழ நாட்டுத் தலங்களின் பெயர்களையே அந்நூலில் காண்கின்றோம். இதனால் ஈட்டி எழுபது நாடுவகுக்குமுன் செய்யப்பெற்றதென்று சிலர் கருதுகின்றனர். ஆனால் குடி மேன்மையைக் கூறும் தமிழ் பிரபந்தம் பெறுதற் பொருட்டு ஒரு நாடு நீங்கலாக 71 நாட்டவரும் தலை கொடுத்தனர் என்பது இந்நூல் சம்பந்தமான கதையாகலின் அப்போது நாடு வகுக்கப்படவில்லை யென்று சொல்லவும் கூடவில்லை. ஆகவே இது பொறுமையாய் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டிய ஒரு விஷயமாகும்.

சந்திரனில் காற்றில்லை; தண்ணீரில்லை. 13½ நாள் ஒரே வெய்யில்; 13½ நாள் ஒரே இரவு. தீயும் குளிரும் பொறுக்க முடியாதவை. இங்கேயும் உயிர்வாழ இடமில்லை. மெர்குறியில், சந்திரனைப் போல் அதிகக் குளிரும், தீட்சண்யமும் சகிக்க முடியாதவை. 44 நாள் வெய்யில்; 44 நாள் இருள். மேலும் இது சூரியனுக்கு அருகாமையில் இருக்கின்றது.

வீனஸ் கிரகத்தில், ஒரு வேளை சிறுமீன்கள் வாழ்ந்தாலும் வாழக்கூடும். இதைத்தான் "காலை வெள்ளி" "மாலை வெள்ளி" என்று கூறுவர். நமது பூமியைப்போல் இரவும் பகலும் இதில் உண்டென்று ஊகிக்கிறார்கள்.

மார்ஸைப்பற்றி வான சாஸ்திரிகள் பல அபிப்பிராய முடையவர்களாக இருக்கிறார்கள்; அதில் காற்று, மேகம், நீர் ஆகிய இவை இருப்பதாகவும், வடகோடி, தென்கோடிகளில் பனிக்கட்டி ரூபம் போல் காணப்படுவதாகவும், சில வேளைகளில் அதன் வர்ணம் மஞ்சளாக மாறுவதால், கோடை, மழை காலங்களை அதில் காணலாமென்றும் ஊகிக்கிறார்கள். கோடை காலங்களில் "கெனல்" நீர் கால்வாயைப் போன்ற தோற்றங்களைக் காண்பதால், நம்மை விட அறிவிற் சிறந்த மக்கள் இருக்கக் கூடுமென்பர். இதை நமது பூமிக்குத் தமக்கை என்று சொல்லக்கூடும். பூமியை விடச் சிறியதாயினும், அதற்கு முந்திப் பிறந்தது. மேகமும் காற்றும் அதிகமில்லை யெனத் தோன்றுகிறது. காலத்தில் நமதுலகுக்கும் இதே கதி மோட்சந் தான். நாளடைவில் காற்றும் தண்ணீரும் குறைந்து வரும். அதற்கேற்றபடி நாம் வாழ முடியுமோ, முடியாதோ? அது தெரியாது

மற்றக் கிரகங்கள் யாவும் தீட்சண்யமாயும், ஆவி ரூபமாயும் இருந்து வருகின்றபடியால் அவைகளில் ஜீவன் வாழ இடமிராது. நமது பூமியைத் தவிர மற்ற உலகங்களில் ஜீவர்கள் வசிக்கலாமென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. இவ்வுலகங்கள் இவ்விதமிருக்கப் பிரபஞ்சத்தில், நமது உலகின் தானா நம்மைப்போன்ற உயிர்கள் வாழ இடமிருந்தது? நமக்குத் தெரியும் பிரபஞ்சத்தில், சுமார் எட்டு கோடி சூரியர்கள் வானத்தில் பிரகாசிக்கிறார்கள். அவர்களைச்சுற்றி நமது சூரிய மண்டலத்தில் கிரகங்கள் ஓடுவதைப் போல், இந்தக் கோடானு கோடி சூரியர்களைச் சுற்றி வேறு கிரகங்கள் ஓடுகின்றனவா? இது தெரியாது. வான சாஸ்திரிகளில் பிரபல சாஸ்திரியாகிய ஜீனஸ் பெரியார், நமது சூரிய மண்டலத்தில் உண்டாகிய காட்சியைப் போல் மற்ற இடங்களில் உண்டாக்குவதற்கு முகாந்திரங்கள் ஆகாயத்தில் குறைவாக இருப்பதாகவும், அப்படியாக உயிர் உண்டாக இடமேற்பட்டால், அது ஏகதேசமென்றும் குறிப்பிக்கிறார்.

ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு 13 புதிய அரசாங்கங்கள் தோன்றி யிருக்கின்றன.

---


## ஸ்ரீலோலன்

(ஓர் இனிய துப்பறியும் நாவல்)

எளிய நடை! இனிய உரை!

மற்ற நாவல்களைப்போலன்றி

நன்னீதிகளைப் புகட்டுவது.

இன்றே வாங்கிப் படியுங்கள்.

விலை ரூ. 1-4-0.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை,

(9)F பவழக்காரத் தெரு, சென்னை.



## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல் ஹால், சத்தியமங்கலம்
(1) கோயம்புத்தூர்.







# இடி-மழை

## ஒரு சிறு கதை

திரு. ஐ. தங்கவேல் அவர்கள்.

1929 ஆம் ஜூன்மீ 15ந்-தேதியன்று பகல் சுமார் 1-மணி யிருக்கும். திருமாற்பள்ளி ...வுன் ஹைஸ்கூலின் முன்பாகப் பிள்ளைகள் கூட்டங்கூட்டமாக நின்றுகொண் டிருந்தனர். கதிரவன் 'எனது ஆதிக்கத்தின் காலமிதுவே', என்பாற்போன்று கருணையென்பது, சற்றுமிலனாய்த் தனது கொடிய கிரணங்களை வீசினான். 'கருமமே கண்ணாயினார்'க்கு மெய் வருத்தம் தோன்றாதன்றோ? எப்பொழுது வருமோ என்று அதிஆவலுடன் ஜூன்மாதத்தையும் பரீக்ஷையின் முடிவுகளையும் எதிர் பார்த்திருந்து, வந்தவுடனே பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்களது பெயர்களடங்கிய அட்டவணையில் தமது பெயர்களிருக்கின்றனவாவென்று ஒருவர்மேலொருவர் விழுந்தும், ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளியும் முன் சென்று பார்க்கும் பிள்ளைகளுக்கு உச்சியிலிருந்த ஞாயிறும் அதன் தீச்சுடரும் தண்மதியும் அதன் ஒண் கதிருமாகவேயன்றி வேறாகக் காணப்படாதது வியப்பன்றே. முடிவுகளைத் தெரிந்துகொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் பிள்ளைகளனைவரும் வீடு திரும்பினர். கிரஹண காலத்துச் சந்திரனை யொத்திருந்த சிலர் முகங்களும், அப்பொழுது காய்ந்த சூரியனை வாதுக்கழைப்பதுபோற் பொலிந்த மற்றவர் முகங்களும் உலகத்தில் இன்பமும் துன்பமும் கலந்தே தங்கியிருக்கின்றன என்னும் தத்துவத்தை நன்கு விளக்கின.

பரீக்ஷையில் தவறியவ ரனைவரது முகங்களினும் கைலாசநாதனென்னும் செங்குந்த மாணவனது முகமே அதிக வாட்டமுற்றிருந்தது. பெருக்குக் காலத்தில் அணைக்கட்டைமோதும் வெள்ளத்தைப்போல அவனது கண்ணிமைகளை நீர்மோதிற்று. தடையை அசட்டை செய்து வெளிப்பட முயலும் அளவிலா வருத்தத்தை யடக்கிக் கொண்டே 'கருணையங் கடலே, எனது தீவினையாகிய அக்கினிதான் நுமது கருணை வெள்ளத்தினை வற்றச்செய்ததோ? வழியறியாது துன்பக்கடலில் சிக்கி யலமரு மெனக்குச் சிறிது தூரத்தில் தெரிந்த விளக்கும் அணைந்ததே. தந்தையினது கொடுமைக்கும் கோபத்திற்கும் ஆளாகியுள்ளேன். தாயின் ஆதரவும் பயனற்றதா யிருக்கிறது. ஆகாயக்கோட்டையெல்லாம் அடியோடு வீழ்ந்ததே. இருதலைக் கொள்ளியினிடைப்பட்ட எறும்பினை நிகர்த்து நிற்கின்றேனே. உலகத்தில் இன்பமென்பது கடுகளவேனும், அணுவளவேனும் உண்மையிலேயே உளதோ? இனி எனது தந்தை காட்டும் அந்தகார அடவியிற் புகவேண்டியதுதானோ? இத்துன்பங்களினின்றும் நான் தப்புவது என்னுயிர் இவ்வுடலினின்றும் தப்பினால் தானோ? ஆ! அதுவேனும் ஒரு மார்க்கமுளதா! கடவுளே! நுமது திருவடிகளை நம்பினோரை நீர் கைவிட்டதாக எங்கும் கேட்டிலேன். நுமது துணையடியலால் வேறு துணை காண்கிலேன்.' என்று சிந்தித்தவண்ணம் மெல்லச் சென்று அவன் தன் வீட்டை யடைந்தான்.

கைலாசநாதன் விசுவநாத முதலியாருக்கு ஒரே பிள்ளை. சுமார் ஐம்பது தறிகளைச் சொந்தமாக வைத்துக்கொண்டு அவற்றில் கூலியாட்களால் நெய்யப்படும் துணிகளை வியாபாரம் செய்து வாழ்ந்துவந்த முதலியார் செல்வத்திற் சிறந்திருந்ததோடு, அவ்வூரார் பலருக்கும் அறிமுகமாகவும் அவ்வூர்ப் பொதுக் காரியங்களை நடத்துபவர்களில் ஒருவராகவும் விளங்கி

னார். ஆயினும், கல்வியில், அதிலும் ஆங்கிலக் கல்வியில் அதிக விருப்பமும் சிரத்தையுமில்லாதவர். தம் மகனை ஆறாவது பாரம் வரையில் படிக்க விடுத்தனரேனும், அதுவே அதிகமென்றும், அதோடு அவன் நின்றுவிடுதலே நலமென்றும் அவர் கருதினார். கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் ஆழ்ந்திருந்த அவருக்குத் தம் மகனையும் அத்துறைகளில் திருப்ப வேண்டுமென்னும் எண்ணமிருந்தது. ஆங்கிலக் கல்வி சாதாரணமாகத் தமிழ் மக்களுக்கு நன்மையைப் பயப்பதல்லவென்றும், அது அவர்களைப் புதிய, வைதிகமில்லாத ஆசாரங்களில் திருப்பிவிடுமென்றும் அவர் அபிப்பிராயங் கொண்டிருந்தார். ஆங்கிலக்கல்வி அதிகமாக பயின்றால் தம் மகன் ஒருவேளை கைத்தொழில் முதலியவற்றை அசட்டை செய்வானோ எனச் சங்கை கொண்டதனாலேயே அவர் தமது மகனைப் பத்தாம் வகுப்போடாவது பள்ளியை விட்டு நிறுத்தவேண்டுமென்று தீர்மானங் கொண்டிருந்தார். இந்த எண்ணத்தை அவர் கைலைநாதனுக்குத் தெரிவித்தார்; கல்வியை விட்டுவிடும்படி அவனையும் வற்புறுத்தினார்.

தந்தையினது கருத்தும் மகனது கருத்தும் அஞ்ஞானமும் மெய்ஞானமுமென முரண்பட்டன. கல்வியில் விருப்பங்கொண்ட மாணாக்கருக்கு அதில் ஊக்கம் நாளுக்கு நாள் அதிகரிப்பது சகஜமேயன்றோ? பணக்கஷ்டத்தைப்பற்றிய கவலையில்லாமையால் கைலைநாதன் கூடியவரையில் தனது கல்வியையும் அறிவையும் விருத்திசெய்துகொள்ள விரும்பினான். இத்தகைய மேலான விருப்பத்தின் நிறைவேற்றத்திற்குத் தடையாக நின்றவை அவனது தந்தையின் தீர்மானமும் பிடிவாதமுமேயாகும். தன் தந்தையின் பிடிவாத குணத்தையறிந்த அவனது மனத்தில் அவரது தீர்மானம் கவலையைப் புகுத்தியது. சுமார் 6-மாதகாலமாக அதைப்பற்றியே அடிக்கடி எண்ணி வருந்தினான். அதனால் தனது பாடங்களில் தக்க கவனம் செலுத்துதல் அவனுக்கியலாததாயிற்று. அதன் பயனாக, ஒவ்வொரு வகுப்பிலும் சிறப்புடன் தேர்ந்துவந்த அவன் அவ்வருடம் ஆறாவது பாரத்தில் தேர்ச்சிப்பெறத் தவறினான். அந்தச்சம்பவம் அவனிதயத்தில் எறிந்துகொண்டிருந்த கவலையாகிய கொள்ளியை ஏறத்தள்ளிற்று. இடிமேல் இடி விழுந்ததே என அவன் உள்ளம் நைந்து வாடினான்.

பரீக்ஷையின் முடிவைக் கைலைநாதன் தெரிந்துகொண்ட நாள் முழுதும் வருத்தமும் கவலையும் அவனுள்ளத்தைப் பகிர்ந்துகொண்டன. அன்றிரவும் நிம்மதியற்ற துயிலில் கடந்தது. மறுநாள் காலையும் வருத்தத்தைத் தரக்கூடிய புதிய எண்ணங்களுடன் வந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் வியாபார விஷயமாக வெளியூர் சென்றிருந்த விசுவநாத முதலியார் வீட்டுக்கு வந்தார். தந்தையைக் கண்டவுடன் தனயனது முகம் பிணம்போல் வெளுத்தது. சில நிமிஷங்களுக்குப் பின் முதலியார் மகனைக் கூப்பிட்டார். பின்னர் இருவரும் கைலைநாதனது பரீக்ஷையின் முடிவைப்பற்றிப் பேசினர்.

வி: என்னப்பா பரீக்ஷை சமாசாரம்?

கை: எப்படியோ தவறிவிட்டேன்.

வி: அப்படியா, முன்னமே நான் அவ்வாறாகுமென்று நினைத்தேன். பணந்தான் நஷ்டமாயிற்று. சரி, ஒழிந்தது சனியன். நமக்கெதற்காகப் படிப்பு? நாளையிலிருந்து நமது கடைக்குப்போய்க்கணக்கு முதலியவற்றைச் சரியாகப் பார்த்துக்கொள். நானும் அதற்காகத்தான் முன்னமே படிப்பை விட்டுவிடச்சொன்னேன். (தமது மகன் தவறிவிட்டானெனக்கேட்ட முதலியாருக்கு வருத்தத்திலும் சந்தோஷமே அதிகமாக இருந்தது.)

கை: அப்பா, இன்னும் சில நாட்கள் படிக்கலாகாதா?

வி: நான்தான் வேண்டாமென்கிறேனே. எதற்காகப் படிப்பு? நீ என்ன, படித்துவிட்டு வாரிக்கொட்டப் போகிறாயா? இருப்பதைச் சரியாகப் பாதுகாத்துவந்தால் போதும்.

கை: செல்வத்திற்காகவல்ல அப்பா; அறிவு வளர்ச்சிக்காகவே. 'கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை' என்று கூறியிருக்கிறார்களே. அதனால்.........

வி: உன் கல்வியையும் அறிவையும் நிறுத்து. எனக்கு நீ புத்தி கூறவேண்டாம். இத்தனை வருஷங்களைத்தான் பாழாக்கினாயே. இந்த வருஷம் ஒன்றுமே யில்லாமல் பல்டிபோட்டாய். முன்னமே கடையில் விட்டிருந்தால் கணக்கெழுதவாவது சரியாக வந்திருக்கும். உன் படிப்பு என்ன படிப்படா? எ, பி, என்றால் ஆய்விட்டதா? ஆ! எவ்வளவு பணம்! போதும், போதும்.

கை: அப்பா, பி. ஏ. வரையிலாவது.........

வி: வீணே பேசாதே. ஒன்றும் முடியாது.



இனிமேல் ஒருநாள்கூடப் படிக்கக்கூடாது. அந்தக் கோணை எழுத்து மண்டையிலேறிவிட்டால், குனிய விடுமா? வேலை செய்யவிடுமா? முடியுமானால் இதுவரையில் உன் மண்டையிலேறிய எழுத்துக்களையெல்லாம் வெளியே துரத்திவிடு.

இவ்வாறு தன்னெண்ணத்திற்கு எதிர் விரோதமாகத் தனது தந்தை கடுகடுத்துப் பேசியதைக்கேட்ட கைலைநாதனது கவலை நிமிஷத்திற்கு நிமிஷம் பெருகிற்று. செய்வதறியாது திகைத்தான். தனதபீஷ்டம் நிறைவேறுவது குதிரைக் கொம்பைக் காண்பது போலவே என்று அவன் திடமாக எண்ணினான். இத்துன்பங்களினின்றும் தப்புவதற்குபாயம் யாதென யோசித்தான்; இவ்வுலகத்தினின்றும் நீங்குவதே தகுந்ததெனத் தெளிந்தான். ஆகையால் கைலைநாதன் மறுநாள் முடிவதற்குள் தனதுயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்தான். அந்தோ, அறிவே! அறியாமையினிடத்தில் நீ படும் பாடுதானென்னே!

அன்றைய நாள் கழிந்தது; மறுநாளும் வந்தது. மாலை சுமார் 4-மணியாயிற்று. சென்னையிலிருந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரால் அனுப்பப்பட்ட பிரசாரகர்கள் மாலை 6-மணிக்கு விக்கின விநாயகராலயத்தில் உபந்யாசம்செய்வார்களென்றும் செங்குந்தரனைவரும் கூட்டத்திற்கு வரவேண்டுமென்றும் வீதிதோறும் தண்டோரா போடப்பட்டது. கூட்டமும் 6-மணிக்கு ஆரம்பித்தது. அதில் சற்று முதன்மைபெற்றிருந்தவர்களில் விசுவநாத முதலியாரும் ஒருவர். பிரசாரகர்கள் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்களாதலின் சிறந்த உண்மைகளையே சொல்வார்களென அவர் பூரணமாக நம்பிச் சிரத்தையோடு கேட்டிருந்தார். முதலிலொருவர் 'குலமுன்னேற்றம்' என்பதைப்பற்றித் தெளிவுடன் பேசினார்.

இடையில், கைலைநாதனது செயல்களைக் கவனிப்போம். அன்றைய பொழுதிலேயே தனதுயிரை விட்டுவிடத் தீர்மானித்த அவன் அதைப்பற்றிப் பல தடவைகள் சிந்தித்தான். முடிவில் அவன் செய்துகொண்ட தீர்மானம் வலிமை பெற்றது. திருவாசகத்தை யெடுத்துச் சில பதிகங்களை உருக்கத்தோடும் நீர் ததும்பும் கண்களோடும் பாடினான். 'என் பிறவித் துன்பமெல்லாம் இன்றோடே போச்சு' என்னும் திருவருட்பா அடியைப் பன்முறை பகர்ந்தான். அவனது மனத்திலிருந்த பெருங்கனம் சற்றுக் குறைந்தாற்போலிருந்தது. சுமார் 6-15-மணிக்குத் திருவாசகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அரை மைல் தூரத்திலுள்ள குளத்திற்குச் செல்லப்புறப்பட்டான். வீட்டின் பாசமும் அவன் கொண்டிருந்த மேலான நோக்கங்களும் அவனை வீட்டின் பக்கமிழுத்தன. அவனது நோக்கங்களுக்கெதிரே நின்ற விலக்க முடியாத தடையும் அதனால் அவன் உலகவாழ்க்கையிலடைந்த வெறுப்பும் அவனைக் குளத்தின் வழியாகத் தள்ளின. இவ்விதமான மனத்துடன் வீட்டை விட்டு நிமிஷத்திற்கு நிமிஷம் தூரமாகவே சென்றுகொண்டிருந்தான். சில நிமிஷங்களில் விக்கின விநாயகராலயத்தினருகில் வந்தான். அங்கே ஒரு பெருங் கூட்டமிருப்பதைக் கண்டு திகைத்தான். தன்னிதயத்தில் பாசத்துக்கும் விரக்திக்கும் நடந்த பெரும் போரை முடிவு செய்வதிலாழ்ந்திருந்தவனாகையால் அவன் கூட்டத்தைப்பற்றி அறிந்தானில்லை. இப்பொழுது பெருந்திரளான ஜனத்தைக்கண்டு அங்கேயே நின்றான்; சிலரை விசாரித்ததிலிருந்து சென்னையிலிருந்து தலைச்சங்கத்தாராலனுப்பப்பட்ட பிரசாரகர்கள் உபந்யாசம் செய்வதாக உணர்ந்தான். நின்றவன் உட்கார்ந்தான். கவலையிலீடுபட்டிருந்த அவனது மனமும் உபந்யாசத்தின் வயப்பட்டது. அப்போது ஒரு பிரசாரகர் எழுந்து 'கல்வி' என்பதைப் பற்றிக் கேட்டாரிதயத்தில் உருக்கிய ஈயத்திற்பட்ட பொருள் போற் பதியுமாறு பேசினார்.

அதன் சாரம் வருமாறு:—

'அன்பானும் அறிவானும் சிறந்த நேயர்களே, 'கல்வி' கல்வியென்று ஒன்றைப் பற்றியே பலர் பேசுகிறார்களே; உபந்யாசத்திலும் கல்வி, பத்திரிகையிலும் கல்வி, புத்தகத்திலும் கல்வி, எங்கும் கல்வியாக இருக்கிறதே. ஏன் இதனையே திருப்பித் திருப்பிச் சொல்லவேண்டும்?' என்று உங்களில் சிலர் நினைக்கலாம். இத்தனைக்கும் காரணம் அதன் சிறப்பேயாகும். பல வித நன்மைகளுக்கும் முதற்படியாயும் இன்றியமையாததாயும் இருக்கும் அது மக்களிடையே பயக்கும் நன்மையினையும், அதனால் அதற்குண்டாம் பெருமையினையும் எவராலும் எவ்வளவு காலத்திலும் முழுது மெடுத்துரைக்க முடி

யாது. அதனாலேயே மற்றெதனைக் காட்டிலும் இந்தக் கல்வியினையே நமது குலமுன்னேற்றத்துக்குத் தகுந்த ஏணியாக நம் தலைச்சங்கம் கொண்டிருக்கிறது; அதைப் பரப்புவதிலேயே காலத்திலும் பொருளிலும் முக்கால் பங்குக்கும் மேலான பாகத்தைச் செலவிடுகிறது. கல்வி பரவினால் மற்றெல்லா நன்மைகளும் எளிதிற் பரவு மென்பது திண்ணம். அதுவே தேக சுகத்தைக் கொடுக்கும்; செல்வத்தைக் குவிக்கும், தூய்மையையளிக்கும்; வாய்மையைப் புகட்டும்; அறிவைப் பெருக்கும்; ஞானத்தைப் புகுத்தும்; சுருங்கக் கூறின், இம்மை மறுமைப் பயன்களைத் தன்னைப் பெற்றார்க்குரிமையாக்கும். இதனை ஓங்கச் செய்வதற்காகவே நமது தலைச் சங்கத்தின் ஆதரவில் ஒரு சீட்டும் போட ஏற்பாடாயிருக்கிறது. அந்தச் சீட்டும் உங்களைப் போன்ற குலாபிமானிகளது ஒத்தாசையினால் செவ்வனே நிறைவேறு மென்பதும் அதன் பயனாகத்தலைச் சங்கத்தின் முக்கிய நோக்கமும் சித்திபெறு மென்பதும் உறுதி.

‘கல்வியின் சிறப்பைப் பற்றியும் அவசியத்தைப்பற்றியும் சுருக்கிக் கூறினேன். இனி அதனைப் பரப்பும் முறைகளைக் கவனிப்போம். முதலாவதாக, அது பரவுதற்குத் தாய் தந்தையர்களது ஒத்தாசை வேண்டும். அவர்கள் தங்கள் மக்களை—ஆண் பெண் இருபாலாரையும்—தங்களால் கூடியவரை படிப்பிக்க முயலுதல் வேண்டும். இயற்கையாகவே அதில் விருப்பங் கொண்டுள்ளவர்களது ஊக்கத்தை மேலும் மேலும் வளர்க்க வேண்டும். அதுவே அவர்களது கடமையாகும். ஏனெனில்

“தந்தை மகற்காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்”

அன்றோ? தமது கல்வியைப் பெருக்கிக் கொள்ள அவாவும் பிள்ளைகளைத் தடுப்பது பெரும்பாபமாகும். அதனால் பெருந்தீமைகளும் விளைகின்றன. கல்வி தடுக்கப்பட்டதன் காரணமாக எத்தனையோ பிள்ளைகள் வெறுப்பும் வருத்தமுங் கொண்டு தற்கொலை செய்து கொண்டதை நான் கண்டும் கேட்டுமிருக்கிறேன். மக்களைத் தவங் கிடந்து பெறுதல் இவ்வாறு மாய்த்தற்குத்தானோ? இவ்வாறு தடை செய்பவர்கள் ஏழைகளே மட்டுமன்றி பெருந் தனவந்தர்களும் என்பது வருத்த மூட்டுகிறதன்றோ? இனியேனும் தந்தைமார்களை இத்தகைய பாபமூட்டையைக்கட்டிக் கொள்ளாம லிருக்கும்படி வேண்டுகிறேன்.

‘இந்த விடத்தில் பிள்ளைகளுக்கும் ஒரு நன்மதி கூற விரும்புகிறேன். அறியாமையால் கல்விக்கிடையூறு செய்யும் தந்தைக்குக் கல்வியினாலுண்டாகும் நன்மைகளை எடுத்துரைத்து அதனால் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதே அறிவுள்ள மகனுக்குரியதாகும். அதுவன்றித் தற்கொலை செய்து கொள்வது பெருந்தவறாகும். இத்தகைய தடைக்காகவும், பரீக்ஷையில் தவறிவிடுதல் முதலிய அற்ப விஷயங்களுக்காகவும் உயிரை மாய்த்துக் கொள்பவனினும் கோழைமன முடையவனும் மதியீனனும் உலகத்திலில்லை என்னலாம். உயிரை மாய்த்துக்கொள்வதால் இவனது எண்ணம் நிறைவேறி விடுமோ? இவைகளையெல்லாம் யோசித்துத் திடமனத்தோடு காரியசித்திக்காக முயற்சி செய்வதே வாலிபர்களுக்குத் தகுதியாகும். வருத்தமானது எதையும் யோசிக்க விடாதாகையால் அவ்விதமான வருத்தத்தையும் விரக்தியையும் தங்கள் மக்கள் மனத்தில் புகுத்தாதிருக்கும்படி பெற்றோரை மறுபடியும் நான் வேண்டுகிறேன்.

‘தமது மக்கட்குக் கல்வி புகட்டாமைக்கு வறுமையைக் காரணமாகக் கூறுவது உண்மைக்குச் சிறிதும் ஒவ்வாது. எவ்வளவு ஏழைகளாயினும் ஏழாம் வகுப்பு வரையிலாவது தமது பிள்ளைகளைப் படிக்கவைக்கக் கூடும். அப்படி இயலாதவர்களுக்கு இராஜாங்கத்தார் எவ்வளவோ சாதனங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். அதனோடு நமது தலைச் சங்கத்தாரும் கல்விக்காக உதவி செய்யத் தயாராகக் காத்திருக்கின்றனர். இவைகளையெல்லாம் தக்கபடி பயன்படுத்திக் கொள்வது நமது கடமையேயாகும்.

‘கல்விக்கும் கைத்தொழிலுக்கும் பெரும் பேதமிருக்கிறதென்று எண்ணியிருப்பவர்கள் அவைகளிரண்டும் உடன் பிறவிகளே யென்றுணர வேண்டும். கல்வியிருந்தால் கைத்தொழில் அனாவசியம், கைத்தொழிலிருந்தால் கல்வி வேண்டாம் என்று நினைப்பது மடமை. கைத்தொழிலில் தமதீ மக்களைப்பழக்க விரும்பும் தாய் தந்தையரும் அவர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டும். கல்வி பயிலும் மாணவர்களும் கைத்தொழிலை அசட்டை செய்யாது, அதனிற் புகுத வேண்டும். அப்பொழுதே கைத்தொழிலும் திருத்தமடைந்து



விருத்தியாகும்; வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் நமது நாட்டை விட்டு ஒழியும். இவற்றிற்கெல்லாம் ஆங்கிலக்கல்வி இன்றியமையாததாகிறது. ஆகையால் இராஜாங்க பாஷையாகிய அதைக் கற்பதுடன் மேனாடுகளுக்குச்சென்று அங்குக் கைத்தொழிலில் கையாளப்படும் புதிய முறைகளையும் கற்க வேண்டும்.

‘நான் மறுபடியும் பெற்றோரையும் பிள்ளைகளையும் கல்வியபிவிருத்திக்காகப் பாடுபட்டு, அதனையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள நமது சங்கத்துக்குத் தம்மாலான உதவியைச் செய்து, நமது குலமுன்னேற்றமாம் கட்டடம் அழகுற எழும்புவதற்காகத் தங்களாலான உழைப்பு ஒத்தாசை முதலிய உபகரணங்களை யுதவிக் குலநலனாகிய அமுதம் பருகி ஆனந்தித்திருக்குமாறு வேண்டுவதுடன் அவர்களை அவ்வழியில் செவ்வனே செலுத்துமாறு நமது செந்தில் வாழ் செம்மலைப் போற்றுகின்றேன்.”

அவருக்குப்பின் இருவர் அதே விஷயத்தை யொட்டிப் பேச, வந்தனோப சாரத்துடனும், சந்தோஷத்தை விளக்கும் பெரிய ஆரவாரத்துடனும் கூட்டம் கலைந்தது. ஜனங்களும் அவரவர் இல்லமேகினர்.

இனி, கைலை நாதனையும் அவன் தந்தையையும் நோக்குவோம். தற்கொலைக்காபத்தமாகிச் சென்ற தனயன் அதை அடியோடு வெறுத்தவனாய்த் தன் தந்தையிடம் கூட்டத்தில் நடந்தவற்றைப் பற்றிக்கூறி அவரைத் தன் வயப்படுத்த முயல வேண்டுமென்னும் எண்ணத்துடன் வீடு திரும்பினான். விசுவநாத முதலியார் தம்மகனைப் பற்றிக்கொண்டிருந்த தீர்மானமாகிய பாரையை உபந்நியாசமாகிய செங்குந்தம் பொடிபடுத்தியது. அவரும் யோசனையிலாழ்ந்தவராய் வீடு வந்து சேர்ந்தார். இரவில் சற்றுநேரம் கல்வியின் அவசியத்தையும் தம்மகன் கொண்டிருந்த பேரவாவையும் பற்றிச் சிந்தித்தார். இடையில் ஒரு வேளை தமது ஒரே மகன் தற்கொலை செய்து கொள்வானோ என்றஞ்சினார். கவலை குடிகொண்டிருந்த அவனது முகம் அவரது பயத்தை அதிகரித்தது. அதனால் அவர் கைலைநாதன் செல்லவிரும்பி இருந்த வழியிலேயே அவனைச் செலுத்தத் தீர்மானங் கொண்டார்.

கைலைநாதனது கவலை யொழித்தலுக் கறிகுறி போன்று இரவு ஒழிந்து பகல் தலைகாட்டிற்று. துயிலெழுந்து காலைக்கடன்களை முடித்தபின் விசுவநாத முதலியார் மகனையழைத்தார். அவனும் அவரிடத்தில் முன்னாள் நடந்த உபந்யாசத்தைப்பற்றிக் கூறச் சந்தர்ப்ப மேற்பட்டதென்று மகிழ்வுடன் சென்றான். தந்தை ‘கைலைநாதா, நீ கொண்டது சரியான எண்ணந்தான். இப்பொழுது தான் நான் அதை உணர்ந்தேன். நீ கல்வியைவிட வேண்டியதில்லை. இந்தப் பரீக்ஷையில் தவறியதற்காகக் கவலைப்படாதே. கலாசாலை திறந்ததும் நீ அதில் சேர்ந்து ஊக்கமாகப்படி.. எவ்வளவு வேண்டுமானாலும் படி. வெளியூர்க் கலாசாலைகளுக்குச் செல்வதாயிருந்தாலும் சென்றுபடி. சீமைக்குப் போய் படிக்க வேண்டுமானாலும் நம்மிடம் பணமில்லாமற் போகவில்லை” என்றார்.

கைலை நாதன்: அப்படியே செய்கிறேனப்பா. உங்கள் மனம் மாறி விட்டதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். அப்பா, எப்படி மாறிற்று?

விசு: நேற்றைய உபந்யாசம் எனது கருத்துக்களை அடியோடு மாற்றி விட்டது. நீ அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தாயா?

கை: தற்செயலாக நான் அங்குச்சென்றேனப்பா. கல்வியைப்பற்றி அப்பெரியார் கூறியவற்றைத் தங்களிடம் சொல்ல விரும்பினேன்.

விசு: அப்படியா? அவர் கூறிய விஷயங்களை நீ மறந்து விடாதே. தற்கொலையைப் பற்றியும் கைத்தொழிலைப் பற்றியும் அவர் எடுத்துரைத்த புத்திமதிகளை உன் மனத்தில் நன்றாகப்பதிய வைத்துக்கொள். ஒரு வேளை அதிகம் படித்து விட்டால் கைத்தொழிலை அசட்டை செய்து விட்டு நமது பொருளை விருத்தி செய்யாது அழிய விடுவையோ என்று கருதித்தான் கற்றது போதுமென்றேன்.

கை: அப்பா, நெசவுத் தொழிலில் புதிய முறைகளைக் கற்று நமது தொழிலையும் வியாபாரத்தையும் விருத்தியாக்க வேண்டுமென்றே நான் பல நாட்களாக எண்ணங்கொண்டிருக்கிறேன். அத்தகைய பெரிய ஆசைக்குத் தடை ஏற்பட்டதனாலேயே நான் கவலை கொண்டு தற்கொலை செய்து கொள்ளவும் தீர்மானம் செய்து கொண்டேன். ஆனால் இப்

பொழுது அந்த மடத்தனமான தீர்மானம் மடிந்தொழிந்தது.

விசு: சரி இனிக்கவலையின்றிச் சிரத்தையோடு பாடங்களை வாசித்துத்தேர்ச்சி பெறுவதுடன் கைத்தொழில் முறைகளையும் கற்க முயற்சி செய்.............யாரோ உன்னைக் கூப்பிடுகிறார்கள் போலிருக்கிறது.

கைலை நாதன் வெளியே சென்று பார்த்தான். வாயிற்படியண்டை சோமசுந்தரனென்னும் அவனது நண்பன் மலர்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தான். கைலை நாதனைக் கண்டதும் அவன் "கைலை நாதா, நீ தேர்ச்சி பெற்று விட்டாய். நானும் தேர்ந்து விட்டேன். சற்று முன்னர் தான் சமாசாரம் வந்தது. பள்ளிக்கூடத்தில் நமது பெயர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. ஒரு மார்க்கு அல்லது இரண்டு குறைவாக வாங்கியவர்களை இரண்டாந் தடவை கவனித்து மேல் வகுப்புக்கு மாற்றினார்களாம். நாம் தப்பித்துக் கொண்டோம். எங்களப்பாவும் இதைக்கேட்டு சந்தோஷப்படுவார்" என்று விரைவாகவும் சந்தோஷத்தோடும் சொன்னான். பின்னர் இருவரும் விசுவநாத முதலியாரிடம் சென்று இந்த விஷயத்தைத் தெரிவித்தனர். அவரும் அவர்களோடு சேர்ந்து மகிழ்ந்து தமது மகனையும் அன்போடு தட்டிக் கொடுத்தார்.

கைலை நாதன் "அப்பா சென்னையிலிருக்கும் நெசவுத் தொழிற் கலாசாலையில் (Textile Institute) சேர்ந்து வாசிக்கிறேன்" னென்றான். அவன் தந்தை "இப்பொழுது வேண்டா; பி. எ. படித்து விட்டு அதில் சேர்ந்து கொள்," என்றார்.

கை: ஆமப்பா, பி. எ. படித்து விட்டுப் பம்பாயிலிருக்கும் இன்னும் மேலானதான விக்டோரியா ஜூபிலி இன்ஸ்டிட்யூட்டில் சேருகிறேன். அதற்கெல்லாம் நமது தலைச் சங்கத்தாரே ஏற்பாடுகள் செய்கிறார்களாம்.

விசு: அப்படியே செய். பச்சையப்பன் கல்லூரி திறக்கப்பட்டதும் அதில் சேர்ந்து பி. எ. வரையிலும் நன்றாக வாசி.

அங்கிருந்த சோம சுந்தரன் "கைலை நாதா, என் தகப்பனார் இன்னும் படிக்க வைப்பதற்குப் பணமில்லை என்கிறார். நெசவுத் தொழிற்சாலையில் சேர்ந்து கற்றாலும் நல்லது. என் தகப்பனாரும் ஒரு வேளை அதற்கு ஒத்துக்கொள்வார். நான் அதில் சேர்ந்துவிடலாமென்றெண்ணுகிறேன். தலைச் சங்கத்தார் உதவி செய்கிறார்களா ?" என்றான்.

கை: ஆஹா, அவர்கள் பிள்ளைகளுக்காகச் செய்யும் உதவிக்கு அளவேயில்லை—அப்பா, நமது ஆனந்தத்தில், சங்கத்துக்கு நாம் செலுத்த வேண்டிய நன்றியை அடியோடு மறந்தோமே.

விசு: ஆமாம், நீ கல்வி பயிலுவதே அவர்களுக்கு நன்றி செலுத்துவது போலாகும். ஆயினும், நமது ஊரில் 'செங்குந்தமித்திரன்' பரவும்படி உழைப்பது நமது கடமையாகும். இன்னும் இப்பொழுது ஏற்படுத்தியிருக்கும் கல்வி நிதிச் சீட்டுக்கள் நன்றாக விற்கப்பாடுபடுவதும் அவசியமே. இத்துடன் நில்லாது ஏழை மாணவர்களுதவிக்காக நாம் ஏதாகிலும் ஒரு பெருந்தொகையைச் சங்கத்துக்கனுப்பினால் தான் நாம் சிறிதேனும் நன்றி காட்டியவர்களாவோம்.

கை: அப்பா, அதுதான் தக்க நன்றி. மேலும், நமக்குத்தான் பணமிருக்கிறதே, நாமே ஒரு ஏழை மாணவனுக்குச் சிறிது உதவி செய்யலாமா ?

விசு: எவனாவது நமது உதவியை நாடினால் கூடியதைச் செய்யலாம்.

கை: அப்பா, இதோ இருக்கிறானே, சோமசுந்தரன், அவன் நம் குலத்தவன்; எனக்கு மிகவும் பிரியமான நண்பன்; கல்வியில் சிரத்தை யுடையவன்; நல்லகுணம் வாய்ந்தவன்; ஆனால், பாபம், ஏழை அவன் தந்தை அவனுக்குப் பணங் கொடுக்க முடியாதென்கிறாராம். அவன் டெக்ஸ்டைல் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்தாலும் சிறிது பணம் வேண்டியிருக்கும். அதை நாம் தந்துதவலாம் அப்பா.

கைலைநாதன் பரிவுடன் செய்து கொண்ட இந்த விண்ணப்பத்திற்கு அவன் தந்தையும் இணங்கினார். சோமசுந்தரனும் அவனிடம் மிகுந்த நன்றி காட்டியதுடன் தன் தந்தையிடம் அநுமதி பெற்று நெசவுத் தொழிற்சாலையிற் சேர்ந்தான். கைலைநாதனும் பச்சையப்பன் கல்லூரியின் F.A. வகுப்பு மாணவனானான். இருவருக்கும் இடையிலிருந்த நட்பு வலிமை பெற்றது. ஒரு மையான காராலுண்டாகும் பயங்கரமான இடியைப் போன்ற கவலை யொழிந்து

(இடி-மழை தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க.)






தொகுதி-3. பகுதி-12-466-ம் பக்கத் தொடர்ச்சி

## காற்று

இதற்கு முன், காற்றிலுள்ள பிராண வாயு (Oxygen); ஓஜோன் (Ozone); உப்பு வாயு (Nitrogen) இவைகளைப்பற்றி நமக்குப்பயன்படும் அளவில் மட்டும் கூடிய வரையில் ஆராய்ந்தோம்.

### கரியமல வாயு (Carbonic Acid Gas)

இனி கரியமல வாயுவைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

பிராண வாயுவும், கரியும் ரசாயன சேர்க்கை (Chemical Compound) யின் தன்மையில் கலக்குங்கால் கரியமல வாயு உண்டாகிறது. கரி (Carbon) யின் அம்சங்கள் பிராண வாயுவின் ஆதரவில் தீப்பற்றி நிற்கும்.

ஒரு பங்கு கரியும், இரண்டு பங்கு பிராண வாயுவும் சேர்ந்திருப்பது சர்வ சாதாரணம். இதற்கு கார்பன் டை ஆக்ஸைட் (Carbon-dioxide) என்று பெயர்.

சில இடங்களிலும், சில சந்தர்ப்பங்களிலும் பிராண வாயு சிற்றளவாயிருக்குங்கால், ஒரு பங்கு கரியும் ஒரு பங்கு பிராண வாயுவும் ரசாயன சேர்க்கைத் தன்மையில் சேர்ந்திருப்பதும் உண்டு. இதற்குக்கார்பன் மான் ஆக்ஸைட் (Carbon MonOxide) என்று பெயர். இதனால் சில சமயங்களில் கெடுதி நேரிடுகிறது.

கார்பன் டை ஆக்ஸைடிற்கு நிறமில்லையாயினும் சிறிது வாசனையும் புளிப்புச் சுவையும் உண்டு இது மிகக் கனமான வாயு. ஜல வாயுவை (Hydrogen) விட, 22-மடங்கு அதிக கனம் உள்ளது. ஆகையால் தான் ஆகாயத்தின் கீழ் மட்டத்தின் அளவே தங்கி இருக்கிறது.

இது காற்றில், பருமனில் 1,000க்கு, 0·4-பங்கு இயற்கையாகவே இருக்கக் காணலாம். இதனால் கெடுதியில்லை. ஆனால் எங்கு 1,000க்கு 15-பங்கு இருக்கின்றதோ அங்குள்ளவர்கள் மயக்கம், மூர்ச்சை, தலைவலி முதலானவைகளால் பீடிக்கப்படுகிறார்கள்.

இந்து தேச சரித்திரம் (Indian History) வாசித்தவர்களுக்குக் கல்கத்தா நகரில் ஓர் இருட்டறையில் (Black Hole of Calcutta) 146-பெயர்கள் அடைபட்டதில், 123-பெயர்கள் ஒரே இரவில் மரணமடைந்த சங்கதி ஞாபகத்திற்கு வரலாம். ஆனால் சிலர் சற்று மறந்தும் இருக்கலாம். சிறு வயதில் பள்ளியில் இதைப் படித்தபடியால் அதை இங்கு ஞாபக மூட்ட என்ன காரணம் எனின் சொல்லுகிறேன். சிலர் தாங்கள் கட்டுவது அழகிய அரண்மனை யாயினும், வாசலுக்குக் (Court-yard) கலியாண கூடமொன்று அமைத்து விட்டு; அறைகளுக்கேற்ற ஜன்னல்களைச் சரிவர அமைப்பதற்கு அஞ்சுகிறார்கள். அவ்வித அஞ்சுதலை அன்பர்கள் அறவே அகற்ற அறிக்கை எதற்கோ வெனின், மேற்சொன்ன கல்கத்தா நகரின் சிற்றறையில் 146-மனிதர்கள் அவ்வறையிலுள்ள பிராண வாயுவை உட்கொண்டு, கரியமல வாயுவை வெளிவிட, அங்குப் பிராண வாயு இல்லாமையால், கரியமல வாயு சுய அதிகாரம்

---

இடி-மழை 18-ம் பக்கத் தொடர்ச்சி.

அமையப்பெற்றுச் சுகானந்தவாரி பெய்தது. கைலைநாதன் நம்பி யிருந்த கடவுளும் அவனைக் கைவிடாது காப்பாற்றியே யருளினார்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமே! 'செங்குந்தமித்திரனே,' செங்குந்த குல முன்னேற்றங் கருதிச் சலியாதுழைக்கும் குலச்சிகாமணிகளே! வள்ளல்களே! பிரசாரகர்களே! உங்களனைவருக்கும் நங் குலமக்கள் எவ்வாறு தக்க நன்றி செலுத்த வல்லார்? நீங்களெல்லாம் ஓங்கி உயர் பதமடைந்து நீடுவாழ அவர்கள் செங்குந்தப் படையுடையாரது செந்தாட் டாமரைகளைத் தமது சென்னிமிசை வைத்தேத்துவரென்பதிலும், ஆர்வலரேத்த அமர்ந்தினி தொழுகிக் காதலினுவந்து வரங் கொடுத்தருளும் அக்கருணாமூர்த்தியும் அவர்களது வேண்டுகோட்கிணங்கி அருள் புரிவரென்பதிலும் ஐயமுண்டோ?

பெற்று 123-மனிதர்களை விண்ணுல கேற்றியது. எஞ்சிய 23-பெயர்களையும் மாண்டாருடன் மாளச் செய்ய இவர்களுடைய சக்தியையும் அடக்கிக் கொண்டே வருங்கால் அவ்வறை திறக்கப்பட்டது. அக்கால் வெளிக்கால் அவ் வறையின் உட் புகுந்து, கரியமல வாயுவை வெளியோட்டி, இவர்களுக்குச் சத்தி யூட்டி, 'நீங்கள் சற்று நிதானியுங்கள். இக்கொடுமையைப்பற்றி உலகினர் வசனிப்பைச் செவி எற்று சின்னாட்கள் உலகில் தங்கி, பிறகு ஒவ்வொருவராக வேறு கூட்டைத்தேடிக் கொள்ளுங் கள்' என்று ஆறுதலை யூட்டி நிறுத்தி விட்டது. ஆகவே, அன்னோர்களை உயிர்துறக்கச் செய்தது கரியமல வாயுவின் கொடுமை என்பதில் ஏதேனும் சந்தேகம் உண்டோ? இல்லை என்பது திண்ணம். இதைக் கவனித்து, வீட்டின் அறைகளுக்கு ஏற்ற ஜன்னல்களைத் தக்கவாறு அமைத்து, நற்காற்று உட்புகவும், நாம் சதா விட்டுக் கொண்டே இருக்கும் கரியமல வாயு வெளி ஏறவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொள்வது மதியூகம்.

இன்னும் காற்றில் கரியமல வாயு அதிகரித்த இடங்களில் ஜீவராசிகளுக்கு அனேகவித விபத்துக்கள் நேர்ந்ததைச் செவியேற்ற பிறகும் அக்கொடிய காற்று குறைபடும் விதிகளை நாடித் தேடி அனுசரித்து வருவதுமனிதர்களின் மதியாகும்.

ஆனல் இவ்வாயு உற்பத்தியாக அனேகவித காரணங்களைக் கீழ் வருமாறு காணலாம்:—

1. ஜீவராசிகள் வெளிவிடும் சுவாசத்திலிருந்தும் வருகிறது.

2. விறகு, கரி முதலியவைகள் எரியும்போதும் உண்டாகிறது.

3. தாவரங்கள் அழுகுவதினாலும் உற்பத்தியாகிறது. இன்னும் இவற்றினின்றும் இரவிலும், முளை விடும்போதும், புஷ்பிக்கும்போதும் வெளியாகிறது.

4. சுண்ணாம்புக் காளவாய்களினின்றும் உண்டாகிறது.

5. ஜன அடர்த்தியான இடங்களில் இவ்வாயு அதிகம்.

6. சுடுகாடுகள், சதுப்பு நிலங்கள் முதலிய இடங்களிலும் உண்டு.

7. பாழுங் கிணறுகளிலும், ஈரத்தரைகளிலும் காணலாம்.

8. நிலக்கரி சுரங்கங்களில் அதிகம்.

9. பனி முதலியவைகளினாலும் அதிகரிக்கிறது.

சில இடங்களில், உதாரணமாக ஜாவாதீவில் சாவு கணவா(Valley of Death)யிலும் நேபில்ஸ் (Naples) அருகாமையிலிருக்கும் கிரோடா டேல் கேன்(Grotta Del Cane)இலும் அதிகமாக இருக்கிறதாம்.

இவ்வாயுவை அடக்கி ஆள்வதற்கே ஜீவகாருண்ய மூர்த்தியாகிய தயாபரக் கடவுள், உலகின்கண் ஓர் அற்புத ஏற்பாடு செய்திருக்கிருர். அதாவது சூரிய வெளிச்சத்தில் இலைகளிலுள்ள துவாரங்களின் உதவியால், தாவரங்கள் கரியமல வாயுவை உட்கொண்டு, கரியை தங்களுக்குள் அடக்கி ஆகாரமாக்கிக் கொண்டு, பிராண வாயுவை வெளியாக்கி, காற்றைச் சுத்தப் படுத்திக்கொண்டே இருக்கின்றன. காற்றில் இவ்வாயு அதிகரிக்காமலிருப்பதற்குக் காரணம் இதுதான்.

இன்னும் மழை பெய்வதினாலும், காற்று வீசுவதினாலும், வீட்டின் அறைகளுக்குத் தக்கவாறு ஜன்னல்கள் அமைப்பதனாலும், வீட்டைச்சுற்றிச் சுத்தக் காற்று வீசிக் கொண்டே இருக்க வெளியிடம் விடுவது முதலிய ஏற்பாடுகளாலும் இது குறைகிறது.

இது கடலின்மேல் பரவி இருக்கும் காற்றில் குறைவாகவும், பூமியின்மேல் பரவிகிற்கும் காற்றில் அதிகமாகவும் இருப்பதைக் காணலாம்.

சுண்ணாம்பு காளவாய்களைச் சுற்றிலும் இவ்வாயு அதிகமாகையால் இரவில் மனிதர்கள் அதன் அருகாமையில் படுத்துறங்கக் கூடாது.

நெடுநாட்களாக உபயோகிக்காமல் விடப்பட்ட பாழுங் கிணற்றைச் சுத்தம் செய்யவோ அல்லது வேறு எவ்வித காரணங்களுக்காகவோ, ஒருவர், "நான் எவ்வித கிணறுகளிலும், இறங்க எனக்கு வல்லமை உண்டு" என மிகத்துணிவுடன் திடீரென இறங்கக் கூடாது. தெரிந்தோ தெரியாமையாலோ அப்படி இறங்கினவர்களின் கதி அதோகதியானதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மற்றென்ன செய்வதென்ருல், அத்தகைய கிணற்றில் இக்கொடிய காற்று அதிகமாக இருக்குமாகையால் முதலில் ஒரு மெழுகு வர்த்தியையோ அல்லது ஒரு பந்தத்தையோ கொளுத்தி அக்கிணற்றிற்குள் விட்டுப்பார்த்து பிறகு இறங்கவேண்டும். வத்தி எரிந்தால் மட்டும் அபாயமில்லை என்று தைரியமாக அக்கிணற்றில் இறங்கலாமே யன்றி, அது அணைந்தால் இறங்கக் கூடாது. ஆனல் அக்கிணற்றிலுள்ள இக்கொடிய வாயு வெளியேறும் மார்க்கங்களைத்தேடி, உபயோகப்படுத்தி, பிறகு வர்த்தி எரியும் குறியைப் பார்த்துத் தான் கிணற்றில் இறங்க வேண்டும். இதை ஜனங்கள் நாடுகளில் முக்கியமாகக் கவனிப்பார்களாக.

இன்னும் இவ்வாயு நீரில் கரையுந்தன்மை யுள்ளது என்பதை தெரிந்து கொள்வதும் அவசியம்.

சாரடோகா (Saratoga) விலுள்ள விச்சி (Vichy) கெய்ஸர் (Geyser) என வழங்கும் பொங்கும் தன்மை யுள்ள உலோகம் நிறைந்த ஊற்றுப் பெருக்கில் இவ்வாயு அதிகமாக இருக்கிறது என்று பரீட்சித்து உள்ளனர்.

இங்கும் நாம் சாதாரணமாய் அருந்தும், சோடா லெம்னெட், கோலா முதலிய தண்ணீரில் இவ்வாயு அதிகம். இவ்வாயுவைத்திரண்டவடிவுள்ள ஸ்தம்பாகிருதியாகிய இரும்பு பாத்திரத்தில் அடக்கி வைத்து அதினின்றும் வேண்டு மட்டும் குழாய் மூலமாக தண்ணீருடன் கலக்கச் செய்து புட்டிகளில் பிடித்து விற்பனை செய்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதைச் சோடா பிடிக்கும் (Aerated



Water Factory) இடங்களில் விபரமாகக் காணலாம்.

நிற்க, இனி ஒரு பங்கு கரியும், ஒருபங்கு பிராண வாயுவும் கலந்த கார்பன் மான் ஆக்ஸைடின் (Car-Mon Oxide) தன்மையைச் சற்றுக் கவனிப்போமாக.

இதற்கு நிறம், சுவை, வாசனை கிடையாது. நீரில் அதிகமாகக் கரையாது. சாதாரண காற்றைவிடச் சற்று லேசானது. இதுமிகக்கொடியதென்று முன்னமே சொன்னேம். இதை விஷத்திற் கொப்பிடலாகும். 1,000 பங்கு காற்றில், ஒரு பங்கு இவ்வாயு இருக்கின் அது விஷத்துக் கொப்பாகும். 750முதல் 800 பங்கு காற்றில் ஒரு பங்கு இவ்வாயு இருக்கின் 30-நிமிஷத்திற்குள்ளாகவே அங்குள்ளவர்களுக்கு மரணத்தை உண்டு பண்ணும் சக்தி யுள்ளது.

இன்னும் இது ஜீவர்களின் இரத்தத்திலுள்ள வஸ்துவில் கலந்து பிராண வாயுவை ஏற்றுக் கொள்ளாவண்ணம் செய்து இரத்தத்தைக் கெடுக்கும்.

புகையிலையின் புகையை மனிதர்கள் உட்கொள்ளுங்கால் நேரிடும் கெடுதி இதனுடைய செயல் தான்.

சில சமயங்களில் சுரங்கங்களிலும், சண்டைக் கப்பல்களின் உட்புரங்களிலும் விளையும் விபத்துக்களும் இதனுடைய வன்மையாலேயே.

நிற்க எந்த இடங்களில் பிராண வாயு அதிகரிக்கின்றதோ அவ்விடங்களில் கரியமல வாயுவின் வன்மை குன்றுதலால் மேல்காட்டிய விபத்துகள் நேரிடக் காரணமில்லை. ஆகவே, நாம் வாசஞ் செய்யுமிடங்களில் நறுங் காற்று வீசிக் கொண்டே இருக்கத் தக்க வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்னும் ஒரு விஷயத்தைக் கவனியுங்கள். இக் கரியமல வாயு இரண்டு திரவியங்களால் (Elements) ஆகிய ஒரு வாயு வென்று கண்டோமல்லவா? அது கரியும் பிராணவாயு மன்றோ? இவ்விரண்டும்; தன்னந் தனியாக இருக்குங்கால் ஒவ்வொன்றும் மனிதர்களுக்குப் பிரயோஜனத்தையே கொடுக்கின்றன பாருங்கள். பிராண வாயுவின் பிரயோஜனத்தை முன்னமே கண்டீர்கள். இங்குக் கரியின் தன்மையைப் பாருங்கள். நிலக்கரி, கட்டைக்கரி மனிதர்களுக்கு உபயோகமாகும் வழிகள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. நிலக்கரியின் உபயோகத்தால் நீராவி உண்டாகி இரயில் வண்டி ஓடுவதும் உங்களுங்கு உள்ளங்கை நெல்லிக் கனி தான். சுருக்கமாக, கொழுப்பு (Fat) காரீயம் (Graphite) எழுதும் பென்சில் (Black Lead Pencil) முதலியவை என்ன? கரிதான். வைரக் கற்கள் (Diamonds) என்ன? சுத்த கரிதான். இது அனேகருக்குத் தெரிந்திருக்கலாம். சிலருக்கு ஆச்சரியமாகவும் இருக்கலாம். ஆனல் உண்மையில் சுத்தமாக இயற்கையிலுள்ள கரி (Carbon) தான். இவை தென் ஆப்ரிகா (South Africa) பிரேசில் (Brazil) என்னும் பிரதேசங்களிலுள்ள மலைகளில் கிடைக்கின்றன. இவை முதலில் மங்கின தன்மையனவாகக் கிடைத்தாலும், இவற்றைத் தேர்ந்து எடுத்து, பற்பல ரகங்களாகப் பிரித்து, ராவியும் சாணை பிடித்தும் ஜொலிப்பை உண்டாக்கி அதன் தன்மைக்குத் தக்கவாறு மதிப்பிட்டு விலையாக்கி விடுவதை நீங்கள் காணவில்லையா?

இயற்கையாகக் கரியும் பிராண வாயுவும் தனித் தனியாக இருக்கையில் மனிதர்களுக்கு உபயோகமாக இருப்பதென்ன! இவ்விரண்டுமே கலந்து, ரசாயன சேர்க்கை (Chemical Compound) தன்மையால் வேறு பொருளாகி, சற்று மாற்ற மடையின், உயிருக்கே ஹானியாகிறதென்ன! என்னும் ஆச்சரியத்தைக் காட்டுதற்கே கரியின் தன்மையை இங்கு வேறாக எழுதியது.

**A Gold-plated Lever wrist watch for Rs. 6-14-O.**



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடேர்" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும் சரியான டைம் காட்டும் வில்லிண்டர்கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குநின்று போவதல்ல. 5 வருஷ மல்ல, பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கடியார கைச்சங்கிலி இனமாக சேர்த்து அனுப்பப்படும். வீணிலே வில்லிண்டர் கடியாரங்களில் பணத்தை இழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக் கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் சரியாக ஓடவில்லை யென்ருல் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருஷம் காரண்டியுடன் அனுப்புகிறோம். இனும் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 6-14-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

FANCY WATCH HOUSE, *119, G. P. O., Madras.*

# வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும்

திருவாளர். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்.,
(வக்கீல், திருநெல்வேலி.)

மேகசஞ்சாரமில்லாத இராக்காலங்களில், நாம் ஆகாயத்தைச் சிறிதுநேரம் உற்றுநோக்கி ஆராய்வோமாயின் நமது கவனம் மேன்மேலும் வானத்தை நோக்கி இழுக்கப்படுவதை உணர்கிறோம். சாதாரணமாக நாம் காணுகிற சந்திரன் தவிர பல்லாயிரக்கணக்கான நக்ஷத்திரங்கள் வானமுழுவதும் இரத்தினங்களைப் பதித்தாற்போல ஆங்காங்கே பிரகாசமாகச் சுடர்வீசி ஜொலிக்கின்றன. இன்னும் கொஞ்சம் கவனித்தால் மங்கலாகப் பிரகாசிக்கும் சிறிய நக்ஷத்திரங்களும் மேக படலங்கள் போன்ற தாரகைக்கூட்டங்களுந் தென்படுகின்றன.

மேற்கண்ட யாவும் வானத்தை ஒருமுறை பார்த்தவுடனேயே புலனாகின்றன. சிலநாட்கள் தொடர்ச்சியாகக் கவனித்து வருபவர்கள் இன்னும் பல விஷயங்களைக் கண்ணுறலாம். வானத்தில் தோன்றும் ஒவ்வொரு பொருளும் பூமியின் நித்திய கதியினால், அதாவது பூமி தினந்தோறும் ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால் கீழ்த்திசையில் தோன்றி மேற்றிசையில் மறைகின்றன. அத்துடன் நக்ஷத்திரக்கூட்டங்கள் யாவும் ஒவ்வொரு நாளுஞ் சிறிது சிறிதாக மேற்றிசை நோக்கி நகர்ந்துகொண்டே செல்லுவதைக் காணுகிறோம். அதாவது, குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் தோன்றிய ஒரு நக்ஷத்திரம், மறுநாள் அதே காலத்தில் அதே யிடத்திலிராமல் கொஞ்சம் மேற்றிசையிலிருக்கிறது. இன்றிரவு சரியாகப் 10-மணிக்கு ஒரு பனை உயரத்திலிருந்த நக்ஷத்திரம் மறுநாள் அதே இடத்திற்கு 9-மணி 56-நிமிஷத்திற்கு வந்துவிடுகிறது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக மேற்கே விலகிப்போய் ஒரு வருஷகாலத்தில் மறுபடியும் அதேயிடத்தில் அதே காலத்தில் தென்படுகின்றது. இன்னும். இவ்விதமாக மேற்றிசை நோக்கி நகர்ந்து செல்லும் தாரகைக் கூட்டங்களிடையே சில நக்ஷத்திரங்கள் (உண்மையில், சில கிரஹங்கள்) கீழ்நோக்கி நகர்ந்து செல்லுவதைக் காணுகிறோம். கிழக்கே நகர்ந்து கொண்டிருக்கும் இக்கிரகங்கள் சில சமயங்களில் ஒரே இடத்தில் நின்று சில நாட்கள் மேற்கே நகர்ந்து பழையபடியும் கிழக்கே நகர ஆரம்பிக்கின்றன.

வானத்தில் தோன்றும் இப்பொருள்கள் என்ன? அவைகளுக்கும் நாம் வசிக்கும் பூமிக்கும் என்ன சம்பந்தம்? அவைகள் எவ்வாறு ஆகாயத்தில் ஓடுகின்றன? அவ்வோட்டத்திற்கும் நமது பஞ்சாங்கத்திற்கும் என்ன சம்பந்தம்? என்பவைகளைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

வானத்தில் தோன்றும் யாவற்றையும் சூரியமண்டலம் நக்ஷத்திர மண்டலம் என இரண்டு குடும்பங்களாக எளிதிற் பிரித்துவிடலாம். சூரியமண்டலம் என்பது, சூரியனையும், சூரியனைத் தலைவனாகக்கொண்டு அதைச் சுற்றிவரும் கிரகங்களையும், கிரகங்களைச் சுற்றிவரும் உபகிரகங்களையும், சூரியன் அல்லது இதர கிரகங்களின் ஆகர்ஷணசக்தியால்கட்டுப்பட்டுச் சுழன்றுவரும் வால்வெள்ளிக் கூட்டங்களையும், ஒவ்வொரு கிரகத்தைச் சுற்றித் திரிகின்ற உலகக்கூட்டங்களையும் (metiorite) குறிக்கும். நக்ஷத்திரமண்டலமென்பது நக்ஷத்திரக்கூட்டங்களைக் குறிக்கும். ஒவ்வொரு நக்ஷத்திரமும் நமது சூரியமண்டலத்தைப்போன்ற அவ்வளவு பெரிய குடும்பமென்றும், அவைகளுக்கும் கிரஹங்கள் உபகிரகங்கள் முதலியன உண்டென்றும் மிகவும் அதிகமான தூரத்திலிருப்பதினாலே அவைகள் சிறியனவாகத் தோற்றுகின்றனவென்றும் வானசாஸ்திரிகள் முடிவுகட்டியிருக்கிறார்கள்

சூரியமண்டலத்தின் முக்கியமான கிரகங்கள் புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரெனஸ், நெப்டியூன் என எட்டு. கிரகங்கள் யாவும் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதோடு சூரியனையும் சுற்றிவருகின்றன. அவைகளில் நமக்கு முக்கியமானது பூமியின் உபகிரஹமான சந்திரன். உபகிரஹங்கள் தம்மைத்தாமே சுற்றிக்கொள்வதோடு கிரஹங்களையும், சூரியனையும் சுற்றி வருகின்றன. இராகு கேது என்பவைகள் கிரஹங்கள் அல்ல. சூரியவீதியுஞ் சந்திரவீதியுஞ் சந்திக்கும் இரண்டிடங்களுக்கே அப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சூரியவீதி என்பது சூரியனுடைய வருஷ கதியை அனுசரித்து சூரியன் நகரும் பாதை. சூரியன் நக்ஷத்திரக் கூட்டங்களுக்கிடையே ஒவ்வொரு நாளும் சிறிது தூரம் கீழ்த்திசை நோக்கி நடந்து



கொண்டு வருகிறதாகத் தோற்றுகிறது. தானிருக்குமிடத்திலிருந்து புறப்பட்டு ஆகாயத்தை வட்டமாகச் சுற்றி, மறுபடியும் அதே யிடத்திற்கு வருவதற்குச் சூரியனுக்கு ஒரு வருஷகாலமாகிறது. இவ்வாறு சூரியன் ஆகாயத்தில் சுற்றிவரும் வழி சூரியவீதி என்றழைக்கப்படுகிறது. சந்திரவீதி என்பது சந்திரன் அம்மாதிரியே ஆகாயத்தில் சுற்றிவரும் பாதை. இவ்விரண்டு பாதைகளும் ஒன்றுக்கொன்று சாய்வாக இருப்பதால், அவைகள் இரண்டிடங்களில் சந்திக்கின்றன. அவ்விடங்களே இராகு கேது என்றழைக்கப்படுவன.

கிரஹங்களும் உபகிரஹங்களும் அனேகமாகச் சூரியவீதியை விட்டு அதிகமாக விலகாமல் அதை அனுசரித்தே ஓடுகின்றன. சூரிய வீதி வானமத்தியரேகைக்கு (celestial equator வானத்தில் உத்திர துருவத்திற்கும் தக்ஷிண துருவத்திற்கும் மத்தியாக ஓடும் ரேகை) 23 டிகிரி சாய்ந்திருக்கிறது. இதனால் சூரியவீதி, வான மத்திய ரேகையை இரண்டிடங்களில் சந்திக்கிறது. சூரியன் தெற்கிலிருந்து வடக்கே வரும்போது ஒரு தடவையும், வடக்கிலிருந்து தெற்கே வரும்போது மற்றொரு தடவையும் சந்திக்கிறது. இவைகள் முறையே மேஷ சங்கராந்தி (First point of Aries) என்றும் துலா சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகின்றன.

சூரியவீதியைப் பன்னிரண்டு ராசிகளாகவும் இருபத்தேழு நக்ஷத்திரங்களாகவும் பிரித்திருக்கிறார்கள் முதல் ராசியாகிய மேஷத்தையும், முதல் நக்ஷத்திரமாகிய அசுபதியையும் மேஷ சங்கராந்தியிலிருந்து ஆரம்பித்து வந்தார்கள். ஒருகாலத்தில் மேஷ சங்கராந்தி அசுபதி என்னும் நக்ஷத்திரத்தின் சமீபத்திலேற்பட்டுக் கொண்டிருந்ததால் அசுபதியை முதல் நக்ஷத்திரமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால் பூமியின் துருவங்கள் மெதுவாக வட்டமிட்டுச் சுற்றுவதால் (Precession of the Equinoxes) மேஷசங்கராந்தி ஏற்படுமிடம் ஒவ்வொரு வருஷமும் அசுபதிக்குக் கொஞ்சம் மேற்கே நகர்ந்துகொண்டே போகிறது. இப்போது மேஷ சங்கராந்தி ஏற்படுமிடம் அசுபதிக்குச் சுமார் 22 டிக்கிரி தூரம் மேற்கிலிருக்கிறது. உண்மை மேஷ சங்கராந்தி பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருக்கும் நாளுக்கு 22 நாட்களுக்கு முன்னரே ஏற்படுகிறது. ஆனால் நாம் அதை அறியாது பழைய வழக்கத்தையே அனுசரித்து வருகிறோம். இவ்விஷயங்களைப்பற்றி ஆராயப் புகு முன்னர் சூரியன், கிரகங்கள், உபகிரகங்கள் முதலியவைகளின் அமைப்பைப் பற்றியும் ஓட்டத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ளுதல் நல்லது.

## சூரியன்

இப் பூமண்டலத்திலுள்ள சகல உயிர்களுக்கும் ஜீவதாதுவாக விளங்குவது சூரியனே. பூமியும் இதர கிரகங்களும் தங்கள் தங்கள் நிலையில் நின்று தற்சுழற்சியோடு சூரியனையும் சுற்றி வருவதற் கேதுவாயிருப்பதும் சூரியனே. சூரியனில்லாதபோது, கிரகங்கள் எல்லாம் ஒரு கட்டுப்பாடான சக்திக்குள்ளடங்காமல் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு, பரந்த கடல் வெளியில் மாலுமி யில்லாக் கப்பல் போல அலைந்து திரிய நேரிடும். இன்னும் பூமியை அந்தகாரமான இருளும் தாங்கொணாக்குளிரும் கைப்பற்றிக்கொண்டு உயிர்வாழ்வனவற்றை நசிக்கச் செய்துவிடும். சூரியனுடைய கதிர்கள் சகல ஜீவராசிகளினுடைய உடல் நலத்திற்கு எவ்வளவு அவசியமென்பது, குளிர் காலங்களில் கதிரவனுடைய கிரணங்கள் அளவிலுந் தன்மையிலுங் குறைவதினால் ஏற்படுகிற தொத்துநோய் வாய்ப்பட்டிருக்கும் உயிர்களைக் கணக்கிட்டுப் பார்க்கின் தெள்ளிதின் விளங்கும்.

தன்னலங்கருதாது இவ்வளவு நன்மைகளையும் நயக்குச் செய்துவரும் இச்சூரியன் நாம் வசிக்கும் பூமிக்குச் சுமார் 9 கோடிமைல் தூரத்திற் கப்பாலிருக்கிறது. மிக அதிகமான தூரத்தையும் சரிபாக அளக்கக்கூடிய நுணுக்கமான அளவுக்கருவிகளினுதவியால் இவ்வளவு பிரமாண்டமான தூரத்தையும் சரியாக அளக்கக்கூடும். பருமனில் சூரியன் பூமியைவிட சுமார் 13-லக்ஷம் மடங்கு பெரியது. ஆனால் தூர வித்தியாசத்தினால் நமக்கு அஃது ஒரு சிறிய தட்டளவாகத் தோற்றுகிறது. வெப்பத்தில் சூரியனுக் கிணையாக இப்பிரபஞ்சத்தில் ஒன்றையுஞ் சொல்லமுடியாது. இவ்வுலகிலுள்ள நெருப்பையெல்லாம் ஒன்று சேர்த்தாலும் சூரிய வெப்பத்தில் ஆயிரத்தில் ஒருபங்கு வெப்பங்கூடத் தராது.

சூரியன் தனது மண்டலத்தின் நடுவினின்று விலகாமலிருந்து கொண்டு, தன்னைத்தானே 26 தினங்களுக்கு ஒரு முறை சுற்றிக்கொள்கிறது. சூரியன், கிரஹங்கள், வால்வெள்ளி முதலியவைகளால் ஆக்கப்பட்ட தனது பெரிய குடும்பத்தோடு ஆகாய வெளியில் ஒரே மொத்தமாக நகர்ந்து கொண்டிருந்

தானும், தனது மண்டலத்தில் தனது ஸ்தானத்தை விட்டு விலகுவதில்லை. தூரதிருஷ்டி கண்ணாடியின் மூலமாக நாம் சூரியனைக் கவனித்துப் பார்த்தால், பல கரும்புள்ளிகள் தென்படுகின்றன. இப்புள்ளிகள் சூரியனுடைய மேற்பரப்பிலிருக்கிற, இருட்டான பெரும் பள்ளத்தாக்குகளாகும். சூரியன் அக்கினிக் குளம்பினாலாக்கப்பட்ட ஒரு பெருங்கோளமாகையால், அஃது விரைவாகத் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளும்போது அதன் மேற்பரப்பில் பலவிதக் குழப்பங்கள் ஏற்படுவதால், இக்களங்கங்கள் தோன்றுகின்றன. அங்கு எவ்விதக் குழப்பங்கள் நேரிடுமென்பதை, நமது பூமண்டலத்தில், சமுத்திரத்திலும், ஆகாயத்திலும், ஏற்படுகிற சுழல்களின் தன்மையால் ஒருவாரு அனுமானித்துக் கொள்ளலாம். வானசாஸ்திர நிபுணர்கள் சூரியன்மீது, பெருங்களங்கங்கள் தோன்றுங் காலங்களில், பூமியில் யுத்தத்தினாலும், பஞ்சத்தினாலும், துன்பங்கள் சம்பவிக்குமென முடிவுகட்டியிருக்கிறார்கள். சிறிய களங்கங்கள் தோன்றுவதால் இவ்வளவு பெருந்துன்பங்கள் நேரிடுவது உண்மையாயிருப்பின், பூரண சூரிய கிரகணகாலங்களில் எவ்வளவு துன்பங்களுண்டாகுமென்பதை நாம் அளவுகட்ட முடியாது. இதை உத்தேசித்துத்தான், நமது பண்டைய இந்தியாவான நூல் வல்லோர், கிரஹணகாலங்களில் நம்மை ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரித்திருக்கிறார்கள் போலும்.

## பூமியும் தினகதியும்

நாம் வசிக்கும் பூமி உருண்டை வடிவமானது. ஆதியில் சூரியனைப்போன்று இதுவும் அக்கினிக் குளம்பினாலாக்கப்பட்ட கோளமாயினும், நாளாவட்டத்தில் தனது வெப்பத்தை இழந்து, பூமி மேல்பரப்பு இறுகிக் கெட்டியாய் விட்டது. இப்பொழுதும் பூமியின் மத்தியபாகம் அக்கினிக் குளம்பாகவேயிருக்கிறது. சூரியனுடைய ஆகர்ஷணசக்தியிற் கட்டுண்டு, சூரியனுக்குச் சுமார் $9\frac{1}{2}$-கோடி மைல் தூரத்திற்கப்பால் நின்றுகொண்டு சூரியனை ஒரு பெரும் வட்டமாகச் சுற்றிவருகிறது. சூரியனிடமிருந்து இஃது மூன்றாவது கிரகம். கீழ்மேல் சுற்றளவு சுமார் 24-ஆயிரம் மைல்கள் உள்ளது.

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால், இரவும் பகலும், ஏற்படுகிறது. மேற்கிலிருந்து, கிழக்கு முகமாகப் பூமி வேகமாகச் சுற்றுகிறது. ஆகையால் வானஜோதிகள் யாவும், கிழக்கிலிருந்து மேற்கு முகமாக . ஒடுவது போல் தோன்றுகின்றன. ஒரு சக்கரம் சுற்றும் பொழுது அதன் மத்திப்புள்ளி எவ்வாறு அசையாமலிருக்கிறதோ அதேமாதிரி பூமியின் அச்சு (அதாவது பூமியின் வடதுருவம் தென்துருவம் இவைகளின் வழியாகப் போகும் ஓர் நேர் கோடு) வானத்தில் எந்தயிடத்தில் சந்திக்கிறதோ அந்தயிடமும் அசையாதிருக்கிறது. பூமியின் அச்சு வடதிசையில் துருவ நக்ஷத்திரத்திற்கு அருகாமையில் சந்திக்கிறது. அத்துருவதாரம் வருஷமுழுவதிலும், இரவும் பகலும் அசையாது அதே இடத்திலிருக்கிறது. வானத்தில் தென்துருவத்திலோ, அல்லது அதற்கு அருகாமையிலோ, பிரகாசமான நக்ஷத்திரங்களில்லை. இருந்தாலும் நாம் வடகோளார்த்தத்திலிருப்பதால் நமக்கு அது தென்படப் போகிறதில்லை.

பூமி 23-மணி 56-நிமிஷத்திற்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிறது. நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் அசையாமலிருக்கின்றன. இன்று காலை ஒரு நக்ஷத்திரத்தை அடையாளமாக வைத்துக்கொண்டு, மறுநாள் காலை அதே நக்ஷத்திரம், அதே யிடத்தில் தோற்றுவதற்கு எவ்வளவு காலமாகிறதென்பதை அளவிடின், 23-மணி 56-நிமிஷமேயாகிறது. இதனால் பூமி நக்ஷத்திரங்களை அபேக்ஷித்து, ஒரு நாளைக்கு 4-நிமிஷநேரத்திற்கு முன்னாலேயே சுற்றி விடுகிறதென்று தெரிகிறது. ஆனால் சூரியன் மாத்திரம் ஒரு நாளில் தோன்றிய இடத்தில் மறுநாள் தோன்றுவதற்குச் சரியாக 24-மணி நேரமாகிறது. இவ்வித்தியாசத்திற்குக் காரணம் பூமியின் வருஷகதியே. பூமி சூரியனைச் சுற்றி வருதலால் ஒவ்வொருநாளும் தன்னுடைய பாதையில் கொஞ்சம் நகர்ந்து கொண்டே வருகிறது. அவ்வாறு நகர்வதால் மற்றொரு முறை சூரியனைக்காண பூமி தன்னைத்தானே ஒரு சுற்றுச் சுற்றிக் கொள்வதோடு இன்னுங் கொஞ்சம் அதிகமாகச் சுற்றவேண்டியதிருக்கிறது. அதற்கு நான்குநிமிஷநேரம் அதிகமாகிறது. மற்றொரு முறையாகச் சொல்லின், சூரியன் ஆகாயத்தில் ஒவ்வொரு நாளும், கீழ்த்திசை நோக்கி நகர்ந்து, செல்வதாகத் தோற்றுகிறதென்று முன்னமே சொன்னோம். ஆகையால் பூமி தன்னை



முற்றிலும், ஒரு சுற்று சுற்றிக்கொண்ட பிறகும், நகர்ந்துபோன சூரியனைக் காணுவதற்கு இன்னும் நான்கு நிமிஷநேரம் அதிகமாகச் சுற்ற வேண்டியதிருக்கிறது. இக்காரணத்தினாலேதான், நக்ஷத்திரநாளுக்கும், சூரிய நாளுக்கும் எப்பொழுதும் நான்கு நிமிஷ வித்தியாசம் ஏற்படுகிறது. ஜோதிட வல்லுநர், லக்கினங்காண, நக்ஷத்திர நாட்களையே ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். அது பற்றிப் பின்னர் பஞ்சாங்கப் பகுதியில் விரிவாக எழுதப்படும்.

## பூமியின் வருஷகதி.

பூமி நக்ஷத்திரத்தை யபேக்ஷித்து, 23-மணி 56-நிமிஷத்திற்கு ஒரு தரம் தன்னைச் சுற்றுவதாகச் சொன்னோம். நாம் வானத்தைக் கவனமாகச் சில மாதங்கள் நோக்கி வந்தால், குறிப்பிட்ட ஒரு நக்ஷத்திரத்திலிருந்து, சூரியன் விலகிக்கொண்டேபோய், ஒரு வருஷ காலத்தில் அதே நக்ஷத்திர மிருக்குமிடத்திற்கு வந்து சேருவதைக் காணுகிறோம். உண்மையில் சூரியன் நகருவதில்லை. இஃது பூமி சூரியனைச் சுற்றி வருவதால் ஏற்படுந் தோற்றமேயன்றி வேறல்ல. மேற்சொன்ன ஓட்டத்திற்குப் பூமியின் வருஷகதி என்றும், சூரியனுடைய வருஷகதித் தோற்றமென்றும் பெயர்.

இவ்வாறு பூமி சூரியனை சுற்றி வருவதற்கு ஏறக்குறைய $365\frac{1}{4}$ நாட்கள் ஆகின்றன. பூமி ஒரு நக்ஷத்திரத்திலிருந்து புறப்பட்டுத்தனது வருஷ யாத்திரையை முடித்துவிட்டு, மறுபடியும் அதே நக்ஷத்திர மிருக்குமிடத்திற்கு வருவதற்கு 365 நாட்கள் 6-மணி 9-நிமிஷம் 9-செகண்டுகள் ஆகின்றன.இதைத்தான் நக்ஷத்திரமான வருஷம், அல்லது நிராயண வருஷம் என்றழைக்கிறார்கள் (Side-real Year) ஆனால் சூரிய வீதியும், வானமத்திய ரேகையும் சந்திக்கு மிடத்திலிருந்து, அதாவது உண்மை மேஷ சங்கராந்தியிலிருந்து, சூரியன் புறப்பட்டு அதேயிடத்திற்கு மறுமுறை வந்து சேருவதற்கு, 365 நாட்கள் 5 மணி 48 நிமிஷம் 48 செகண்டுகளாகின்றன. இதைச் சாயன வருஷமென்றழைக்கிறார்கள். (Tropical-Year). இவ்விருவகை வருஷங்களையும் நம்மிந்தியப் பஞ்சாங்கங்களில் எவ்வாறு உபயோகப் படுத்துகிறார்களென்பதைப் பற்றி பின்னர் தெளிவாகக் கூறப்படும்.

## அயனங்கள்.

துருவதாரகம், வருஷ முழுவதிலும், அதாவது பூமி தன் வீதியில் எந்த ஸ்தானத்திலிருந்தாலும், தானிருந்த விடத்திலேயேயிருக்கிறது. இதனால் பூமியின் அச்சு துருவதாரத்தையே நோக்கி யிருக்கிறதென்று தெரிகிறது. பூமியின் அச்சு அதன் வீதிமட்டத்திற்குச் செங்குத்தா யிருக்கும் பக்ஷத்தில், சூரியன் எப்போதும், ஒரே யிடத்தில் தோன்றி, ஒரே யிடத்தில் மறையும். இரவு பகல் எப்பொழுதும், ஒரே அளவாக விருக்கும். ஆனால் சூரியன் ஆறுமாத காலம் வடக்கு முகமாகவும், ஆறுமாத காலம் தெற்கு முகமாகவும், நகருவதை நாம் காணுகிறோம். இதற்குக் காரணம் பூமியின் அச்சு அதன் வீதி மட்டத்திற்கு $66\frac{1}{2}$ டிக்கிரி சாய்ந்திருப்பதே. இதனால் சூரியன் பூமி மத்திய ரேகைக்கு, வடக்கில் $23\frac{1}{2}$ டிக்கிரியும், தெற்கில் $23\frac{1}{2}$ டிக்கிரியும் நகருவதாகத் தோற்றுகிறது. உத்தர அயனத்தின் கடைசிதினம், ஜூன் மாதம் 22ம்தேதி அன்று வடகோளார்த்தத்திலுள்ளவர் களுக்கெல்லாம் நீண்ட பகலாகவிருக்கும். உத்தர துருவதேசத்திலுள்ளவர்களுக்கு சூரியன் நெடுநாள் மறையாது பிரகாசித்துக் கொண்டிருப்பான். தக்ஷிண துருவத்தை இருள் மூடிக்கொண்டிருக்கும். தக்ஷிண அயனத்தின் கடைசி நாள், டிசம்பர் மாதம் 22ந்தேதி அன்று வடகோளார்த்தத்தில் நீண்ட பகலும் சுருங்கிய இரவுமாக இருக்கும். வடதுருவம் இருள் மூடிக்கிடக்கும். தென் துருவத்தில் பலநாள் சூரியன் மறையாது பிரகாசித்துக் கொண்டிருப்பான்.

(தொடரும்)




# பெண் கல்வி

திரு. வ. வே. சுப்பிரமணிய ஐயர்.

[பித்தனிற்கண்டது]

வெள்ளி வீதியும், ஔவையும், அள்ளூர் நன் முல்லையும், ஒக்கூர் மாசாத்தியும் இன்னோரன்ன கவிகுல திலகங்களும் விளங்கிய தமிழ் நாட்டில் மாதருக்குக் கல்வி பயிற்ற வேண்டியது அவசியம் என்று வற்புறுத்தும் நாளும் வந்தது விந்தையினும் விந்தை. ஆனால் சென்ற சில வருஷங்களாக இவ் வவசியம் அறிவுடைய எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுவிட்டது. இருப்பினும் நமது பெண் மக்களுக்கு எவ்விதமான கல்வி அளிக்கவேண்டும் என்ற விஷயத்தை ஆழ்ந்து யோசித்து நிச்சயிக்க யாரும் முன் வந்ததாகத் தெரியவில்லை. அரிவரி வகுப்பு முதல் பி. ஏ. வகுப்பு முடியும் வரை ஆண் மக்களுக்கு வைத்திருக்கும் பாடங்களையே பெண் மக்களுக்கும் வைத்துத்தான் ஆங்கிலப் பாடசாலைகள் போதித்து வருகின்றன. ஆண் மக்களுக்கென்று ஏற்படுத்தியிருக்கும் போதனை முறைகளே அவர்களுக்குத் திண்மை, செம்மை, தீரம், தர்மாவேசம் முதலிய நற்குணங்களைப் புகட்டவாவது, சாமர்த்தியத்தைத் தரவாவது ஆற்றலற்றவையாக இருக்கின்றன என்று எங்கு பார்த்தாலும் கிளர்ச்சி உண்டாகிக்கொண்டிருக்கையில், பெண் மக்களுக்கு அதே கல்வியைக் கொடுக்க முயலுதல் பேதமையே யாகும் என்று நாம் சொல்ல வேண்டுவதில்லை. ஆகையால் இங்கு பெண் கல்வியின் போக்கு எவ்விதமிருக்கவேண்டும் என்று விசாரித்தால் பயனற்ற காரியமாகாது என நினைக்கிறோம்.

கல்வியின் பயன் வாழ்க்கைக்குப் பூரணத்துவம் கொடுப்பதுதா னாகையால், பெண் மக்களுக்கு என்ன கல்வி கொடுத்தல் தகுதி என்ற கேள்வியின் விடையானது பெண்மக்களின் வாழ்க்கை எவ்வித மிருக்கவேண்டும் என்ற கேள்வியின் விடையைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் பின் சொல்லிய விஷயத்தையே முதலில் விசாரிப்போம்.

நமது மாதரின் வாழ்க்கை நோக்கந்தான் என்ன? அவர்கள் குமஸ்தாக்களாக இருந்துகொண்டு சம்பாதிப்பதா? அல்லது மாஜிஸ்ட்ரேட், தாசில் முதலிய உத்தியோகங்கள் பார்த்து ராஜ்ஜிய நிர்வாகத்தை நடத்துவதா? அல்லது கடை கன்னிகளில் உட்கார்ந்துகொண்டு வியாபாரம் செய்வதா? அல்லது யந்திர சாலைகளிலும் ஆலைகளிலும் புகுந்து தச்சர் செய்யும் வேலைகள் செய்து அவைகளை நடத்துவதா? இவை ஒன்றும் அல்ல என்று அநேகமாய் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். மற்றும் என்னதான் அவர்கள் வாழ்க்கையின் லட்சியம்? நமக்குத் தோன்றியமட்டில் இவ்விலட்சியத்தை இரண்டாகக் கூறலாம். ஒன்று பொது லட்சியம், மற்றது ஆத்ம லட்சியம் அல்லது தனி லட்சியம். எல்லா மாதருக்கும் பொதுவான நோக்கம் இதுவாக இருத்தல் வேண்டும். அதாவது தாங்கள் பிறந்த குடும்பத்துக்கும் புகுந்த குடும்பத்துக்கும் தாயகமாகவும் ஆதாரமாகவும் இருக்க வேண்டும். குடும்பத்தின் நடப்பும், அதன் நல்ல பெயரும், அதன் மங்களமும் ஆனந்தமும் ஸ்திரீகளைப் பொறுத்தவை. மனிதன் வெயிலில் அலைந்து திரிந்து முரட்டு வேலைகள் செய்து மற்றொருவருடைய பொறுமைக்கும் பகைமைக்கும் உள்ளாகிக் குடும்பம் நடத்துவதற்கு இன்றியமையாத பொருளைச் சம்பாதித்து வருகிறான். ஆனால் வீட்டினுள் புகுந்ததும் அவனுடைய கஷ்டங்களையும் விசாரங்களையும் போக்கி அன்பினால் அவனுடைய இருதயத்திற்கு உயிர் கொடுத்து விவகார உல



கத்தில் நேரும் இடையூறுகளை வெல்லும்படியான ஆற்றலைத் தருவது பெண்மணிகளின் காரியமாகும். இப்படிக் குறையா யிருக்கும் ஆண்மக்களின் வாழ்க்கையை நிரப்பிக் குடும்பத்தை முழுதாக்கல் ஸ்திரீகளின் பொது தர்மம். அவர்களுக்கு இப்போது தர்மத்தோடு தனி தர்மம் ஒன்று உண்டு என்று மேலே சொன்னோம். அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஜீவனாதலால் தற்பயிற்சியில் ஆரம்பித்துப் பூரணத்துவம் பெறும் வரையில் உழைத்து வருவதே.

ஸ்திரீகள் தற்பயிற்சி செய்துகொண்டுவந்து தங்களுக்குக் கடவுள் கொடுத்துள்ள சர்வ சக்திகளையும் விகாசப்படுத்தித் தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும், தங்கள் நாட்டுக்கும் உலகனைத்துக்கும் சக்திக்கேற்றபடி நன்மைபுரியவேண்டும் என்பதை மேல்நாட்டு நாகரிகத்தைப்பெற்றோர் அனைவரும் ஒருங்கேஒப்புவார்கள். ஆனால் ஸ்திரீகள் ஏன் புருஷர்கள் போலவே உத்தியோகங்கள் பார்த்தும் தொழில்கள் செய்தும் சம்பாதிக்க முயலக்கூடாது என்று அவர்களிற் பலர் வினவுகிறார்கள். ஆனால் எந்த மேல்நாட்டாரின் காற்று அடித்து இவர்கள் இவ்விதம் வினவுகிறார்களோ அம் மேல்நாட்டாருள் மகா மேதாவிகளும் ரஸிகர்களுமாயிருப்பவர்களே ஸ்திரீகளின் விஷயத்தில் கீழ்நாட்டார் கொண்டிருக்கிற லட்சியமே உயர்ந்தது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். மில்டன் என்னும் மகாகவி யூத ஐதீகப்படி ஆதி ஸ்திரீ புருஷர்களான ஆதாமையும் ஏவாளையும்பற்றிப் பேசும்போது, "அவன் தியானத்துக்கும் தீரத்துக்கும் என்று ஆக்கப்பட்டவன். அவளோ மென்மைக்கும் பரவசமாக்கும் எழிலுக்குமென ஆக்கப்பட்டவள். அவள் தலையினின்று இடைவரையில் வீழ்ந்து ஆற்றின்சிற்றலைகள் போலச் சுருண்டு கொடிபோலத் துவண்டிருந்த கூந்தலானது அவள் தன் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டியவள் என்று காட்டியது. ஆனால் அவன் ஆட்சியும் மிருதுவா யிருக்கவேண்டும், அவளுடைய வணக்கமும் விநயம் கலந்த பெருமிதமுள்ளதா யிருக்கும்" என்று சொல்லுகிறான். இவனைப் பண்டைய நாளையப் பேர்வழி என்று தள்ளி விடுவோருக்கு நம் காலத்தில்தான் இறந்து போயிருக்கிற ரஸிக சிகாமணியான ரஸ்கின் என்னும் ஆங்கிலேயனுடைய அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டுவோம். சொல்லுகிறான்: அவளுடைய தன்மை யாஸ்தானத்தாலும் ஸ்திரீயானவள் சகல அபாயங்களினின்றும் தீங்குகளினின்றும் காக்கப்படுகிறாள். காவலின்றித் திறந்த வெளியாக இருக்கும் உலகத்தில் முரட்டுத்தொழில் செய்வதில் மனிதன் அபாயங்களோடும் இடையூறுகளோடும் மல் கொடுக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் தோல்வியும், குற்றமும் நீக்கமுடியாத தவறும் அவனுக்கு லபிக்கின்றன. அடிக்கடி அவனுக்குக் காயம் படுகிறது. அடிக்கடி பின்னடைந்து விடுகிறான். அவன் புத்தி அவனைத் தவறான வழிகளில் செலுத்தி விடுகிறது. கடைசியாக அவன் மேன்மையை இழந்தே விடுகிறான். ஆனால் இத்தீங்குகளனைத்தினின்றும் அவன் ஸ்திரீயைக் காக்கிறான். அவள் ஆளுகின்ற கிருகத்தினுள்ளே அவளே விரும்பி அழைத்தாலொழிய, ஓர் அபாயமாவது, தீங்காவது, குற்றமாவது, தவறாவது பிரவேசிக்க வேண்டுவதில்லை. கிருகம் என்பதன் தன்மையே இதுதான். அது சாந்திக்கு இருப்பிடம். தீங்கினின்று மாத்திரமின்றி, சர்வ பயத்தினின்றும், ஐயத்தினின்றும், பிளவுகளினின்றும் ரக்ஷிக்கும் நிழலாகும். அது இக்குணமில்லாதவரையில் கிருகமாகாது. ஆனால் எவ்வளவுக்கு அது புண்ணியஸ்தலமாக இருக்கிறதோ, எவ்வளவுக்கு அது கிருகதேவதைகள் வாழும் திருக்கோயில்களாக இருக்கிறதோ அவ்வளவுக்குத் தான் அது கிருகம் என்ற பெயருக்கும் புகழுக்கும் அருகமுள்ளதாயிருக்கும். சதியான மனைவி எவ்விடத்திற்கு வந்தாலும் இந்த வீட்டைத் தன்னோடு கூடவே கொண்டு வருகிறாள். அவள் இருக்குமிடத்தில் நக்ஷத்திரங்களைத் தவிர வேறு கூரை இல்லாதிருக்கலாம். மின்மினிப் பூச்சியின் மினுமினுப்பைத் தவிர வேறு அக்னி இல்லாதிருக்கலாம். இருப்பினும் அவள் இருக்குமிடமெல்லாம் வீடே.

இதுதான் நம் நாட்டில் தொன்றுதொட்டு வந்திருக்கிற கொள்கையும். கால சக்கரத்தின் சுழற்சியால் நம் நாட்டவர் பெருங்குணங்களை இழந்து, அதனால் செல்வத்தையும் சௌக்கியத்தையும் கௌரவத்தையும் இழந்து நிற்கும் இக்காலத்தில் நமது பழைய கொள்கைகளுள் குற்றமில்லாதவைகூட அவமதிக்கப் படுகின்றன. இருப்பினும் அவற்றினுள்ள சத்தியம் அவற்றிற்கு ஜீவனும் கொடுக்கிறது. மேல் நாட்டவரிற் பெரியோரின் அபிப்பிராயமும் இதை ஒட்டி இருக்கிறதென்று காண்கை

யில் முதலில் அவமதித்தவரில் அனேகரும் இக்கொள்கையை நன்கு மதிப்பார்களென்பதில் ஐயமில்லை. ஆகையால் நமது ஸ்திரீகளின் லட்சியம் நற்குணங்களினுலும் அன்பினுலும் ஆதரவினுலும் தம்மைப் பெற்ருேருக்கும் கொண்டாருக்கும் ஆறுதலைத் தருகிற மனதுக்கினிய கிருகத்தை உண்டாக்கித் தருதலும், சேதனமுள்ள ஜீவன் என்கிற பாவத்தில் தம் அறிவையும் இருதயத்தையும் விரியச் செய்து கொள்ளுதலும் என்போம். லட்சியம் இவ்வாருனல், நாம் பெண் மக்களுக்குக் கொடுக்கும் கல்வி, இந்த லட்சியத்தைச் சாதித்துத் தரத்தக்கதாயிருத்தல் வேண்டும். ஆயின் அஃது எவ்விதமான கல்வி ?

முதலில் நமது பெண் திடகாத்திரவதியாக இருக்கவேண்டும். ஏழுவயது வரையிலுமாவது அவள் யதேச்சையாக விளையாட வேண்டும். பாண்டில் விளையாடுதல், மத்து இழுத்தல், கோலாட்டம் முதலிய ஆட்டங்களால் அவளுடைய அவயவங்கள் உறுதிப்படும். சரீரத்தில் ஓர் எழிலும் கை கால்களுக்கு லாகவமும் பிறக்கும். தற்காலம் சிறுவயதிலேயே நல்ல காற்றும் விஸ்தாரமான இடமுமில்லாத பள்ளிக்கூடங்களில் அடைக்கப்பட்டு கூன் விழுந்துபோய், கை கால்கள் பலமற்று, கண்கள் தெளிவற்று ஜீவச் சவங்களைப்போலாகிவிடும் பரிதாபகரமான குழந்தைகளைப் போலில்லாமல் அவள் காட்டில் வளர்ந்த மான் குட்டிபோல லாவண்யமாயும் ஜீவ உற்சாகம் நிரம்பிய அவயவங்களுள்ளவளாயும் விளங்குவாள். பிரகிருதியின் அழகுகளை அவளைவளர்ப்போர் அவளுக்குக்காட்டி அவளுக்குச் சௌந்தர்யப் பிரக்ஞையும் உதார சித்தமும் உண்டாக்குவார்கள். திறந்த வெளியில் அறியக்கூடியவைகளையெல்லாம் அவளே கண்ணுல் பார்த்தும் காதால் கேட்டும் மற்றப் புலன்களால் உய்த்து உணர்ந்தும் அறிந்து கொள்ளும்படி செய்வார்கள். உதாரணமாக திசைகள், சூரிய சந்திர நக்ஷத்திரங்களின் கதி; செடி மரங்களின் குணங்களும் வளர்ச்சியும், மிருகங்கள் பக்ஷிகளின் தீனி, இயற்கை ஒலி முதலியன, மழை, காற்று, நதி, கடல் ஆதியவைகளைப் பற்றிய ஞானத்தை அவளுக்கு மிக எளிதாயும் இனிதாயும் போதித்துவிடலாகும். இனி இவற்ருேடு நல்ல கீர்த்தனங்களைச் சொல்லிக் கொடுத்தலோடு அவளுடைய பிரதம சிக்ஷையை நிறுத்திக்கொள்ளலாம்.

இதன் பிறகு, அல்லது இதன் இடையிலேயே விளையாட்டுப் பராக்காய் அவளுக்கு அக்ஷராப்பியாசம் செய்விக்கலாம். ஏழுவயது வரையில் நாம் சொல்லிய வழியில் வளர்க்கப்பட்ட குழந்தையானவள் அதி சீக்கிரத்தில் எழுதவும் படிக்கவும் கணக்குப்போடவும் கற்றுக்கொண்டு விடுவாள். அக்ஷராப்பியாசம் நடக்கும் காலத்திலேயே நமது போதகர் குழந்தைக்கு ராமாயண பாரதக் கதைகளையும், இலியாது, ஒதிஸ்ஸீ முதலிய மேனுட்டுக் காவியங்களின்கதைகளையும் சுவைபடச் சொல்லியும் முக்கியமான கட்டங்களில் கம்பன் முதலிய கவிஞர் செய்துள்ள செய்யுள்களை மனதிற் படும்படி பாடியும் அவளுடைய அறிவையும் உள்ளத்தையும் அகற்றுவார்கள். வயது ஆக ஆக, நவீன சாஸ்திரங்களும், தேசசரித்திரமும், பூகோளமும் அவளுக்குப் போதிக்க வேண்டும். விசேஷமான சாஸ்திர அபிருசி இருந்தாலொழிய நமது பெண்ணுக்கு அச் சாஸ்திரங்களை விரிவுபடக் கற்பிக்க வேண்டியதில்லை. அவற்றின் மூல சத்தியங்கள் அவளுக்குத் தெரிந்தால்போதும். ஆனுல் இதற்குமாருக, சரித்திரங்களையும் காவியங்களையும் படிக்கும்போது அவற்றில் நடந்ததாக வரும் சம்பவங்களை நேரில் பார்ப்பதுபோலச் சித்திரப் படுத்திக்கொண்டு, அவ்வச் சம்மவங்களுக்கேற்ற சந்தோஷம், வெறுப்பு, கோபம், வியப்பு, ஆதரவு முதலிய உணர்ச்சிகளோடே அவைகளைப் படிக்கக்கடவள். அப்பொழுது தான் உலகத்தின் பேரனுபவங்களெல்லாம் அவளுடைய சொந்த அனுபவங்களாக மாறி, அவளுடைய வாழ்க்கையைப் புகழ்பெற நடாத்துவதற்கும். அவளுடைய குழந்தைகளுக்கு வீரிய உணர்ச்சியும் தரும உணர்ச்சியும் புகட்டுவதற்கும் சாதனமாக ஆகும். ஆகையால் சரித்திரங்களையும் காவியங்களையும் சுவையோடும் உணர்ச்சியோடும் ஆவலோடும் நமது கன்னிகை படிப்பாள். ஆனுல் ஆபாசமான கதைகளும் "நாவல்களும் அவள் கையில் போகாமலிருக்கும்படி முதலில் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பிறகு அவளுடைய பயிற்சியும், ரஸ ஞானமுமே அவளை அவ்விதமான புத்தகங்களைத் தீண்டாமற் செய்து விடும்.

நல்ல சித்தரப்படங்களையும் சிலைகளையும் அவளுக்குக் காட்டியும் கம்பீரமான ஆலயங்களுக்கும் மகுதிகளுக்கும் அவளை யழைத்துப் போயும் நமது போதகர் அவளுடைய ரஸ



உணர்ச்சியை விரிவு படுத்துவர். தவிர ஹார்மோனியம், பியானேக்கள் நீங்கலாக ஏதாவது ஒரு வாத்தியத்தையும் பயிலுவித்து அவளுக்குக் கானமும் சொல்லித்தருவர். சித்திரம் எழுதுவதில் ருசி யிருந்தால் அந்தக் கலையையும் பயிலுவிப்பர். ஆனுல் எல்லாக் கலைகளும் ஒரு பெண்ணுக்கு முற்றிலும் வாராதாகையால் அவளுக்கு எதில் சுவை அதிகம் என்பதை உணர்ந்து அதை அதிகமாகப் பயிலுவித்தும் மற்றவற்றை விட்டோ அல்லது சாமானியமாய்ப் பயிலுவித்தோ விடவேண்டும்.

நமது ஆசாரங்களும் தெய்வ பக்தியும் அவளுக்கு இயல்பாகவே வரும்படி செய்யவேண்டும். நமது பெண் மக்களுக்கு சோபை தருவதும் நம் நாட்டுக்குக் கடைசியாக நின்றிருக்கிற சௌரவத்துக்குக் காரணமாக நிற்பதும் நமது பெண்மணிகளுடைய சீலமும் கற்புமே. ஆகையால் அவற்றின் பிரதான்யத்தை அவள் உணரும்படியும் மகரிஷிகளும் சதி மணிகளும் அலங்கரித்த நமது நாட்டின் புகழும், அவளுடைய பெற்ருேர் புகழும், கணவன் புகழும், தன் ஒருத்தியின் சீலத்தைப் பொறுத்திருக்கிறது என்று அவள் நம்பும்படியும், அந்த நம்பிக்கைக் கேற்றபடி நடக்க வேண்டும் என்கிற உறுதி அவளுக்குப் பிறக்கும்படி செய்வதும் நமது போதனு முறையின் தீர்மானமான முகதாப்பாகும்.

இந்த முறையை இயன்றமட்டில் அநுசரித்தால் நமது குடும்பங்களில் ஒற்றுமையும் அழகும் நாட்டில் சோபையும் ஏற்படும் என்று நினைக்கிறேம்.


மதனரதி

அநேக படங்களுடன் ரூபா 1—8—0

பன்னிரண்டு காண்டங்கள் அடங்கியது.

இந்நூல் வெளிவந்தபின்னரே பலர் பலபெயரிட்டு இதுபோன்ற நூல்களை வெளியிட்டிருக்கின்றனர்.

இது கேவலம் இழிவான மேல்நாட்டு முறைகளை அப்படியே மொழிபெயர்த்து அச்சிடப்பட்டதன்று. நமது முன்னேர்கள் அனுபவத்தில் கண்டு உலகத்தார்க்குப் பரோபகாரமாக எழுதிவைத்து இதுகாறும் இரகசியமாக மறைந்து கிடக்கும் புதையல்போன்ற இன்ப முறைகளும், மேனுட்டு அறிஞர்கள் கூறியுள்ள இன்பரகசியங்களும் இக்காலத்துக் கேற்றபடி நமது நாட்டுக்கு ஒத்துக் கொள்ளக் கூடியதுமான அருமையான விஷயங்களும் அடங்கியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாது வேண்டியது.

(1) விவாகம்புரியும் நண்பர்களுக்கு இன்பக்களஞ்சியம். (2) சரித்திரவான் செல்வத்தை யடையும் பொக்கிஷம். (3) கர்ப்பஸ்திரீகள் துயரத்தை நீக்கும் ஆனந்த சஞ்சீவி. (4) வியாதியணுகாமல் காக்கும் தேகவலிவு. (5) பக்திமான்களுடையும் பேரின்பரகசியம் இவையடங்கியது.

**SOUTH INDIAN BOOK DEPOT,**

(15) *17, Coral Merchant Street, G. T. Madras.*


சென்னை-600 008 12.9.83

# உலக விநோதங்கள்

## பூமிக்குள் கட்டடம்

அமெரிக்காவில் உயரமான கட்டடங்களைக் கட்ட முயல்கின்றனர். ஜப்பானில் பூமிக்குள் ஆழமாகக் கட்ட முயல்கின்றனர். டோகியா நகரத்தில் எண்பது அடுக்குகள் ஆழங்கொண்டதாய் கட்டடமொன்று கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இக்கட்டடம் பூமிக்குள் 1100 அடி ஆழம் செல்லும். மின்சார விளக்குகள், டெலிபோன், ஆள் தூக்கி முதலியன அமைக்கப்படும். இதற்கு இருபத்தைந்து லட்சம் பவுன் செலவாகுமாம்.

## ஒரு விநோதமான வழக்கு

ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு பிரதேசத்தில், தளபதி ஸ்மித் என்பவர் ஒருஜில்லா அதிகாரியாயிருந்தார். இவருடைய நிருவாகத்தின் கீழ் ஒரு சிறைச்சாலை இருந்தது. அதில், தன் மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக மரண தண்டனையை எதிர்பார்த்த ஒருகைதி இருந்தான். இவனைத் தூக்கிலிட வேண்டுமென்ற உத்தரவு மாகாண கவர்னரிடமிருந்து வரவில்லை. அஃதின்றி, கைதியைத் தூக்கிவிட முடியாமலிருந்தது. கடைசியில் உத்தரவு வந்தது. ஆனால் அதைக் கொண்டுவந்த ஆள் இடையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வழிமறிக்கப்பட்டுவிட்டதால் ஆறுவாரம் தாமதித்து வந்தான். மரணதண்டனை விதித்த மூன்று வாரத்திற்குள் கைதி தூக்கி விடப்படவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. தண்டனை விதித்து ஆறுவாரமாகி விட்டதால் தளபதி ஸ்மித் அவனைத் தூக்கிவிடாமல் ஆயுள்பரியந்தம் மரண தண்டனை அநுபவிக்கும்படி செய்தார். இப்படியே ஆறுமாதம் அந்தக்கைதி சிறையிலிருந்தான் பிறகு, சிறைவாசம் தனக்குக் கஷ்டமாயிருக்கிறதென்றும், தன்னை உடனே தூக்கிலிடவேண்டுமென்றும் தளபதி ஸ்மித்துக்கு மனுகொடுத்தான். அது முடியாமற் போகையில், தன்மனைவியைக்கொன்று விட்டபிறகு தான் இறந்துபோகாமற்போனால் தனக்கு மோட்சம் கிடைக்காதென்றும், அங்ஙனம் தான் இறவாமலிருக்கும்படி தளபதி ஸ்மித் செய்துவருவதாகவும் அவர்மீது ஒரு வழக்குத் தொடுத்தான். இந்தவழக்கு பிரிவி கௌன்சில் வரைசென்றது. அங்கு, வழக்கு தொலைஞனுக்கு விரோதமாகவே முடிந்தது.

## கொள்ளிவாய்ப் பிசாசுகளின் பயங்கரமான காட்சி

நாகப்பூர் பத்திரிகை நிருபர் ஒருவர், அவ்வூர் பத்திரிகையொன்றில் சின்னாட்களுக்கு முன்னர் தாம் கொள்ளி வாய்ப் பிசாசுகளைக் கண்டதாக எழுதியுள்ள ஒரு செய்தியின் சாரம் வருமாறு:—

ஒரு நாள், பத்திரிகை நிருபரும் அவருடைய இரண்டு நண்பர்களும், நாகப்பூர் மயானத்துக்கு நேரேயுள்ள சாலையின் வழியாக நடந்து கொண்டிருந்தார்கள். அதுபோது அவர்களுக்கு எதிரே பயங்கரமான பேய்களின் முகங்களை யுடைய மனிதர்களைக் கண்டார்களாம். அவைகளின் வாயினின்று நெருப்பு வெளிவருவதையும் பார்த்தார்களாம். அவைகளுள் சில தீப்பந்தங்களுடன் தப்பட்டை அடித்துக் கொண்டும், பயங்கரமான ஊளையிட்டுக்கொண்டும், பாடிக்கொண்டுமிருந்தனவாம். அதைக்கண்ட நிருபரின் நண்பர் ஒருவர் மூர்ச்சையுற்றார். இன்னும் அவர் அந்த அச்சத்தின் பயனாக தேக அசௌக்கியமாகவே படுக்கையில் இருக்கின்றார். பிறகு அவர்கள் பேய்க் கூட்டத்திற் கருகே வந்தபோது, அவைகள் ஒருவித பயங்கரமான சப்தமிட்டு விட்டுத் திடீரென மறைந்து விட்டன. நிருபரும் மற்றொரு நண்பருங் கூட இரண்டுமணிநேரம் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்து கிடந்தனர் என்று தெரியவருகிறது.

## முத்தத்தின் மர்ம நவீன ஆராய்ச்சி

ஆண்மகனோ அல்லது பெண்மகளோ ஒருவருக்கொருவர் முத்தமிட்டுக் கொள்வதால் அவர்கள் ஆயுள் குறைகிறதென்று அமெரிக்காவில் நவீன ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அமெரிக்காவில் கிரேபார் மின்சாரக் கம்பெனியின் ஆராய்ச்சி சாலையில் ஸ்ரீ. ஏ. ஜே. ஈவ்ஸ் என்பவர் கண்டுபிடித்த ஒரு கருவியால் இவ்வாராய்ச்சி நடைபெற்றது. அவ்வாராய்ச்சியிலிருந்து முத்தத்தைப் பற்றிய சில மர்மங்கள் வெளி வந்திருக்கின்றன. இம்மர்மம் காதலர்களைத் திடுக்கிடச்செய்யுமென்பதிற் சந்தேகமில்லை. ஒருவனோ அல்லது ஒருத்தியோ முத்தமிடும் பொழுது ஒவ்வொரு தடவையும் அவர்கள் ஆயுள் நாளில் 280 விநாடிகள் குறைவாகிறது. 280 தடவை முத்தங் கொடுத்தால் ஆயுள் நாட்களில் ஒரு முழு நாள் குறைந்துவிடும். 2860 தடவை முத்தம் கொடுப்பதால் ஆயுள் நாட்களில் ஒரு வாரம் குறைந்துவிடும். முத்தமிடுவதால் மட்டு மல்ல; முத்த மிடுவதைப் பார்ப்பதாலும் ஆயுள் குறைவாகிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகவே, சினிமா நடிகர்கள் முத்தமிட்டுக் கொள்ளும் பொழுதும், சினிமா படங்களில் முத்தமிடுவதை ஆயிரக் கணக்கான ஜனங்கள் பார்க்கும் பொழுதும் அவர்கள் ஆயுள் நாள் குறைவாகிறது.

## முத்தப் பரிசோதனை.

முத்தத்தின் இவ்வித மர்மத்தை முத்த ஆராய்ச்சிக் கருவியால் பரிசோதனை செய்தபோது சா...



நடிகப்பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை முத்தமிடச் சொன்னார்கள். முதலாவது பெட்டிவான் ஆலன் என்ற ஒரு குமாஸ்தா முத்தமிடும் பொழுது பெண்ணை அக்கருவியைக் கொண்டு சோதனை செய்தார்கள். அப்பொழுது அந்த குமாஸ்தாவின் இருதயம் எப்பொழுதும் போலன்றி ஐந்து தடவை அதிகமாகத் துடித்தது. 20 பேர்களும் முத்தமிட்டு முடிந்த பிறகு கடைசியாக ஒரு ரஸ்தா மேஸ்திரி அப்பெண்களை முத்தமிட்ட பொழுது ஒரு பெண்ணின் இருதயம் 66 தடவை அதிகமாகத்துடிக்கும்படியாகவும், மற்றொரு பெண்ணின் இருதயம் 40 தடவை அதிகமாகத் துடிக்கும்படியாகவும் செய்தார்.

## முத்தத்தின் அபாயம்.

முத்தத்தால் தேக ஆரோக்கியத்திற்குப் பங்கம் வருகிறதென்று, சுகாதார அதிகாரிகள், வியாதிகள் பரவும் காலங்களில் காதலர்கள் முத்தமிட்டுக் கொள்ளுவதில் நடந்து கொள்ளும் முறைகளை விதித்திருக்கிறார்கள். அவர்கள் அதிக காற்றோட்டமில்லாத இடங்களிலும் கூட்ட மதிகமாக இருக்குமிடங்களிலும் முத்தமிடுவது தேகாரோக்கியத்திற்கு அபாயம் விளைவிப்பதாகுமென்று சொல்லுகிறார்கள்.

## கிணற்றில் அழுகை யொலி.

தேவ்பந்து என்னும் நகரில் உள்ள ஒரு கிணற்றில் சின்னாட்களாக யாரோ ஒரு மனிதன் அடியிலிருந்து அழுவதுபோன்று சப்தம் கேட்கின்றதாம். யாரோ கிணற்றில் விழுந்து தவித்திருக்கிறார்கள் என்று எண்ணி அவ்வூர் ஜனங்கள் அக்கிணற்றில் இறங்கி ஆராய்ந்து பார்த்தார்களாம். ஆனால் அதில் யாரையும் காணவில்லையாம். ஜனங்கள் கிணற்றிலிருந்து ஆராயும் போதும் அழுகை யொலி கேட்கிறதாம். இதன் இரகசியம் இன்னதெனத் தெரியவில்லை. இவ்வற்புதத்தைக்காண ஜனங்கள் திரள் திரளாகக் கூடுகின்றனராம்.

## புத்தூரில் ஆடவன் பெண்ணான அதிசயம்

புத்தூரில் இடுப்புவரை அங்க வஸ்திரமும், மேலுக்கு ரவிக்கையும், தாவணியும் அணிந்துள்ள ஜடலுகாடு என்னும் பெயருடைய முத்துராஜ வகுப்பைச் சேர்ந்த ஒரு மனிதனிருக்கிறான். அவனுக்கு வயது 26. அவனுக்கு முகத்தில் மீசையில்லை. பெண்களுக்குரிய நடையுடை பாவனையெல்லாம் அவனிடத்திருக்கின்றன. பெண்ணுறுப்புக்கள் அவனிடத்துக்காணப்படுகின்றனவாம். 25 வயது வரைமுழு ஆண் தன்மையோடு இருந்தானாம். அப்புறம் ஆணுறுப் பெல்லாம் மறைந்து பெண்ணுறுப்புக்கள் தோன்றி விட்டன எனப் பலரும் கூறுகின்றனர். அவனும் அது உண்மையேயென ஒப்புக்கொள்கின்றான். உலக விநோதமிருந்தவாறு என்னே!


ஆனந்தம் ! ஆனந்தம் !; இதை வாசித்தால் பரமானந்தம் !!!

**ஸ்ரீ ஆனந்த பூஷணம்**

இதுபோன்ற நூல் மறுசமயம் கிடைக்காது. கிடைத்தால் ரூபா. 100 இனும்.

அறிவுக் களஞ்சியமாகிய இவ்வரிய கதா ரத்னத்தை ஆண், பெண், பாலர்கள் முதல் வாசிக்கும்படி கையிலெடுத்தால் பகவானிடத்திலேயே பேரன்பு உண்டாக்கி பகவத் கதையின் சாராம்சத்திலேயே மனதை உருகும்படிச் செய்யும். இது பெண்மணிகளுக்கு கண்மணிபோன்ற அஸ்த பூஷணம்.

இதில் கற்புடைய ஸ்திரீ தனது பர்த்தாவின் உயிர் மீட்கவேண்டி தாசிகோலம் கொண்டு அரசன் முன் சென்ற விநோதமும், அளவுகடந்து தர்மம் செய்த பெருமையும், வறுமையால் சமுத்திரத்தில் விழப்போனவனுக்கு அளவு கடந்த சம்பத்து வந்த வேடிக்கையும், பக்தன் முன் பகவான் வைராக்கியம் செல்லாமற் போனதும், பாரியாளால் பர்த்தா ஞானத்தை யடைந்ததும், பகவான் தமையனாக வந்த விநோதமும், பகவானிடம் பக்தன் அமர் புரியச் சென்றதும், ஆத்மாவின் பெருமையும், தகப்பனுக்குப்பிள்ளை நீதி புகட்டுவதும், துளிப்பால் சமுத்திரமாய்ப் பெருகியதும் இன்னும் அரிய விஷயங்களும் இதில் அடங்கியிருப்பதால் எப்பேர்ப்பட்ட கல் மனதும் கரைந்துருகும்.

புஸ்தகம் 1 க்கு ரூபா 1—4. தபால் சார்ஜ் அணா 4.

ஒரே காலத்தில் 3 புஸ்தகம் வாங்கினால் ரூபா 3—8. தபால் சார்ஜ் அணா 5.

ஆனந்தா அண்டு கோ, நெ, 3, முருகப்பன் வீதி, யானைகவுனி சமீபம், மதராஸ்.

(8)




கனம் படேல்:—இந்தியா சட்டசபையின் பெருமையைச் சாரதாவின் இளமை மணத்தடைச் சட்டமே என்றுந் தாங்கி, பொன்றாப்புகழ் கொடுத்து நிற்கும். காங்கிரஸ்களிலும் மகாநாடுகளிலும் நிறைவேற்றப்படும் நூற்றுக்கணக்கான தீர்மானங்களை விட இந்தச் சட்டமே தேசத்தைச் சுதந்தரம் பெறுதற்குத் தகுதியாக்கும்.

*   *   *

டாக்டர்பெர்னார்டு ஹாலண்டர்ஸ்:-தன்னடக்கத்தைக் கையாளுமுறையைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படவேண்டும். கால ஒழுங்கு, செயல் முறை, தன்னைத்தான் எதிர்நோக்கி நிற்றல், விடாமுயற்சி, மதுபானஞ் செய்யாமை முதலிய பல விஷயங்களே அவர்களின் எதிர்கால வாழ்வின் வெற்றிக் கவசிய மானவை. வாழ்க்கையை எதிர்த்து நிற்கும்படி இளைஞர்கள் பயிற்றப்பட வேண்டும். உண்மையான வாழ்க்கையை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்,

*   *   *

ஸ்ரீமான் ராம்ஸே மாக்டொனல்ட்:—நான் இப்பொழுது பிரதம மந்திரியோ இல்லையோ, எந்தத் தொழிலாளர் குலத்தில் பிறந்தேனோ அந்தத் தொழிலாளனாகவே இப்பொழுதும் நான் இருக்கிறேன்.

*   *   *

சுவாமி விவேகானந்தர்:-தத்தம் உள்ளத்திலும், பிற உயிர்களின் உள்ளத்திலும் ஒளிந்துறையும் இறைவனைக்காண முடியாதார் அவரை எங்கும் காண இயலாதாரே.

*   *   *

மகாத்மா காந்தி:-சத்தியமும் அன்புமே கடவுள்; நீதியும், தர்மமும், சன்மார்க்கமுமே கடவுள்: பயமின்மையே கடவுள்.

*   *   *

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள்:—இறைவன் இத்தகையினன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்டும் தகைமையுடையவனன்று.

*   *   *

பானகல் அரசர்:—இந்தியாவி லுள்ள எல்லா சமூகமக்களும் ஒரே தாய் நாட்டில் உதித்தவர்கள். கடவுள் முன்பும் உயர்ந்தோர் முன்பும் அனைவரும் ஒரே தன்மையின ரென்ற உண்மை நோக்கத்தோடு நாம் வேலை செய்தல் வேண்டும்.

*   *   *

திருவள்ளுவர்:—வெகுளியை யாரிடத்தும் மறக்கக் கடவன்; அவ்வெகுளியால் தீயவை பல உண்டாகும்.

*   *   *

மேற்படியார்:—நூலினது பொருள் கற்குந் தோறும் அறிவுடையார்க்கு இன்பம் தருதல் போல நற்குண முடையாரது நட்பும் பழகுந் தோறும் இன்பம் பயக்கும்.

*   *   *

ஒரு வைத்தியர்:—மனித சமூகத்திற்கு முக்கிய விரோதி வீடுகளில் பறக்கும் ஈக்கூட்டமே யாகும்.

*   *   *

மேற்படியார்:—சிறுக குணம் வாய்ந்த பெற்றோர்களால் மணமகன் என்றும் மணமகள் என்றும் அழைக்கப்படுகின்ற சிறு குழந்தைகள், பல்லக்குகளில் தூக்கிச் செல்லப்படுவதை நகரங்களிலும் கிராமங்களிலும் நான் பார்க்கிறேன். சாரதா சட்டம் அமுலுக்கு வந்து விட்டதால், இத்தகைய ஆயிரக்கணக்கான குழந்தைகள் ருதுசாந்தி பலி பீடத்தில் பலியிடப்படும் என்று கேள்விப்படுகிறேன். சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரும் அதிகாரம் என்னிடமிருந்தால், இத்தகைய பொம்மைக் கலியாணங்களுக்குப் பொறுப்பாளிகளாயுள்ள தாயாரையோ தகப்பனாரையோ புரோகிதரையோ சுட்டு விடுவதாக விதி ஏற்படுத்துவேன்.

*   *   *

ஸர் வேங்கடரத்தினம் நாயுடு:—பிறருக்குத் தொண்டு செய்வதில் மகிழ்ச்சி யடைகிறவனே ஜனநாயகக் கொள்கையை ஆதரிக்கிறவனாய் இருக்க முடியும்.

*   *   *

கிறிஸ்துநாதர்:—நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களை நேசியுங்கள்; உங்களைச் சபிக்கின்றவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கின்றவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.



# பிரமனை வெல்லல்

[யமதருமராஜா, இரணியகசிபு இருவருக்கும் பேச்சு]

**யமதருமராஜன்:**—தான் செய்த புண்ணிய பாவங்களின் பலன்களையே மனிதன் மறுபிறப்பில் சுகமும் துக்கமுமாக அனுபவிக்கிறான். இந்த விதிக்குத்தான் கர்மம் என்று பெயர்.

**இரணியகசிபு:**—இதென்ன தொல்லை? இப்படியேன் இருக்கவேண்டும்? இதற்கு ஒரு நல்ல யுக்தி கண்டு பிடித்துத்தான் தீருவேன்.

**யமன்:**—முடியாது, முடியாது. கர்மத்தை யாராலும் வெல்ல முடியாது. ஊழ்வினைப் படிதான் சுகமும் துக்கமும் அனுபவிக்க வேண்டும்.

**இரணியன்:**—சுகமும் துக்கமும் மனதில் உண்டாகும் உணர்ச்சிதானே?

**யமன்:**—ஆம், சுகமும் துக்கமும் அகத்தில்தான் உண்டாவது. புறப்பொருளில் அல்ல.

**இரணியன்:**—உணர்ச்சிகளுடைய ஸ்தானம் மூளை தானே?

**யமன்:**—அப்படிதான் வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது.

**இரணியன்:**—அப்படியானால் சுகமும் துக்கமும் வைத்தியர்களே உண்டாக்கலாமே? இதற்குக் கர்மம் ஏன்?

**யமன்:**—அப்படியன்று. கர்மத்தை வைத்தியர்களால் மாற்றமுடியாது.

**இரணியன்:**—என்னுடைய வைத்தியர்களால் மாற்ற முடியுமென்றே எண்ணுகிறேன். வைத்திய சாஸ்திரம் உண்மையானால் மூளையில் ஆனந்தத்தை உண்டாக்கக் கூடிய ஒரு மருந்தை ஏன் கண்டு பிடித்து துக்கத்தை நீக்கிக் கொள்ள முடியாது? பார்க்கலாம் ஒரு கை.

[இரணியகசிபு; சுக்கிராசாரியன்.]

**இரணியன்:**—இந்த கர்வங் கொண்ட யமன் சொன்னதைத் தங்களுக்குச் சொன்னேன். கேட்டீரல்லவா? நம்முடைய வைத்தியர்களுக்குத் தகுந்த உத்திரவிட்டு மூளையில் ஆனந்தத்தை உண்டாக்கும் ஒரு மருந்தை எட்டு நாளுக்குள் கண்டு பிடித்து எனக்குச் சொல்ல வேண்டும்.

**சுக்கிராசாரியன்:**—மகாராஜாவே! அதில் என்ன பயன்! மருந்தால் உண்டான ஆனந்தம் பொய் தானே?

**இரணியன்:**—பொய் எது? மெய் எது? சுகமும் துக்கமும் மூளையி லுண்டாகும் உணர்ச்சிகளே யல்லவோ?

**சுக்கிரன்:**—சுகமும் துக்கமும் கர்ம பலன்; கர்மத்தை ஔஷதத்தால் மாற்ற முடியுமா? இது பரிகாசத்திற்கு இடமாகும். பிரமனுடைய விதியிலிருந்து தப்ப முடியாது.

**இரணியன் (கோபித்து):**—இதுதான் தங்களிட முள்ள குறும்பு, என்னிடம் அந்தப் பிரமனுடைய பெருமையைப்பேச வேண்டாம். கூப்பிடுங்கள் வைத்தியர்களை.

சுக்கிரன்:—உத்திரவுப்படி.

[இரணியகசிபு; வைத்தியர்கள்.]

இரணியன்:—தெரிந்ததா? ஆனந்தம் என்பது மூளையி லுண்டாகும் ஒருவித அதிர்ச்சி; துக்கம் என்பது மற்றொருவித அதிர்ச்சி; இதை நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள்.

வைத்தியர்கள்:—ஆம்.

இரணியன்:—எட்டு நாளுக்குள் நீங்கள் தேடி ஒரு மருந்தைக்கண்டு பிடிக்க வேண்டும். ஆனந்த அதிர்ச்சி உண்டாகும் மருந்தைக் கொண்டு வந்து தரவேண்டும். இல்லாவிட்டால் கசையடி.

வைத்தியர்கள்:—ஐயோ!

இரணியன்:—ஐயோ என்பதில் பயனில்லை புலன்களால் மூளையில் உண்டாகும் துக்கவுணர்ச்சியைக் கரைத்து ஆனந்த உணர்ச்சியை உண்டாக்கக் கூடிய மருந்து கொண்டு வர வேண்டும். ஒன்று பலவாகவும் பல ஒன்றாகவும், நன்மை தீமையாகவும் தீமை நன்மையாகவும், மேல் கீழாகவும் கீழ் மேலாகவும், இருப்பது இல்லாதபடியும் இல்லாதது இருப்பதாகவும் தோன்றச் செய்யும் நல்ல மருந்தைக் கண்டு பிடித்துக் கொண்டுதான் என்னிடம் வரவேண்டும். மூளை, உணர்ச்சி இவைகளின் இரகசியத்தை நான் தெரிந்து கொண்டு விட்டேன். இவ்வித ஔஷதத்தைச் செய்து பிரமனுடைய நிருவாகத்தைத் தடுமாற்ற மடையச் செய்வது என்னுடைய தீர்மானம். இது கஷ்டமே யில்லை. நீங்கள் என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்.

வைத்தியர்கள்:—இல்லை, எஜமானே, அப்படி யல்ல.

**இரணியன்:**—என்னிடம் சொல்லிப் பயனில்லை. உங்களுக்கெல்லாம் பிரமனிடம் தான் அனுதாபம் என்னிடம் உங்களுக்கு அன்புகிடையாது. அவனுடைய ஆட்சியையே ஸ்திரப்படுத்தப் பார்க்கிறீர்கள். நாளை சவுக்கடிக்குப்பின் வேறு பாட்டுப் பாடுவீர்கள்.

**வைத்தியர்கள்:**—இல்லை, இல்லை, எஜமான்! கட்டாயம் மருந்து தேடிக் கண்டு பிடிப்போம்; சந்நிதானத்தின் உத்திரவுக்குப் பதில் உண்டா?

[இரணியகசிபு, சுக்கிராசாரியன்,
மேலே பிரமனும் நாரதனும்]

**இரணியன்:**—ஆசாரியரே மருந்து தயாராயிற்று வைத்தியர்கள் இன்னும் ஏமாற்றி வருகிறார்களா?

**சுக்கிரன்:**—மகாராஜாவே, காரியம் முடிந்தது. இதோ மருந்து! நான் என்ன சொல்லுவேன்? இது பிரமனை வெல்லும் மருந்து என்பது நிச்சயம்

இதை உட்கொண்ட கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கர்மம் தலை கீழாகும். பாவம் செய்தவனும் ஆனந்த மடைவான், மனதிற்குள் புகுந்து கொண்டு தொந்திரவு செய்யும் நாராயணன் ஓடிப்போவான். நன்மை தீமை என்னும் பகுத்தறிவு மறைந்துபோகும். துக்கம் எல்லாம் பறந்துபோகும். இரவு பகலாகும், பகல் இரவாகும் சோற்றுக்கில்லாதவன் பணக்காரனைப்போல் சந்தோஷ மடைவான். கடன் பட்டவனும் சிரித்து விளையாடுவான். குளிர் வெப்பமாகும், வெப்பம் குளிராகும். உடம்பில் நோயிருந்தாலும் சுகமாகத் தோன்றும். பிரமன் விதித்த ஒவ்வொரு நியதியும் தலை கீழாகும்.

[கள்ளுப் பானையைத் தருகிறான்.]

இரணியன்:—பேஷ்! இதைத்தான் நான் கேட்டது. முடியாது என்றீரே, பார்த்தீரா! இதைக் கொண்டு பிரமன் ஆதிக்கத்தை யழிப்பேன்.

சுக்கிரன்:—ஆஹா! அழித்து விடலாம், சந்தேகமில்லை.

[இதையெல்லாம் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பிரமனும் நாரத ரிஷியும் நகைக்கிறார்கள்.

நாரதன்:—மூர்க்கன் இழிவான கள்ளைக்கொண்டு சுகம் தேடுகிறான்.

பிரமன்:—பொய்ச் சந்தோஷம் பிறகு பெருந் துக்கமாக முடியும் என்பதை இந்த மூடன் அறியவில்லை.]

—"விமோசனம்"

## நமது வருவாய்

சேலம் ஜில்லா மோகனூரைச் சேர்ந்த நாட்டில் செங்குந்தர்களுள் நடைபெறும் திருமணங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்பதணா வீதம் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை வழங்கப்பட வேண்டுமென நாட்டுக் கட்டுப்பாடு செய்திருப்பதையும், செங்கற்பட்டு ஜில்லா சிவபுரநாட்டைச் சேர்ந்த கிராமங்களில் அமாவாசைத் தரிவரி ஒழுங்காக வசூலித்தனுப்பி வருவதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஏனைய நாடுகளும் இவர்களைப் பின்பற்ற வேண்டுகிறோம்.

(3) F

# திருக்குறள்

மூலமும் பொழிப்புரையும்.

பொருளீட்டும்
கருத்தின்றி
தமிழ் நாகரீகத்தின்
புகழ்நாட்டும்
கருத்தோடு
நல்ல
கிளேஸ் காகிதத்தில்
பாக்கட் அளவில்
அச்சிடப்பட்டுள்ளது.

300 பக்கங்கள் உள்ள
பெரிய புத்தகம்
விலை அணா எட்டு.
இதுவரை இத்தகைய
உரை வெளிவந்ததில்லை.

சமத்துவம்
சகோதரத்துவம்
பெண்ணுரிமை முதலிய
தமிழ்நெறிபற்றி
எழுதப்பட்ட புத்துரை

தமிழர் அனைவரும்
ஓதி ஒழுகவேண்டிய
முக்கியமான நூல்.

"நவசக்தி" ஆசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.

சொற்ப காப்பிகளே உள்ளன!

இன்றே ஆர்டர் செய்யுங்கள்!!

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்துப் பத்தணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா 10.

செங்குந்த மித்திரன் புத்தகசாலை பவழக்காரத் தெரு, சென்னை.



# சென்ற மாதம் நடைபெற்ற பல மகாநாடுகள்

## தேசீய காங்கிரஸ்

44-வது இந்திய தேசீய காங்கிரஸ் 30-12-29ம் தேதி முதல் நான்கு தினங்கள் நடைபெற்றன. இளஞ்சிங்கம் பண்டித ஜவஹரிலால் நேரு தலைமை வகித்தார். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை வருமாறு:—

இராஜப்பிரதிநிதி ரெயில் வண்டிக்கு வெடிகுண்டு வைக்கப்பட்டதற்கு வருந்துவதோடு அவர் தப்பியதற்கு அவரைப் பாராட்டுவதாகவும், சர்வகட்சி மகாநாட்டில் காங்கிரஸ் பிரசன்னமாய் இருப்பதால் அனுகூலங்கள் ஏற்படாதென்றும், சுயராஜ்யம் என்பதற்குப் பூரண சுயேச்சை என்று பொருள் தெரிவிப்பதாயும், காங்கிரசிலுள்ள எல்லாக் கட்சிகளும் பூரண சுயேச்சையைப் பெறுவதில் தன் கவனமுழுதும் செலவிட வேண்டுமென்றும், சட்டசபைகளைக் காங்கிரஸ் பகிஷ்கரிப்பதாகவும், காங்கிரஸ்காரர்கள் தேர்தல்களில் கலந்து கொள்ளக் கூடாதென்றும், சட்டசபைகளிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் தமது பதவிகளை ராஜிநாமா செய்துவிட வேண்டு மென்றும், தனக்கு அவசியமெனத் தோன்றும் பாதுகாப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு வரிகொடாமை உள்ளிட்ட சட்ட சாத்வீக எதிர்ப்புத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர காரியக் கமிட்டிக்கு அனுமதி யளிப்பதாயும், காங்கிரஸ் கூடும் காலத்தை டிஸம்பரிலிருந்து பிப்ரவரி அல்லது அதற்குப் பிறகு காங்கிரஸ் கூடும் மாகாணத்திற்குத் தக்கபடி மாற்றுவதாகவும், அடுத்த காங்கிரஸ் கராச்சியில் கூடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

*

## முஸ்லிம் மகாநாடு.

5-12-29ல் சென்னை கோகலே மண்டபத்தில் இந்தியா சட்டசபை அங்கத்தினரான மௌலானா ஷபீ தாவூதி அவர்கள் தலைமையில் சென்னை மாகாண முஸ்லிம் மகாநாடு கூடியது. அதுகாலை தலைவர் நிகழ்த்திய சொற் பொழிவில் இந்திய முஸ்லிம்களின் அரசியல் வாழ்க்கையில் தற்காலம் மிகவும் நெருக்கடியான சமய மென்றும், இச்சமயத்தில் ஏற்படக்கூடிய பல சம்பவங்களையும், அதன் பலாபலன்களையும் முஸ்லிம்கள் அறிந்து கொள்ள வேண்டு மென்றும், இதனை நன்குணர்வதை யொட்டியே முஸ்லிம்களின் எதிர்கால நிலைமை பொறுத்துளதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*

(நமது செங்குந்த சமூகமும் தற்சமயம் இத்தகைய நெருக்கடியான நிலையிலேயே இருக்கிறதென்பதை யுணர்ந்து வேற்றுமை உணர்ச்சியின்றி, நமது இயக்கத்தை பலப்படுத்த நம்மவர் முயல்வாரா?)

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் முக்கியமானவை:—

1. பெடரல் ஆட்சி முறை யொன்றே இந்தியாவிற்குகந்தது. பெடரல் ஸ்டேட்டுகட்கு முழுப் பொறுப்பாட்சி வழங்கி, மத்திய அரசாங்கம் பற்பல பெடரல் ஸ்டேட்டுகளால் தன்னிடம் ஒப்புவிக்கப்படும் விஷயங்களை மட்டும் நிர்வாகம் செய்ய வேண்டும்.

2. தங்களுடைய உரிமைகள் போதுமான அளவு காக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம்கள் திருப்தியடையாத வரையில் தனித் தொகுதி வாக்காளர்த் தேர்தலை விட்டுக் கொடுத்து கூட்டுத் தொகுதியை ஏற்றுக்கொள்ள முடியாது.

3. இந்தியா சட்டசபையில் மொத்த ஸ்தானங்களில் மூன்றில் ஒரு பாகம் முஸ்லிம்கட்குக் கொடுக்கவேண்டும்.

4. சிந்துவைத் தனி மாகாண மாகப் பிரிக்க வேண்டும்.

5. அரசாங்க உத்தியோகங்களில் 100-க்கு 30 முஸ்லிம்களாக நியமிக்க வேண்டும்.

*

## தபால்காரர் மகாநாடு.

15-12-29-ந் தேதி சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு ஜில்லாக்களின் தபாற்காரர்கள்மகாநாடு சென்னையில் கூடிற்று. மௌலானா அப்துல் லத்திப் பருக்கி எம். எல். ஏ. இம்மகா நாட்டிற்குத் தலைமை வகித்தார். நிறை வேறிய தீர்மானங்களுள் சில:—

1. தபாற்காரர்களுக்கு வாடகை அலவன்ஸ் தர வேண்டும்.

2. கிராமப்போஸ்டு மாஸ்டர்களுக்கு 25 ரூபாய் சம்பளம் தரவேண்டும்.

3. ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் தபாற்காரர்களுக்கு விசேஷ சம்பளம் கொடுக்க வேண்டும்.

4. சிதம்பரம், காஞ்சீபுரம், திருப்பாதிரிப்புலியூர், பண்ருட்டி முதலிய இடங்கட்கு மெயில்பியூன் ஒருவரை அதிகமாகத் தரவேண்டும்.

5. ஸ்பெஷல் ஓவர்சீயர் தபாற்காரர்களுக்கும், இன்டூர் டெலிவரி தபாற்காரர்களுக்கும், ரங்கூனில் கொடுப்பதுபோல் 70-4-110 சம்பளம் தர வேண்டும்.

*

## ஆரிய மஹா சமாஜ மகாநாடு

சென்னை ஸ்ரீமதி ருக்மணி லட்சுமிபதி தலைமையில் 26-12-29ல் லாகூரில் கூடியது. ஸ்ரீமதி லட்சுமிபதி தமது தலைமையுரையில் பஞ்சாப் அடக்கு முறை, கோஷா முறைகளால் ஸ்திரீகளுக்கு

உண்டாகும் தீமைகள் முதலியவைகளைக் குறிப்பிட்டதோடு சாரதா சட்டத்தை நடவடிக்கையில் கொணரப் பொது மக்களும் போலீசாரும் துணை புரிய வேண்டுமென்றும், விதவைகட்கு உதவி புரிய வேண்டு மென்றும், ஸ்திரீகட்குச் சொத்துரிமை வேண்டு மென்றும், குழந்தைகளின் கல்வி அபிவிருத்தி தேக வளர்ச்சி ஆகிய விஷயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டு மென்றும், பெண்கட்குத் தொழிற் கல்வி போதிக்க வேண்டு மென்றும், தேச விடுதலைக்குப் பெண்கள் தமது கடமையினின்றும் தவறக் கூடாதென்றும் வற்புறுத்தினர்.

*

## அகில இந்திய சேவாதள மகாநாடு.

இது லாகூரில் 27-12-29ல் கூடியது. மாகாணத் தொண்டர் கழகங்கள் ஏற்படுத்தவும், ஸ்திரீ தொண்டர்கட்குப் பயிற்சி முறையில் யோசனை கூற ஸ்ரீமதி லட்சுமிபதி முதலிய ஐவர் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்துவதென்றும், அகில இந்தியத் தொண்டர் போர்டு நியமிக்க வேண்டு மென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

*

## ஆஸ்திகர் மகாநாடு.

26-12-29ல் 31-வது அகில இந்திய ஆஸ்திகர் மகாநாடு லாகூரில் நடைபெற்றது. "மாடர்ன் ரெவியூ" ஆசிரியர் ஸ்ரீமான் இராமானந்த சாடர்ஜீ தலைமை வகித்தார்.

*

## அகில இந்திய ஷியாக்கள் மகாநாடு.

இது 26-12-29-ல் பம்பாய் சர்வ கலாசாலை உப அத்யட்சகர் ஸ்ரீமான் மிர்ஸா ஆலி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தலைவர் முஸ்லிம்கள் சர்வகட்சி மகா நாட்டில் சேர்ந்து கொள்ள மறுப்பது தவறென்றும், விரைவில் இந்நாட்டிற்கு சுயராஜ்யம் கிடைக்கு மென்றும், முஸ்லிம்கள் தங்கள் பொறுப்பை யுணர்ந்து தேசத்தின் எதிர் கால வாழ்க்கையில் தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் போற்றும் வகையில் நடந்து கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

*

## நவஜீவன் பாரத மகாநாடு.

26-12-29ல் கூடிய இம்மகாநாட்டில் காலஞ்சென்ற யதீந்திர தாஸைப் போற்றுவதாயும், குடியானவர்களுடைய அரசை ஸ்தாபிப்பதே தேசக் கொள்கை என்றும், விசாரணையிலுள்ள கைதிகளை விடுவிக்க எல்லா இளைஞர்களும் பாடுபட வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது.

*

## அகில இந்திய ஆசிரியர் மகாநாடு

சென்னை ஹிந்து ஹைஸ்கூலில் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் தலைமையில் 27-12-29ல் கூடியது. ஆசியர் சம்பந்தமான பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

*

## புத்தகசாலை மகாநாடு.

அகில இந்திய புத்தகசாலை மகாநாடு 26-12-29ல் நடைபெற்றது. புத்தகசாலைக் காட்சியில் ஏராளமான கையெழுத்துப் பிரதிகள், நூல்கள், பூகோள படங்கள், சிறுவர்க்குரிய நூல்கள் வைக்கப்பட்டிருந்தன. ஸர். பி. சி. ராய் தலைமை வகித்துப் புத்தக சாலையின் அவசியத்தைப்பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினர்.

*

## பத்திரிகாசிரியர்கள் மகாநாடு.

2-1-30ல் நடைபெற்ற இம் மகாநாட்டில் பத்திரிகைத் தொழிலின் எதிர்காலத்தைப் பொறுத்தும், பத்திரிகாசிரியர்களின் நன்மையைக் குறித்தும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.


ரூ. 2-15-0 பௌண்டன் பேனு ரூ. 2-15-0



நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!
இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமைதங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர் ©W.B. பௌண்டன் பேனு தங்க ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட்வாட்ச் இனமாய் அனுப்பப்படும். W. B. பவுண்டன் பேனவும் கடியாரமும் விலை ரூ. 2—15—0.

(13) C

THE KRISHNA AGENCY,
119, G. P. O. Madras.




# ஒற்றுமை.

சென்னைத் திருவள்ளுவர் மூதறக் கழகத்தில் 26—1—30-ல் திருநிறைச் செல்வி C. M. பத்மாசனி என்னும் சிறுமி "ஒற்றுமை" என்றும் பொருள்பற்றி ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு (தமிழரசில் கண்டது):—

உலகில் ஒவ்வொரு நாட்டினரும் முன்னேற்றமடையப் பல வழிகள் உண்டு. அத்துறைகளிலெல்லாம் தலை சிறந்தது நாட்டவர் ஒற்றுமையேயாகும். முதலில் ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு புருஷனும் மனைவியும் இல்லறம் நடத்துகிறார்கள். மனமும் வாக்கும் உடம்பும் ஒற்றுமைப் படுவதாலேயே அவர்கள் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்ளவும் இன்பம் அனுபவிக்கவும் உத்தம மக்களைப் பெறவும் முடிகிறது. இருவர் ஒற்றுமையாலே இவ்வளவு நலன்கள் விளைகின்றன வென்றால், இந்து தேயத்தாராகிய நாம் எல்லோரும் ஒற்றுமையா யிருந்தால் எத்தகைப் பெரிய நன்மையை யடைவோம். எப்போதும் மனிதன் தனித்து வாழ இயலாது. அப்படி வாழ்வானேயானல் பல துன்பங்களுக்கு ஆளாவான். மனிதன் மாத்திரம் அல்ல; விலங்குகளும் ஒற்றுமையாக வாழ்வதால் அநேக நன்மைகள் உண்டு. நான்கு எருதுகளும் ஒன்று சேர்ந்து இருக்கும்போது மிருகேந்திரனுகிய சிங்கத்தை வென்றதையும், பிறகு தனித்தனியாகப் பிரிந்த போது அதே சிங்கத்தால் ஒவ்வொரு எருதும் கொல்லப்பட்டதையும் நாம் அனைவரும் அறிவோம். மழைத்துளி சிறிதே யாயினும் பல கூடுதலால் பெரு வெள்ளமாகி இறுதியில் பல நகரங்களை அழிக்கும் சக்தி பெறுகிறது. நிமிடங்கள் ஒன்று சேர்ந்தே வருடங்கள் ஆகின்றன. சிறு அணுக்கள் ஒன்று சேர்ந்தே பெரும் மலையாகின்றது. பஞ்சு நூல் எவ்வளவு இலேசானது! 'பூ' என்றால் காற்றில் பறக்கக்கூடியது. சாதாரணமாக ஜனங்கள்கூட ஒற்றுமையற்றுச் சண்டை இடுங்கால் "நான் 'பூ' என்றால் நீ பஞ்சாய்ப் பறப்பாய்" என்று சொல்வதுண்டு. அவ்வளவு நுட்பமான நூல் ஒற்றுமைப்பட்டு வடமாகிற போது பெருந்தேர், யானை, குதிரை முதலிய வலிய பெரிய பொருள்களை இழுத்து விடவில்லையா? அத்தகைய நூல்கள் ஒற்றுமை யடைந்து புடவை, மேலாடைகளாகி நமது மானத்தைக் காக்கின்றன. அஃறிணைப் பொருளாகிய அது நமது மானத்தைக் காப்பாற்ற ஒற்றுமைப் படுகிறதென்றால், உயர்திணை மக்களாகிய நாம் நமது நாட்டின் மானத்தைக்காப்பாற்ற ஒற்றுமைப்படுகிறதில்லையே. கேவலம் பறவைகளும் விலங்குகளும் எவ்வளவோ ஒற்றுமையாக வாழ்கின்றன. முதன் முதலாக ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்களே ஒற்றுமையாக வசிப்பதில்லை. ஒருவருக்கொருவர் சண்டை யிட்டுக் கொள்வதும் அடித்துக் கொள்வதுமாய் இருக்கிறார்கள். இதே பழக்கம் நாளடைவில்வளர்ந்து பின்னும் பெரிய குடும்ப சச்சரவுகளைக் கிளப்பிச் சகோதரர்கள்—ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள்—நியாயஸ்தலத்தின் முன் ஞாயம் வழங்கும்படி கைகட்டி நிற்கிறார்கள். இதைவிட ஒற்றுமையாக வாழ்வார்களேயானல் எவ்வளவு பெருமிதமாக வாழலாம்? மற்றவர்கள் அஞ்சுவார்கள். ஒற்றுமையின்றி வாழ்ந்த நான்கு பிள்ளைகளுக்கு அவர் தம் தந்தையார் ஒரு நாள் புத்தி கற்பிக்க எண்ணித் தன் பிள்ளைகளைக் கூப்பிட்டு ஒரு கட்டு விறகு கொண்டுவரச் சொன்னார். பிறகு ஒவ்வொரு பிள்ளையாகக் கூப்பிட்டு அந்த விறகுக் கட்டை உடைக்குமாறு சொன்னார். பிள்ளைகள் எவ்வளவோ முயன்றும் அந்த விறகுக் கட்டை ஒடிக்க முடியவில்லை. பிறகு ஒவ்வொரு விறகாக ஒடிக்கும்படி சொன்னார். பிள்ளைகள் வெகு சுலபமாக உடைத்துவிட்டார்கள். உடனே அப் பெரியார் தம் மைந்தர்களை நோக்கி, "என்னருமைக் கண்மணிகளே, நீங்கள் நால்வரும் இப்படியே ஒற்றுமையாக வாழ்வீரானல் உங்களை எவராலும் வெல்ல முடியாது; தம்பியுள்ளான் படைக்கஞ்சான்" என்று புத்தி கூறினர். ஆதலின் என் சகோதரர்களே, நாம் நம் இளமைப் பருவத்திருந்தே ஒன்றுமையாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். மனிதர்களாகிய நமக்கு ஒற்றுமை என்னும் குணம் அவசியம் வேண்டும். இக்காலங்களில் நாம் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாய் இருப்பது அரிதாய் இருக்கிறது. அநேகர் சிலரிடம் சிலநாள் ஒற்றுமையாக இருந்து தமக்குப் பிடியாத காரியங்கள் செய்தவுடன் அவர் நேசத்தைப் பொட்டெனவிட்டு விடுகின்றார்கள். இப்படி நாம் செய்யக் கூடாது. அவர்கள் செய்த குற்றத்தை இனிய வார்த்தைகளால் எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்தி நம்மோடு ஒற்றுமையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

நமக்குள்ள வேற்றுமை ஒழிந்து போமானல் ஒற்றுமை தானுக வந்து சேரும். அரிய பொருள்களை எல்லாம் நாமே அனுபவிக்கவேண்டும் என்ற பேராசையை நாம் ஒழிக்கவேண்டும். கல்வி கேள்விகளில் நானே சிறந்தவன் என்பதை மறக்க வேண்டும். உலகத்தை எல்லாம் நானே ஆள வேண்டும்; கோயிலுக்கு நான் தான் போகவேண்டும்; என் உத்தரவுப்படி தான் உலகம் நடக்க வேண்டும்; உள்ளே யிருக்கிற சாமிகூட எனக்குப் பயப்படவேண்டும் என்ற எண்ணம் ஒழியவேண்டும். பொறாமை, பொய், வஞ்சகம், சூது, வாது நடிப்பு முதலிய தீமைகள் அழியவேண்டும்; அன்று தான் நாம் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ முடியும்.

ஆதலின், என் சகோதர சகோதரிகளே, ஒற்றுமை மிகவும் அவசியம் என்பதை நாம் உணர வேண்டும். ஒற்றுமைக்கு விரோதியான வேற்

றுமைகளை முதலில் களைய வேண்டும். பொறாமை யாலும் பிரிவினையாலும் ஒருபொழுதும் இன்பம் ஏற்படாது. தமிழ் நாட்டிலுள்ள நாம் அனைவரும் கலந்து வாழ்வோமாயின் பெரு வலியும் உறுதியும் படைத்துப் பிறர் மதிக்க வாழ்வோம்.

ஆதிகாலத்தில் ஒற்றுமையைக் கெடுக்கும் ஜாதி பேதம், மத பேதம் முதலியன அவ்வளவாக இல்லை என்றே சொல்லலாம். அந்தணர் வேளாளரைப் புகழ்ந்து பாடுவதும், இழிகுலத்தாரெனப்படுகிற "பாணர்" முதலியோரை அரசர்கள் உடனிருத்தி விருந்துண்பதும், பாரி மகளிரைப் பார்ப்பனர்கள் மணம் முடிப்பதும் போன்ற அரிய செய்கைகள் அக்காலத்தில் சாதாரணமாக இருந்தன.

ஆதலின், என் சகோதரர்களே, சிறிது சிறிதாக இவ்வேற்றுமைகளையெல்லாம் கொல்லவேண்டும். பிழைப்பு முதலிய வசதிகளைப் பரம்பரையாய் அனுபவித்துக் கொண்டும், ஏழைகள் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு வரும் போலிகளை முதலில் நம் நாட்டைவிட்டுத் தொலைக்க வேண்டும். ஆதலின் என் சகோதர சகோதரிகளே! "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" ஆதலால், நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வோமாக.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்-இந்த
ஞானம் வந்தாற் பின் நமக்கெது வேண்டும்."

பாரதியார்.

உங்களுக்கு நம்பிக்கையாகவும் நாணய மாகவும் பவுன் நகைகள் கல்நகைகள்

வெள்ளி நகைகள்

தேவையானால் எங்கள் சரூப்பு கடையில் ஒரே தடவை வாங்கிப்பரிக்ஷித்துப் பார்த்தால் தெரியவரும். ஆர்டரின் பேரில் செய்து கொடுக்கப்படும். வாங்கின நகைகளை ஒரு வாரத்தில் வாபீஸ் செய்தால் முழுப் பணத்தையும் வாபீஸ் செய்து விடுவோம்.

வீ. க. ராமசாமி பிள்ளை,

நகை வியாபாரம்,

மண்டி வீதி, ஈரோடு.

## அநுதாபம்

(1) 12-12-1929 காலை 10-மணிக்குச் சைதாப்பேட்டை செங்குந்த கோவாபரேடிவ் கிரெடிட் சொஸைடியின் காரியதரிசியாகிய ஸ்ரீமான். K. ஷண்முகசுந்தர முதலியார் அவர்கள் சிவலோகப் பிராப்தியடைந்தமைக்கு மிகவும் விசனிக்கிறோம். அவர் தமது ஜீவகாலத்தைப் பரோபகாரமான பல வேலைகளில் செலவழித்தார். இவருடைய ஊக்கத்தாலும் பெரு முயற்சியாலும் தான் ஷை சொஸைடி ஸ்தாபிதமானதோடு தற்போதிருக்கும் உன்னத நிலைமைக்கும் வந்தது. இவருடைய உயர்ந்த குணங்களை உத்தேசித்தே சைதாப்பேட்டை ஸ்ரீகாரணீஸ்வரர்தேவஸ்தானத்துக்குக் கோர்ட்டாரால் டிரஸ்டியாக நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்து தேவஸ்தானத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தார். சைதாப்பேட்டை கோவாபரேடிவ் சூபர்வைசிங் யூனியனில் கவர்னிங்பாடி மெம்பராய் இருந்து திறமையுடன் வேலை செய்து வந்தார். இவர் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சைதாப்பேட்டை கிளைச்சங்கத்தின் உபதலைவராகவும் இருந்தார். சைதாப்பேட்டை நேஷனல் பளையகாட்கம்பெனியில் ஆதி முதல் பாகஸ்தராய் இருந்து வெகு திறமையுடன் ஷை கம்பெனியை நடத்தி வந்தார். இவ்வளவு திறமை வாய்ந்த இவர் இவ்வளவு சொற்ப வயதில் சிவலோக பிராப்தி அடைந்தது செங்குந்த மகாஜன சமூகத்திற்கே பெருத்த நஷ்டமென்று சொல்வது மிகையாகாது. இவர் குடும்பத்தாருக்குச் செங்குந்த கோவாபரேடிவ் சொஸைடியின் சார்பாக எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

—ஒரு நிருபர்.

நமது தலைச்சங்கம் நிறுவும் பொருட்டு முதல் முதலாகச் சென்னை சௌந்தர்யமகாலில் கூடிய கூட்டத்தில் கடவுள்வாழ்த்து பாடியவரும் குலாபிமானியுமான திரு. தேவாரம் சாமி குழந்தைவேலு முதலியார் 21-11-29௳ சிவபதமடைந்ததாகக் கேள்வியுற்று மிகவும் வருந்துகிறோம்.

---






### மஹா கும்பாபிஷேகம்.

திருவாரூர் மடப்புரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமிக்கும், ஸ்ரீ ராமச்சந்திர ஸ்வாமிக்கும், ஆலய ஜீர்ணோத்தாரணஞ் செய்து நாளது தை௴ 21௳ காலை அஷ்டபந்தனமாகக் கும்பாபிஷேகம் மிகவுஞ் சிறப்பாக மடப்புரம் செங்குந்த கனவான்களால் நடத்தப்பட்டது.

* * *

### மோகனூர் முருகன் திருவிழா.

சேலம் ஜில்லா மோகனூர் ஸ்ரீ காந்தமலை முருகப் பெருமானுக்கு மார்கழி௴ 25-ந்தேதி முதல் தை மாதம் 5-ந்தேதி வரை மிகச் சிறப்பாக பிரம்மோற்சவம் நடைபெற்றது.

* * *

### அன்னதான தர்மம்.

கோவை ஜில்லா மருதமலையில் கோயில் கொண்டுள்ள மருதாசல மூர்த்தி சந்நிதானத்தில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று ஏழைகள் நூறு பேருக்கு அன்னதானஞ் செய்யக்கருதி ஒவ்வொரு அங்கத்தினரும் மாதம் நான்கணா வீதம் 10 அங்கத்தினர்கள் இரண்டாண்டுகளாகச் செலுத்தி வந்த சந்தாத்தொகை ரூபா 150 தற்போது உள்ளதென்றும், அத்தொகை போதாமையால் செங்குந்தர்கள் தத்தம்மால் இயன்ற அளவு உபகரிக்க வேண்டுமென்றும் கோவை ஜில்லா கணபதிகிராமம் கீ. கா. பழனியப்ப முதலியார் குமாரர் கந்தசாமி முதலியார் எழுதுகிறார்.

* * *

### இந்திய சயன்ஸ் காங்கிரஸ்.

௧௭-வது இந்திய சயன்ஸ் காங்கிரஸ் ஜனவரி 2-ம் தேதி, அலகபாத் செனட் மண்டபத்தில் நடைபெற்றது. கவர்னர் ஸர் மால்கம் ஹெய்லி காங்கிரஸைத் திறந்துவைத்தார். பூத, பௌதிக, ரஸாயன சாஸ்திரங்கள் ஜனங்களுக்கு எவ்வாறு தினசரி வாழ்க்கையில் உதவி புரிகின்றன வென்றும், அவை எவ்வாறு மக்களுக்குச்சௌகரியங்களை உண்டுபண்ணுகின்றன வென்றும் அவர் தெளிவுபடுத்திக் கூறினார். பின்னர், கர்னல் கிறிஸ்டபர் தலைமை வகித்து, நோய்களைப் பற்றிய சாஸ்திரத்தை விளக்கிக் கூறினார்.

* * *

### கவர்ன்மெண்டு நிர்வாக சபை.

சென்னை கவர்ன்மெண்டு நிர்வாகசபை மெம்பர் பதவியைச் சென்ற வெள்ளிக் கிழமை மிஸ்டர் ஏ. ஒய். ஜீ. காம்பல் ஏற்றுக்கொண்டார். இதுவரையில் இப்பதவியிலிருந்து வந்த ஸர். நார்மன் மார்ஷ் பாங்ஸ் ராஜசேவையினின்று விலகிஓய்வெடுத்துக் கொள்ளுகிறார். அன்று வெளியான அரசாங்க அறிக்கையில், கனம் ஸர். நார்மன் மார்ஷ் பாங்ஸ் அவர்கள் சென்ற ௩௪ வருடங்களாகப் பல உயர்தர பதவிகளை நிர்வகித்து இயற்றியிருக்கும் ஊழியத்தையும், சிறப்பாக அவர்கள் சுமார் நாலரை மாத காலமாகச் சென்னை மாகாண கவர்னராக விருந்ததையும் பாராட்டியும், அவர்களுடைய உதவி இனியில்லாமற் போகிறதைப்பற்றி வருத்தப் படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

* * *

கனம் ஸர் உஸ்மான் சாகிபு அவர்களைக் கவர்னர் தமது நிர்வாக சபை உதவித் தலைவராக நியமித்திருக்கிறார்.

* * *

### பப்ளிக் சர்விஸ் கமிஷன்.

சமீபத்தில் சென்னை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சென்ற வெள்ளிக் கிழமை கூடிற்று. தலைவர் ஸர். நார்மன் மார்ஷ் பாங்ஸ் தலைமை வகித்தார். ராவ் சாகிப் வி. பி. கருணாகரமேனன் அவர்கள் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

### புரோகித எதிர்ப்புச் சங்கம்.

புரோகித எதிர்ப்புச் சங்கமொன்று அமைக்க வேண்டுவதைப்பற்றிச் செல்வி கமலாதேவி சடோபாத்தியாயர், திவான் சமன்லால், திரு. எல். ஆர். டையர்சீ, திரு. டீ. ஆர். அம்டிகர் முதலியோரால் அறிக்கையொன்று வெளியிடப் பட்டிருக்கிறது. இந்திய சமுதாய முன்னேற்றத்திற்கும் சகோதரத்துவம் அடையவும் அச்சங்கம் மிகவும் இன்றியமை

யாதென்றும் அத்தகைய ஸ்தாபனத்தின் அவசியத்தை உணருவோர் அங்கத்தினர்களாகலாமென்றும் அவ்வறிக்கையில் கண்டிருக்கிறது.

* * *

## ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்.

திருநெல்வேலி ஜில்லா போர்டுக்குத் திரு. S. குமாரசாமி ரெட்டியார் M. L. C. அவர்களும், தஞ்சாவூர் ஜில்லா போர்டுக்குத் திரு. பன்னீர் செல்வம் பார்-அட்-லா அவர்களும் மூன்றும் முறையாகத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் தொடர்ச்சியாக மூன்று முறை தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்தே இவர்களிடம் பொது மக்கள் எவ்வளவு அன்பு பாராட்டுகின்றனரென்பது விளங்குகின்றது.

* * *

## செட்டிநாட்டரசர்.

இந்து சைனா, பர்மா, மலாய், ஜாவா முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்து விட்டுச் செட்டி நாட்டரசர் கனம் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் 6-2-30ல் சென்னை வந்து சேர்ந்தார் அவரைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் வரவேற்றுபசரித்தனர்.

## சில உண்மை விவரங்கள்

சராசரி ஒவ்வொருவரின் தினசரி வருமானம் அமெரிக்காவில் ரூ. 3-0-0, ஆஸ்திரேலியாவில் ரூ. 2-4-0, இங்கிலாந்தில் ரூபா. 2-0-0, இந்தியாவில் 0-1-7.

* * *

கல்வி பயின்றவர்கள் 100க்கு முறையே ஜப்பானில் 98-ம், அமெரிக்காவில் 95-ம், இங்கிலாந்தில் 98-ம், இந்தியாவில் 5-ம் ஆகும்.

* * *

## தொழில்

இந்தியாவில் கைத்தொழிலினால் பிழைப்போர் 15 லட்சம் பேர். நெசவுத் தொழிலினால் பிழைப்போர் 20 லட்சம் பேர்.

* * *

சமுத்திரத்தின் விஸ்தீரணம் பதின்மூன்று கோடியே எழுபத்திரண்டாயிரம் சதுர மைல்களாம்.

* * *

புகையிலை விற்பனை செய்ய அளிக்கப்படும் லைசென்ஸ் வருமானம் 117017 பவுனாகும்.

* * *

முதன் முதலாகக் கடிகாரத்தைக் கண்டு பிடித்தவர் செண்ட் ஆல்பன்ஸ் பாதிரியார்.

* * *

கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை ஆசிரிய ரொருவர் கண்ணாடிச் சுவர்கள், கண்ணாடிக் கதவுகள், கண்ணாடிப் பலகைகளாலாகிய ஒரு வீட்டைக் கட்ட உத்தேசித்திருக்கிறார்.

* * *

மாகாணசட்டசபை இந்தியா சட்டசபைகளின் காலம் பிப்ரவரி மாதத்தோடு முடிவதால் சைமன் சீர்திருத்தங்களை உத்தேசித்துக் கால அளவைமீண்டும் ஆறு மாதத்திற்கு நீட்டித்திருப்பதாகத் தெரிகிறது.

* * *

உலகத்தில் இப்பொழுது நாற்பது லட்சம் அடிமைகள் இருக்கின்றனரென்று லேடி சைமன் கூறுகின்றார்.

* * *

துருக்கியில் ஒரு வருஷத்திற்கு முன் பத்தில் ஒன்பது பங்கு பேர் படிப்பற்றவரா யிருந்தனராம்; இப்பொழுது பத்தில் ஒன்பது பேர் கல்வி கற்றிருக்கின்றனராம். ஒரு வருஷத்திற்குள் எவ்வளவு மாற்றம் !

* * *

நீர் வியாதி யுள்ளவர்கள் சர்க்கரையை உபயோகிக்கக் கூடாதென்பர். இவர்கள் உபயோகத்திற்காக "சையோனன்" என்ற மருந்து ஜெர்மனியர் ஒருவரால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இதில் சர்க்கரைக்குள்ள இனிப்பு இருப்பினும், அதன் தீமையில்லையாம்.

* * *

இந்தியாவில் விவசாயிகள் பட்டிருக்கும் மொத்த கடன்கள் 674 கோடி ரூபாவாகும்.

* * *

ஆப்பிரிக்காக் கண்டத்தில் எப்பொழுதும் மிக உஷ்ணமாக இருப்பதால் அங்குப் புத்தகங்களின் மீது போடப்படும் அட்டைகள் பிய்ந்து போகின்றனவாம். இதற்காக அலுமினியத்தை அட்டையாக உபயோகிக்கின்றனராம்.

* * *

## மாதர்களின் உரிமை.

முப்பது வயதுக்கு மேற்பட்டு எழுதப்படிக்கத் தெரிந்த மாதர்களுக்கு வாக்குரிமை உண்டெனக் கிரீஸில் ஓர் உத்தரவு வெளியிடப்பட் டிருக்கிறது. ஜூகோசிலேவியா என்னுமிடத்தில் பலதாரம் கொள்ளும் முறை நீக்கப்பட்டு விட்டது. துருக்கியிலும் முன்னரே கமால்பாட்சா பல தாரம் கொள்ளும் வழக்கத்தை ஒழித்து விட்டதுமன்றி, அண்மையில், நகர சபைத் தேர்தலிலும் மாதர்களுக்கு வாக்களிக்க உரிமை உண்டென உத்தரவிட்டிருக்கிறார்.

* * *

## சிறை சென்றால் கலியாண ரத்து.

ஓராண்டுக்கு மேற்பட்டு சிறை சென்றவர்களுடைய மனைவிமார் அது காரணமாகவே கலியாண ரத்து செய்து கொள்ளலாமென சமீபத்தில் எகிப்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி பல மணங்கள் தற்போது ரத்து செய்யப்படுகின்றன. இந்த விவாக விலக்கு வழக்குகளில் பெரும்பாலும் குடியினாலும் லாகிரி வஸ்துக்களின் உபயோகத்தினாலும் கணவன்மார் தண்டிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.



# காஞ்சிபுரத்தில் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு

1929ஆ டிசம்பர் மீ 12உ வியாழக்கிழமை மாலை 4-30-மணிக்குக் காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சபேசுரர் ஆலயத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் நமது இரண்டாவது மகாநாட்டைக் கூட்ட வேண்டிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கவும் வரவேற்புச்சபை அமைக்கவும் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள எல்லா கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகளடங்கிய ஓர் பொதுக்கூட்டம் காஞ்சிபுரம் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் சைவப்பெருந்திருவாளர் ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. இக்கூட்டத்திற்குக் காஞ்சிபுரத்தின் முக்கியஸ்தர்கள் பலரும், ஐயன்பேட்டை, வகரும் பேட்டை, கருக்குப்பேட்டை, நாயக்கம்பேட்டை, களியப்பேட்டை, திம்மம்பேட்டை, ஓரக்காட்டுப்பேட்டை, திம்மராஜாம்பேட்டை, பாவாசாப்பேட்டை, சிவபுரம், சேர்க்காடு, சிவமங்கலம், ஐயங்கார்குளம், பெருநகர், மாணம்பதி, உத்திரன்மேரூர், திருப்புலிவனம், கருங்குழி, மேலவலம்பேட்டை, மணிமங்கலம், திருமழிசை, சென்னை, முதலிய இடங்களிலிருந்து 200 பிரதிநிதிகளுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர். தலைவரவர்கள் மகாநாட்டைச் சிறப்பாக நடத்திவைக்கவேண்டுமென விளக்கிக் கூறி, திரு. ம. ஷண்முகசுந்தர முதலியார் அவர்களை உபந்யசிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி சென்னைத் தலைச்சங்க அமைச்சர். திருவாளர் ம. ஷண்முகசுந்தர முதலியார், M. A. L. T. அவர்கள் மகாநாடுகள் கூட்ட வேண்டியதின் அவசியமென்பதைப்பற்றி 1¼ மணி நேரம் வரையில் ஓர் விரிவுரை நிகழ்த்தினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறின:—

1. தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டைச் செங்கற்பட்டு ஜில்லாவில் வசிக்கும் செங்குந்தர்களின் ஆதரவில் காஞ்சீபுரத்தில் அடுத்த மே மாதத்தில் கூட்ட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. இவ்விரண்டாவது மகாநாட்டுக்கு வரவேற்புச்சபையினராக இன்றைய கூட்டத்தில் விஜயஞ் செய்திருக்கும் அனைவரும் கருதப்படவேண்டும்.

3. இதர வரவேற்புச் சபையினரைச் சேர்த்துக் கொள்ள இக்கூட்டத்திற்கு அதிகாரமுண்டு.

4. கீழ்க்கண்டவர்கள் வரவேற்புச் சபையின் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

---

வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இரவு 10 மணிக்கு இனிதே கலைந்தது.

## தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு வரவேற்பு சபையின் உத்தியோகஸ்தர்கள்

### சமூக மகாநாடு

தலைவர்:—திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் காஞ்சீபுரம்.

துணைத்தலைவர்:--திரு. க. குழந்தைவேல முதலியார் அவர்கள், ஐயன்பேட்டை

### அமைச்சர்கள்

திரு. S. இலட்சுமண முதலியார் அவர்கள், ஐயங்கார்குளம்.

திரு. மு. சண்முக முதலியார் அவர்கள், கருக்குப்பேட்டை.

### வாலிபர் மகாநாடு

### தலைவர்

திரு. சாந்தா. ரா. தங்கவேலு முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

### துணைத்தலைவர்

திரு. M. குருசாமி முதலியார் அவர்கள், சிவபுரம்

### அமைச்சர்கள்

திரு. C. நடராஜமுதலியார் அவர்கள். B. A. காஞ்சீபுரம்.

திரு. S. சரவண முதலியார் அவர்கள், சென்னை.

### இருமகா நாடுகளுக்கும் பொது அமைச்சர்கள்

திரு. M. முருகேச முதலியார் அவர்கள், செங்கல்பட்டு தாலூக்கா & ஜில்லாபோர்டு, மெம்பர்.

திரு. M. ஷண்முகசுந்தர முதலியார் M.A. L.T. அவர்கள் சென்னை. திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

### பொக்கிஷதார்

திரு. ம. கங்காதர முதலியார் அவர்கள் காஞ்சிபுரம்.

பிறகு ஜில்லா முழுவதும் வரிப்பணமும் நன்கொடையும் வசூல் செய்யப் பல கமிட்டிகள் நியமிக்கப் பெற்றன. மகாநாட்டைப்பற்றிய விஷயங்கள் யாவும் பேசி முடித்த பின் தலைவர் தமது முடிவுரையில் தனது அழைப்பிற்கு யாவரும் வந்து தம்மைச் சிறப்பித்தற்காகத் தமது நன்றியறிதலைத் தெரிவித்து அனைவரையும் தம்முடன் ஒத்துழைத்துத் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டைச் செவ்வனே நடத்திவைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பிறகு காஞ்சிச் செங்குந்த மகாஜன சங்கத்தின் காரியதரிசி. திரு. சி. அருணாசல முதலியாரால்

# நமது கடிதங்கள்

## எனது கிராமத்துச் செங்குந்த வாலிபர்களின் தூக்கம்

நமது தாய் நாட்டின் முன்னேற்றங் கருதி நமது நாட்டின் பலவேறு வகுப்பு வாலிபர்கள், உயிரையும் தியாகம் செய்யும். இவ்வமயத்தில் எனது ஊர்ச் செங்குந்த வாலிபர்கள் நம் குல முன்னேற்றத்திற்குச்சிறிதளவும் பாடுபடமுற்படா திருப்பது.பாமரர் எள்ளி நகையாடத்தக்க செயலே யாகும். மேலும் நம்மவர்கள் சுமார் 40 குடித் தனமுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் நம் வாலிபர்கள் சங்கங்களை நிறுவித் நம் சமூகத்துறையில் பாடுபடுகிறார்களெனில் சுமார், 1000 வாலிபர்களையுடையஎனதூரில் நம்மவர்கள் வாலிபச் சங்கம் இல்லாதிருப்பது மிகவும். விசனிக்கத் தக்கதேயாகும் சில மாதங்களுக்கு முன் ஏற்படுத்திய சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் மேற்படி சங்க நிர்வாகங்களைக் கவனியாமல் விட்டு விட்டதை நோக்கின் அவர்களைத் திறமையற்றவர்கள் என்று சொல்வதா? கல்வியற்றவர்கள் என்று சொல்வதா? என்றுதான் கேட்கிறேன். கல்வியின் நிமித்தம் பிரபல வர்த்தகர்கள் மக்களாகிய அவர்களுக்கு இது ஒரு குறைவாகத் தோன்றவில்லையா ? அவர்கள் இனியேனும் எமது ஊரில் நம் சங்கம் ஒன்றை நிறுவி, நம் குல முன்னேற்றத்திற்குத் தங்கள் தங்களால் இயன்றவரை உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அ. ஆ. மாரியப்ப முதலியார்.

## தலைச்சங்க நிர்வாகிகளுக்கு

பள்ளிபாளையம் சன்மார்க்க செங்குந்த வாலிப சங்கத்தின் வேண்டுகோள்:—

திரு. வா. பொன்னம்பலம் அவர்கள் சென்ற மாத மித்திரனில் நமது இயக்கம் பலப்படுவதெப்படி என்ற தலையங்கத்தில் அறிவித்துள்ள விஷயங்களை மிகமகிழ்வுடன் வரவேற்கிறோம்.

பொது நலமே பெரிதெனக் கொண்ட அப்பெரியார் வயதில் சிறியோராயினும் சரி, எம் குலத் தொண்டாற்ற உதித்த அண்ணலென்று செங்குந்த உலகம் கூறக் கடமைப்பட்டுள்ளது. அவர் நமது தலைச்சங்கத்திற்குக் கூறவேண்டியவற்றை ஒன்றுவிடாமல் கூறியிருப்பதால் மேன்மைதங்கிய நமது தலைச்சங்க நிர்வாகிகள் விசேஷக் கமிட்டி கூடி திரு. வா. பொன்னம்பலம் அவர்கள் கூறியுள்ளவைகளை எவ்வித மாறுதலின்றியும் சட்டமியற்ற வேண்டுவதுடன் நாம் ஒன்று கூற விரும்புகிறோம். அதாவது,

நமது மகா நாட்டிற்குக் கிளைச்சங்கங்கள் தேர்ந்தெடுத்தனுப்பும் பிரதிநிதிகளில் இருவராவது அல்லது ஒருவராவது நமது மகா நாட்டு விஷய ஆலோசனைக்கமிட்டிக்கு மெம்பராக இருக்க உரிமையுள்ளவர்கள் என்னும் விஷயத்தையும் தாங்கள் யோசித்துச் சட்டமாக இயற்றுமாறு கோருகிறோம். கிளைச்சங்கங்களுக்கு நமது ஈரோடு மகாநாட்டில் இத்தகைய உரிமைகள் இல்லாததுபற்றி வருந்தினார்கள் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம், விஷய ஆலோசனைக் கமிட்டிக்குக் கிளைச்சங்க டெலிகேட்டுகளுக்கு மேற்படி உரிமை அவசியம் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்,

இப்படிக்கு
மேற்படி சங்கத்தின் உத்தரவுக்கு
காரியதரிசி ப, நஞ்சப்ப முதலி.
பள்ளியபாளையம்.

## தொண்டைநாட்டுச்சகோதரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

### முதல் மகாநாட்டிற்கு முன் நமது நிலைமை:

நமது தலைச் சங்கத்தின் பெரு முயற்சியால் சென்ற வருஷம் ஈரோட்டில் நமது முதலாவது மகாநாடு எதிர் பாராச் சிறப்போடு நடந்தேறியதனால் உண்டாகிய பயனை இப்போது நாம் உள்ளங்கை நெல்லிக்கனி என உணர்ந்துள்ளோம். மகாநாடு கூடுவதற்கு முன் அது கூடிய கோவை ஜில்லாச் செங்குந்தர்கள், அதாவது ஈரோட்டைச் சூழ்ந்துள்ள கிராமச் செங்குந்தர்களும், கோயமுத்தூரை அடுத்த வடவள்ளி, சண்டிபாளையம், தொண்டாமுத்தூர், கணபதி முதலிய கிராமச் செங்குந்தர்களும், ஒருவரை ஒருவர் இன்னாரெனத் தெரிந்து கொள்ள முடியாதநிலைமையிலிருந்தார்கள் என்றால், ஏன், கோயமுத்தூரிலுள்ள இரண்டு பிரபல வியாபாரிகள் வியாபார முறையில் ஒருவரை ஒருவர் அறிவரேனும் இருவரும் செங்குந்த குலத்தைச் சார்ந்தவர்கள் என மகாநாடு கூடும் வரையில் அறியாதிருந்தார்கள் என்றால், குமரி முதல் வேங்கடம் வரையிலுள்ள தமிழ் நாடு, மலையாளம், கொச்சி, திருவிதாங்கூர், இலங்கை, பர்மா, தென்னாப்பிரிக்கா, மலேயா, இரங்கோன் முதலிய பல நாடுகளிலும், பரவியுள்ள செங்குந்தர்கள் என் நிலைமையில் இருந்திருப்பார்கள், என்பதைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமோ ?

### மகா நாட்டிற்குப் பின்.

தெற்கே கன்னியா குமரிக்கடுத்த கோட்டாற்றிலும், மேற்கே கொச்சி, பாலக்காட்டிலும், கிழக்கே நாகப்பட்டணத்திலும், வடக்கே காஞ்சி, சென்னையிலும், ஏன் தென்னாப்பிரிக்காவிலும், இரங்கோனிலும், சிங்கப்பூரிலும், இலங்கையிலும் வதியும் செங்குந்தர்கள் இப்போது ஒருவருக் கொருவர் சகோதர பான்மை பூண்டு ஒரு குடும்பத்தவரைப் போல் ஆர்வத்தோடு அளவளாவி வருகிறார்கள். உதாரணங்கள் காட்டப்புகின் விரியுமென்றஞ்சி விடுக்கின்றேன். இவ்வளவிற்கும் முக்கிய காரணம், நமது தலைச் சங்கத்தின் இடைவிடா முயற்சியும், வீடு தோறும் மாதா மாதம் நம்மைத் தேடிவரும் மித்திரனும், கொங்கு நாட்டுச் சகோதரர்கள் கூட்டிய மகாநாடுமே யாகும். ஒருவரை ஒருவர் நேரே சந்திக்கச் செய்து, அறிமுகம் செய்வித்தது மகாநாடென்பதிற் சந்தேகமுமுண்டோ ? நம்மிடையே இதுவரையில் வெளிப்படையாய்த் தோன்றாது மறைந்திருந்த ஒற்றுமையையும், பலத்தையும், குலாபிமானத்தையும் உலகமறிய வெளியாக்கியது மகா நாடன்றோ ? நம்மிடையே ஒற்றுமையாவது, நாம் மகாநாடு கூடுவதாவது, இது சிறு பிள்ளைகள் விளையாட்டே என்று சொல்லி பராமுகமாயிருந்த சில வயோதிகர்களையும் சந்தோஷிக்கச்செய்து, தலைச்சங்க நிர்வாகிகளுக்கு மிகுந்த ஊக்கம் தந்து, பலரும் உடனிருந்து ஒத்துழைக்கவும், முன்வரச் செய்தது ஈரோட்டில் கூடிய மகா நாடன்றோ ?

### இரண்டாவது மகா நாட்டிற்கு மாபெருங்கூட்டம்.

ஆகையால் இவ்வருஷம் வேனிற்காலத்தில் சான்றோர் நிறைந்த தொண்டை நன் நாட்டுத் தலைநகராகிய காஞ்சிபுரத்தில் இரண்டாவது மகாநாடு கூட்ட நமது தலைச்சங்கம் முயன்று வருவது மிகவும் போற்றத் தக்கதாகும். ஸ்ரீ காமாக்ஷியம்மன் நம்மவர்களுக்கு ஆத்மார்த்த தெய்வமாகவும், காஞ்சீபுரம் நம் மூதாதையர் வசித்த இடமாகவும் கருதப் படுகிறபடியால், அப்புண்ணிய க்ஷேத்திரத்தைத் தரிசிக்க வேண்டு மென்ற பேரவா முக்கியமாய்க் கொங்கு நாட்டுச் செங்குந்தர்களுக்கும், பாண்டி நாட்டுச் செங்குந்தர்களுக்கும் உண்டு ஆகையால், காஞ்சிக்குத் தெற்கிலும் மேற்கிலுமிருந்து மகா நாட்டிற்குச் சென்ற வருஷத்தைக் காட்டிலும் பிரதிநிதிகள் இரண்டு மூன்று பங்கு அதிகமாகவே வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. அன்றியும் சென்ற வருஷம் மகா நாடு இவ்வளவு விமரிசையாக நடைபெறுமென்று எண்ணி ஏமாறிப்போன அநேகர் இந்த மகா நாட்டிற்குத் தவறாமல் வரத் தயாராயிருக்கிறார்கள்.

### சில குறைகள்.

நமது முதல் மகாநாட்டின் நடவடிக்கைகள் பெரும்பாலோர்க்கு மிகுந்த திருப்தியை விளைவித்ததேனும், குறை பாடுகள் இல்லாமற் போகவில்லை. பதினாயிரக் கணக்கான ஜனங்கள் ஒருங்கு கூடிய அதிலும் முதல் முதல் நடத்தும் இத்தகைய பெருங் கூட்டங்களில் குறை பாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆகையால் அவற்றைப் பாராட்டுதல் தகுதியன்று. ஆயினும், முக்கியமான ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். பல இடங்களிலுமிருந்து பல பிரபல வித்வான்களும், மேதாவிகளும், வியாபார நிபுணர்களும், குலாபி மானிகளும் வந்திருந்தும் மகாநாட்டில் அவர்கள் பேசவும் அதன் மூலம் அவர்கள் இன்னின்னாரென்று பொது ஜனங்கள் அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் வாய்க்காமல் போனது அநேகர் மனதில் பெருங் குறையாகவே இருந்து வருகிறது.

### வேண்டுகோள்.

ஆகவே, நமது இரண்டாவது மகா நாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் அவர்களையும், செங்கற்பட்டு ஜில்லாச் சகோதரர்களையும் யான் பணிவுடன் கேட்டுக் கொள்வது யாதெனில், இங்கிலாந்திலிருந்து வெளிப் போந்து பல்லாயிர மைல் தூரத்திலுள்ள கெனடா, ஆஸ்திரேலியா, நியூசிலெண்டு, தெயாரு முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று குடியேறிய ஆங்கிலேயர்கள் தங்கள் தாய் நாடாகிய இங்கிலாந்திற்குச் செல்ல நேரின் அப்போது அவர்கள் அந்நாட்டையும், லண்டன் நகரத்தையும், தேம்ஸ் நதியையும் எவ்வளவு ஆர்வத்தோடும், களிப்போடும், சுதந்தரத்தோடும் நோக்கி மகிழ ஆசைப்படுவார்களோ அது போலவே உலக முழுதும் பரவியுள்ள செங்குந்தர்கள் அனைவரும் தொண்டை நாட்டையும், காஞ்சீபுரத்தையும், காமாக்ஷியம்மனையும், தொண்டை நாட்டு நமது கணங்களையும், மகா நாட்டுச் சமயத்தில் கண்டு களிக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்பதை அறிந்த யான் முன்னதாகவே தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகையால் பெருந் திரளாகப் புதிதாக வர இருக்கும் சகோதரர்களுக்குத் தேவையான சௌகர்யங்கள் முன்னதாகவே செய்யுமாறும், மகா நாட்டுச் சமயத்தில் கூடியவரையில் பிரபலஸ்தர்கள் அனைவருக்கும் பேசும் சந்தர்ப்பம் அளிக்குமாறும் வரவேற்புக் கழகத்தாரை மிகவும் தாழ்மையாக வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோ. சி. மா. அர்த்தநாரி முதலியார்,
கோட்டூர் ஐயம் பாளையம்.

### நமது பெண்களும் மகா நாடுகளும்.

தற்போது உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் எல்லாச் சமூகங்களும் முன்னேற்றம் என்னும் ஓர் உன்னத இலக்ஷியத்தையே குறியாகக் கொண்டு, அதை யடைவதற்குப் பலவகையிலும் முயற்சித்து வருவது நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமே. இங்ஙனம் முன்னேற்ற ஏணியில் ஏற முற்பட்டிருக்கும் எந்த நாடும் அல்லது எந்தச் சமூகமும் அவ்வேணியில் முட்டின்றி ஏறி அதன் உச்சியை அடையவேண்டுமானால் அச்சமூகத்தின் அல்லது அந்நாட்டின் ஆண்பெண் இருபாலரும் தமக்குள் மாறின்றி ஒத்துழைத்தல் இன்றியமையாதது. அங்ஙனமின்றி, ஆண்கள்மட்டும் எவ்வளவு முயன்ற போதிலும் அவர்கள் சமூகமோ நாடோ முன்னேற இயலாது. பண்டைக் காலத்தில் நம் தமிழ்நாடு அவ்வளவு உன்னதமான நாகரீகமும் செல்வமும் பெற்றிருந்ததற்குக் காரணம் என்ன? ஆராய்ந்து பார்த்தால் பெண்களே முக்கிய காரணம் என்பது

விளங்காமற் போகாது. அவ்வீரத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பாலோடு வீரத்தையும் ஒழுக்கத்தையும் கலந்து ஊட்டினர். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் வீரத்தையும் ஒழுக்கத்தையுமே தங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்விஷயத்தைப் புகைப் பட மெடுத்தாற் போல் சொல்லிசைவாய்ந்த நல்லிசைப் புலவர்பலர் அருந்தமிழ்ப் பாக்களிற் பாடிவைத்துப் போயிருக்கின்றனர். உதாரணமாக,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற புறநானூற்றுப் பாட்டைப் பார்க்கலாம். இன்னும் ஒரு வீரப்பெண்மணி தன் மகன் யுத்தகளத்தில் புறமுதுகு காட்டி ஓடினன் என்று கேட்டுக் கடுங்கோபங் கொண்டு அங்ஙனமிருப்பின் 'உண்டவென் முலை யறுத்திடுவென்' என்று வாளெடுத்துப் போர்க்களம் நோக்கிச் செல்லவில்லையா? அம்மம்ம! இத்தகைய வீரந் திகழ்ந்த விளங்கிழை மகளிர் எத்தனை பெயர் நந்தமிழ் நாட்டில் இருந்திருக்கின்றனர்! அவர்களுடைய மக்கள் பெருஞ்சீரும் சிறப்பும் பெற்றிருந்தது வியப்பாகுமோ? இன்னும் இராஜ புத்திரர்கள் உலகத்திலேயே சிறந்த வீரர்கள் என்று பெயர் பெறுவதற்கு அக்குலப் பெண்மணிகளின் வீரமும் கற்புமன்றோ காரணமாயிருந்தது? ஆகவே ஒரு நாடோ அல்லது ஒருசமூகமோ முன்னேற்றமடையவேண்டுமானல் பெண்கள் முன்னேற்றம் மிக முக்கியமென்பதும், ஆண்பெண் இருபாலரும் ஒத்தமனத்தினராய் உழைத்து வருதல் இன்றியமையாததென்பது பெற்றும். ஒரு வண்டியில் பூட்டிய இருமாடுகளும் ஒத்துப் போனலன்றோ வண்டி நன்ருய் ஓடும்?

இங்ஙனம் ஒரு சமூகத்தின் ஆண்களும் பெண்களும் ஒத்துழைக்க வேண்டுமானல் அவ்விருபாலர்க்கும் கல்வி அவசியம். அதிலும் பெண்கள் கல்வி கற்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். பெண்களே நாளைய மனிதர்களின் தாய்மார்கள்; அவர்களே சிறுவர் சிறுமிகளின் முதல் உபாத்தியாயர்கள்; அவர்கள் தான் சிறுவர் சிறுமியர்களை நல்வழியிலோ தீயவழியிலோ திருப்புபவர்கள். ஆதலால் ஒரு குலத்தின் ஆண்கள் சுயநலங் கருதாது பொதுநலத்தையே கருதி உழைக்க வேண்டுமானல் பெண்மணிகள் கல்வி கற்றவராயிருக்கவேண்டும். நம் சமூகத்திலோ வென்றால் ஆண்களே கல்வி கற்பதில்லை. இனிப் பெண்களைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ! கல்வியில்லாக் குறையாலன்றே நம் சமூகம் இவ்வளவு பிற்போக்கான நிலைமையிலிருக்கிறது. இனியேனும் நங்குலத்தார் ஒவ்வொருவரும் தம்மக்களுக்கு அதிலும் முக்கியமாகப் பெண்களுக்குக் கல்வி பயிற்றுவிக்க முன்வரவேண்டும். பெண்களுக்குக் கல்வி கொடுக்கின் ஆண்களுக்குத் தானே வந்துவிடும்.

சென்ற ஆண்டு ஈரோட்டில் நடந்த நம் முதல் மகாநாட்டில் பெண்கள் முன்னேற்றத்துக்குரிய பேச்சு நிகழ்ந்தது. ஆனல் ஏறக்குறைய எல்லாச் சொற்பொழிவாளர்களும் காகிதத்தில் எழுதிப் படித்துவிட்டதால் முக்கியமான விஷயங்கள் சாதாரண ஜனங்கள் மனதில் நன்ருய்ப் பதிய இடமில்லாமற் போய்விட்டது. மேலும் அவைகளெல்லாம் வார்த்தையோடு போய்விட்டனவே யொழிய பெண்கள் முன்னேற்றத்திற்குரிய ஏற்பாடுகள் ஒன்றும் செய்யப்படவில்லை. மற்றும் நம்முதல் மகாநாட்டில் சொற்பொழி வாற்றிய பெரியாரனைவரும் ஆண்பாலராகவே இருந்தனர். பெண்களுக்கும் விரிவுரை நிகழ்த்தச் சந்தர்ப்பம் அளித்திருந்தால் நலமாயிருந்திருக்கும். சமீபத்தில் நடந்த தேவாங்கர் மகாநாட்டில் ஸ்ரீமதி லலிதபாலசுந்தரம் அவர்கள் பெண்கள் மகாநாட்டு வரவேற்புத் தலைவராயிருந்தது தேவாங்கர் குலப் பெண்களும் தம் குல முன்னேற்றத்தில் ஊக்க முடையவராயிருக்கிறர்கள் என்பதை நன்கு விளக்குகிறது. அவ்விரிவுரையை மித்திரனின் முந்தின இதழ்களில் படித்திருப்பீர்கள். இன்னும் பெண்கள் இயக்கங்கள் பல தோன்றி நம் நாட்டில் கல்வியைப் பரப்புவதிலும் சீர்திருத்தம் செய்வதிலும் மிக ஊக்கத்தோடு உழைத்துவருவது நம் அனைவருக்கும் தெரியும். இத்தகைய இயக்கங்களில் மற்றைய குலப்பெண்கள் நிறைந்திருந்தும் நம் குலப்பெண்களில் ஒருவரேனும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. இதிலிருந்து நங்குலப்பெண்கள் மற்றைய குலப் பெண்களைக் காட்டிலும் மிகப் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறர்களென்பது தெற்றென விளங்குகிறது. ஆதலால் இந்தக் குறையை நிவர்த்தித்து, நங்குலப் பெண்களை மற்றைய குலப்பெண்களோடு சமான அந்தஸ்து பெறச் செய்தலும், தேச நலத்துக்கு உழைக்கும்படி தூண்டுவதும் நமது முக்கிய கடமைகளிலொன்றாகும். இங்ஙனம் அவர்கள் பெரும் இயக்கங்களில் சேர்ந்து உழைக்கவேண்டுமானல் அவர்களுக்கு முதலில் நமது மகாநாடுகளில் தக்க உரிமையும் சந்தர்ப்பமும் அளித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும். அங்ஙனம் பெண்களுக்குத் தக்க உரிமையும் சந்தர்ப்பமும் அளிக்காதவரையில் நம் மகாநாடுகள் சிறந்த மகாநாடுகளாகக் கருதப்படமாட்டா.

கலாசாலைகளில் படிக்கும் நமது செங்குந்த மாணவிகள் கவனித்துத் தங்களது உரிமைகளை பெற்றுப் படிப்பின் பிரயோஜனத்தை மற்ற சகோதரிகளுக்கு எடுத்துரைக்க முன் வருவார்கள் என்று நம்புகின்றோம்.

இவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்து, காஞ்சியில் நடக்கவிருக்கும் நம் இரண்டாம் மகாநாட்டில் பெண்களையும் வரவேற்புச் சபைத்தலைவர்.

[தொடர்ச்சி 45-ம் பக்கம் பார்க்க]






ஒருவன்—ஏனடா ஓடுகிருய்?
இன்னெருவன்—ஓர் சண்டையை நிறுத்த!
ஒருவன்—யார் யார்க்கும் சண்டை?
இன்னெருவன்—எனக்கும் இன்னெரு ஆளுக்கும்.

*

புத்தகப் பூச்சியார்—பரிசுகள் கொடுப்பதற்குப் புத்தகங்களைப் போல் நல்ல பொருளில்லை. உபயோகமாயு மிருக்கும். செலவும் குறைவு.

ஆடம்பர முதலியார்—செலவு குறைவா? உண்மையான சங்கதி! என் மனைவிக்கு ஒரு புத்தகம் பரிசு கொடுக்கப்போய் 8000-ரூபாய் செலவு நேர்ந்தது.

பு. பூ—அப்படிப்பட்ட அதிசயமான புத்தகம் என்னவோ?

ஆ. மு—பி. ஆர். அண்டு சன்ஸ் நகைக் கேட்லாக்.

*

மனைவி—நான் மிக நன்றாகப் பாடுவேன் என்று உங்கள் நண்பரிடம் ஏன் பொய் சொன்னீர்கள்? எனக்கு ச,ரி,க,ம,ப,த,நி,ஸ கூடத் தெரியாதே?

கணவன்—(அன்புடன்) கண்ணே! உன்னைக் கலியாணம் செய்து கொண்டதற்கு நான் ஏதாவது சமாதானம் சொல்லியாக வேண்டுமல்லவா?

*

மளிகைக்கடைச் செட்டியார் ஜவுளிக்கடை முதலியாரைச் சந்தித்து, "முதலியாரே! நம்முடைய நெடுநாள் சிநேகிதத்தைமுன்னிட்டு நீர் என் மகனை உம்மிடம் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

ஜவுளி—அப்படியே யாகட்டும். உமது மகன் என்ன வேலை செய்வான்?

மளிகை—வேலை செய்பவனாயிருந்தால் அவனை என்னுடைய கடையிலேயே வைத்துக் கொள்ள மாட்டேனே?

*

துரை தமது மோட்டார் ஓட்டியின் பிள்ளையைப் பார்த்து "அடே பயலே! நான் யார் தெரியுமா?" என்று கேட்டார்.

பயல்—எல்லாம் தெரியும், ஐயா! நீர் எங்கப்பா மோட்டாரில் சவாரி செய்கிறவர்.

*

காதலி—உங்களுக்காக நான் நரகத்துக்குப் போகவும் தயாராயிருக்கிறேன்.

காதலன்—கண்ணே! நீ அப்படி வாயினல் சொல்லுகிருய். உண்மையாகவே நான் உனக்காக நரகத்துக்குப் போய் விடுவேன். இதை நான் எப்படி நிரூபித்துக் காட்டுவது?

காதலி—(கொஞ்சிக்கொண்டு) நல்லது, சொல்லட்டுமா? என்னைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள்!

*

கணவனும்மனைவியும் பலமாகச் சண்டை போட்டுக் கொண்டார்கள். மனைவி "இனி இந்த வீட்டில் அரை நிமிஷமும் இருப்பதில்லை. இதோ என் தாயார் வீட்டுக்குப் போகிறேன்" என்று கோபமாய்க் கூறினள்.

கணவன் அமைதியாகப் பெட்டியைத் திறந்து ஐந்து ரூபாய்நோட்டு ஒன்றை எடுத்தான். "இந்தா இதோ, ரயில் செலவுக்குப் பணம்" என்று எறிந்தான்.

மனைவி அதை எடுத்துப் பார்த்தாள். பின்னர், முன்னைவிடக் கடுங்கோபத்துடன், "போவதற்காயிற்று, வருவதற்கு எங்கே பணம்?" என்றாள்.

*

தம்பி, உன்னுடைய காதுகளைச் சரியாக உபயோகிக்கிருயா?

ஆகா! ஒரு காதின்மேல் பேனவையும், மற்றொரு காதின்மேல் பென்சிலையும் வைத்து உபயோகிக்கிறேன்.

*

---

(நமது கடிதங்கள், 44-ம் பக்கத் தொடர்ச்சி)

களாகவும், அங்கத்தினர்களாகவும், நிர்வாக சபைகளிலங்கத்தினர்களாகவும், நியமிக்க வேண்டும். மேலும் வாலிபர் மகாநாடு, வர்த்தகர் மகாநாடு, சமூக மகாநாடு, என்பவைகள் போலப் பெண்கள் மகாநாடும் ஒன்று இருத்தல் அவசியம். இங்ஙனமில்லாதவரையில் நம்மகாநாடு முழுபயனைத் தரும் மகாநாடாகா தென்பது திண்ணம்.

M. R. பெருமாள் முதலியார்,
F. A. வகுப்பு, கவர்ன்மெண்ட் காலேஜ்,
கோயமுத்தூர்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## சென்னை ஜில்லா

### மயிலைச் செங்குந்த வாலிபர் சங்கம்

ஷை சங்க ஆதரவில் 22-12-29 மாலை 5 மணிக்கு ஷை சங்கவாசகசாலையில் திரு வி. தக்ஷிணாமூர்த்தி முதலியார் அவர்கள் தலைமையில் திரு. P. V. கணேசமூர்த்தி முதலியார் "உணவு" என்பது பற்றி ஆங்கிலத்தில் 1½-மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தியதும், இரு நண்பர்கள் அதைத் தழுவிப் பேசினார்கள். பின்பு தலைவரின் முடிவுரையான பின் வந்தனோபசாரத்தோடு இரவு 8-மணிக்குக் கூட்ட மினிது கலைவுற்றது.

1-1-30ௐ மாலை 6-மணிக்கு ஷை சங்கவாசக சாலையில் திரு. A. இராமசாமி முதலியார் (சங்க காரியதரிசி) அவர்கள் தலைமையில் திரு. G. ஞானசிராம் நாயகர் அவர்கள் "குலசேகராழ்வார்" என்பதைப்பற்றிப் பேசியபின் தலைவர் முடிவுரை கூறினார். வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 7-30-மணிக்குக் கூட்டமினிது கலைந்தது.

ம. கு. பாலசுந்தரம்.
(காரியதரிசி.)

---

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சீபுரம் செங்குந்த மகாஜன சங்கம்.

தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டை அடுத்த வைகாசிமாதம் முதலில் காஞ்சிபுரத்தில் நடத்துவதற்கு வேண்டியும் பொருள்சேகரிக்கும் முறையை நிர்ணயிக்கும் பொருட்டும் நிகழும் மார்கழிமீ 16ௐ திங்கட்கிழமை மாலை உயர் திருவாளர் ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் தலைமையில் காஞ்சிச் செங்குந்த மகாஜனங்களின் ஊர்க்கூட்டம் கூடியது. அது சமயம் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் நமது இரண்டாவது மகாநாடும், செங்கற்பட்டு ஜில்லா செங்குந்தர்களின் கடமையும் என்பது பற்றி உபந்நியாசித்தனர். பின்னர் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

நமது இரண்டாவது மகாநாடு நடைபெற வேண்டியதின் செலவிற்காக தறி ஒன்றுக்கு ஒரு ரூபா விகிதம் வசூல் செய்ய வேண்டுமென்றும் இந்த ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்தாரும் வசூலித்துக் கொடுத்து ஒத்துழைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டன.

ம. த. சாமிநாதமுதலியார், தலைவர்,

### வட திருநாகேஸ்வரம் செங்குந்த வாலிபர் சங்கம்.

கார்த்திகை 23ௐ மாலை கூடிய கூட்டத்தில் திரு. தி. மே. த. சுந்தர முதலியார் அவர்களைச் சங்கக்கணக்கு எழுதுமாறு நியமித்த பிறகு காஞ்சியில் கூட இருக்கும் நமது இரண்டாவது மகாநாட்டுச் சம்பந்தமாகச் செய்யவேண்டிய விஷயங்கள் யோசிக்கப் பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### திருமழிசை செங்குந்த வாலிபர் சங்கம்

சென்ற மார்கழி 16ௐ மாலை 5-மணிக்குச் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்திராவ் அவர்கள் தலைமையில் கூடிற்று. கடவுள் வாழ்த்துக் கூறியபின் 'திருமழிசைச் செங்குந்த வாலிபர் இயக்கம்' என்னும் இச்சங்கத்தின் பெயரை 'திருமழிசை செங்குந்த வாலிபர் சங்கம்' என மாற்ற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்குத்திரளானஜனங்கள் குழுமியிருந்தார்கள். பூவிருந்தவல்லி உயர்தரப்பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. ஜ. இராஜு முதலியார் அவர்கள் 'கல்வியின் அவசியம்' என்பதைப்பற்றி ஒரு அரிய உபந்யாசம் செய்தார். அவரைப் பின்பற்றித் திரு. பச்சையப்ப உடையார் அவர்கள் நம் வாலிபர்களுக்காக ஒரு இரவு பாடசாலை வேண்டுமென வற்புறுத்திப் பேசினார். பிரம்மஸ்ரீ [illegible] குருக்கள் அவர்கள் 'சத்சங்கத்தின் அவசியம்' என்பதைப்பற்றிப் பேசிய பிறகு, திருவாளர்கள் தங்கவேல் முதலியார் வேலப்பதேசிகர்இருவரும் 'ஒற்றுமை', 'கல்வி' என்பன பற்றிப்பேசினார்கள். தலைவர் முடிவுரையில் நாம் முன்னேறுவதற்கான முறைகளைப்பற்றியும் கல்வியைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். வந்தனோபசாரமும், மனுகுல பத்தஜன சபையாரால் வாழ்த்தும் கூறப்பட்டு, கூட்டம் இனிது கலைந்தது. வேறு சமூகத்தார் அநேகர் வந்திருந்தார்கள் எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### மாணம்பதி செங்குந்தர் சங்கம்.

11-12-29 இரவு 7-மணிக்கு மாணம்பதி செங்குந்தர் சங்கம் ஷை யூர் போர்டு பெண் பாடசாலையில் திருவாளர். சு. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது.

தலைவர் முன்னுரைக்குப்பின் காஞ்சிபுரத்திலிருந்து வந்த 2-வது மகாநாடுச் சம்பந்தமான நோட்டீஸ் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. பிறகு அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.



1. காஞ்சிபுரத்தில் நடைபெறும் ஜில்லா செங்குந்தர் மீட்டிங்குக்கு ஷை சங்க அங்கத்தினர்கள் திரு. வ. இரத்தின முதலியார், சு. அப்புசாமி முதலியார் இவர்கள் இருவரும் போகும்படி தீர்மானிக்கப்பட்டது. மறுநாளே அவசரமாய்ப்போக நேரிட்டபடியால் இருவரும் போய்வரப் பிரயாணச் செலவு ரூபா 1-8-0 சங்க நிதியிலிருந்து கொடுத்தனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

2. நமது தென்னிந்திய செங்குந்தர் 2-வது மகாநாட்டைக் காஞ்சியில் நடத்துதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்ட திருவாளர் காஞ்சிபுரம் ம. த. சுவாமிநாத முதலியாரவர்களுக்கு இச்சங்கம் நன்றி பாராட்டுகிறது.

இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

அ. துரைசாமி முதலியார்
காரியதரிசி.

---

## வட ஆற்காடு ஜில்லா.

### வளர்புரம் செங்குந்தர் கூட்டம்

17-10-29ௐ பெரிய தனக்காரர்கள் முன்னிலையில் கூடியகூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் அரக்கோணம் தாலுக்காவைச் சேர்ந்த வளர்புரம் என்னும் கிராமத்தில் நம் பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பெற்று நெடுங்காலமாகப் பூஜை முதலியவை ஒழுங்காக நடந்தேறிவந்த செல்வ விநாயகர் ஆலயம் ஒன்று இருந்தது. சில கக்ஷிவிரோதத்தினால் சமீபத்தில் ஷை ஆலயத்தில் பூஜையை நிறுத்திவிட வேண்டுமென்று பேசி பூஜைசாமான்களை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

2. நமது குலதிலகருள் ஒருவராகிய ஸ்ரீமான் காங்கேய நல்லூர் மல்லையதாஸர் என்பவர் ஷை கிராமத்து வாலிபர்களிடத்திலுள்ள அன்பினால் பல ஊர்களுக்குச் சென்று காலக்ஷேபம், புராணப் பிரசங்கம் முதலிய செய்து பொருள் திரட்டி ஒரு பஜனை ஏற்படுத்திப் பிள்ளைகளுக்குத் திருப்புகழ் சொல்லிவைத்து 14½- வருஷங்களாக நடத்தினார். திருப்புகழின் பெருமையறியாது பொறாமை கொண்ட சில பெரியோர்கள் அப்பஜனையை பழித்து விடவேண்டுமென்று முயன்று வருவது மிகவும் வருந்தத்தக்கதாயிருக்கிறது.

3. 1922ஆ தக்கோலம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாதிபர் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள் வளர்புரத்திற்கு விஜயஞ்செய்து கிராமத்தார் அனைவரையும் ஒன்றுசேர்த்துச் செங்குந்தர்கள் தீயபழக்கங்களையும் ஆடு கோழிகளை இம்சித்தலையும் அடியோடு விட்டுவிட வேண்டுமென்று பல கதைகளை மேற்கோள்களுடன் தெளிவாக எடுத்துரைத்துத் தூராச்சாரத்திற் குரிய கருவிகளைச் சேர்த்து ஆறுமுகக் கடவுள் சந்நிதியில் தீ யிட்டு நீறுக்கி இன்று முதல் செங்குந்தர்கள் ஷை பழக்கங்களை அனுஷ்டிக்கலாகாது என்று கட்டளையிட்டு அறுமுகப் பெருமான் சந்நிதியிலேயே அவ்வாணையை ஆண், பெண், இளையோர், முதியோர் ஆகிய அனைவரையும் ஒப்புக்கொள்ளும்படி செய்து விபூதிப் பிரசாதமளித்தார். அவ்வாணையின்படி நாளது வரையில் நடந்தேறிவந்த திட்டங்களை இந்தக் கட்சிப் பிளவினால் சில மேதாவிகள் உட்புகுந்து பழைய தூராச்சாரங்களைக் கொண்டாட முயல்வதைக் குறித்து மிகவும் வருந்துகிறோம்.

4. ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள் மாணாக்கராகிய திரு. ஆதிமூல முதலியார் குமாரத்தியாகிய தெய்வபக்தியும், குருவிஸ்வாசமுமுள்ள 22வயது பெண்மணி இறைவன் திருவடி யடைந்ததைப் பற்றி மிகவும் வருந்துகிறோம்.

பெரியதனம் த. கு. நாகப்ப முதலியார்.
வளர்புரம்.

---

## தென்னாற்காடு ஜில்லா

### உடையார்குடி செங்குந்த மாணவர் சங்கம்.

12-12-29ௐ இரவு 8-மணிக்கு இச்சங்கத்தின் 5-வதுகூட்டம் திரு. சி. கணபதி முதலியார் அவர்கள் தலைமையில் செங்குந்தர் பொது மடாலயத்தில் கூடிற்று. அச்சமயம் திருவாளர்கள் சு. மு. பழனி முதலியார், வை. க. ரத்தின முதலியார், சீகாழி பொன்னம்பல சுவாமிகள், மு. செ. மாணிக்க முதலியார், திருத்துறையூர் கு. ஆறுமுகநயினார் முதலியவர்கள் 'கல்வி' 'சங்கம்' "சுகாதாரம்" முதலியவற்றைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரையின் பின் 11 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஷை மடாலயத்தில் 24-12-29ௐ முதல் திரு. மு. செ. மாணிக்க முதலியாரால் இரவு பாடசாலை ஒன்று நிறுவப் பெற்று 25-பிள்ளைகள் வரையில் படித்து வருகிறார்கள்.

மு. செ. சின்னதம்பி முதலியார்,
காரியதரிசி.

---

## தஞ்சை ஜில்லா

### உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம்.

சுக்கிலஹு கார்த்திகைமீ 7ௐ மாலை 7-மணிக்கு திரு. சத்திவேல் முதலியார் அவர்கள் இல்லத்தில் திரு. ம. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் சங்கக்கூட்டம் கூடிற்று. அச்சமயம் திரிபுவனம் ஸ்ரீலஸ்ரீ கலியுக முருகஸ்வாமிகளின் தொண்டர் ஸ்ரீஜத் அம்பிகாதாசர் அவர்கள்,

ஸ்ரீமத் ராமலிங்க ஸ்வாமிகள் பெருமை' என்னும் விஷயத்தைக் குறித்தும்; தமது குருஸ்வாமிகள் மகிமையைப் பற்றியும் ஒரு விரிவுரை செய்தார்கள் எனச் சங்கக் காரியதரிசி சி. க. ஸாமிநாத முதலியார் எழுதுகிருர்.

## சைவ சமரச சன்மார்க்க செங்குந்தர் சங்கம்.

### சுந்தரப் பெருமாள் கோவில்.

19-12-29உ மாலை 7-மணிக்கு மேல்வீதி செங்குந்தர் பொது மண்டபத்தில் சங்கம் கூடிற்று. நாட்டாண்மை திரு. கோவிந்தசாமி முதலியார் அவர்களும் மற்றும் அநேக பிரமுகர்களும் வந்திருந்தார்கள். தலைச்சங்கப் பிரசாரகர் திரு. நா. நாகப்பமுதலியார், திரு. வ. கந்தசாமி முதலியார் இருவரும் 'கல்வி நிதிச்சீட்டு' 'மித்திரன்' 'ஒற்றுமை' முன்னேற்றம்' என்பவற்றைக் குறித்துப் பேசினார்கள். அப்போது நாட்டாண்மை திரு. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் நமது இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டுமென்றும், ஒரு பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் பேசி இது முதல் இச்சங்கத்திற்குத் தம்மால் இயன்ற உதவி செய்யத் தயாரா யிருப்பதாகவும் கூறியது ;மிகவும் பாராட்டத்தக்கது.

30-12-29உ மாலை 6-மணிக்குச் சங்கம் கூடிற்று பிரபல நாட்டாண்மைக்காரர்களான திருவாளர்கள் கோவிந்தசாமி முதலியார். ச. ஆறுமுக முதலியார், அப்பாசாமி முதலியார் முதலிய அநேக பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அப்போது திருவாளர். சா, வேலாயுத முதலியார், முருகய்ய முதலியார், ச. ராமைய முதலியார் மூவரும் முறையே வாய்மை, நம் குலப்பெரியாராகிய சத்தி முத்தம் சச்சிதானந்த முதலியாரின் மாட்சி, நமது முன்னேற்றம் என்பனபற்றித் தெளிவாய்ப்பேசினார்கள். ஷை நாட்டாண்மைக்காரர்களைப்போன்ற பெரியோர்கள் நமது சங்க விஷயத்தில் சிறிது சிரத்தை எடுத்துக்கொள்வார்களாயின் சங்கம் கூடிய சீக்கிரம் நமக்குப் பெருநன்மையை விளைவிக்கு மென்பதில் சந்தேகமில்லை, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### சகோதரர்களுக்கு ஓர் அறிக்கை

குருநாதன் க்ஷேத்திரமாகிய திருவேரக மென்னும் சுவாமிமலையில் தெற்கு வீதிவடசாகாவில் நம் குலத்தவர்க்குச் சொந்தமான மடம் ஒன்று உண்டு. தரிசனத்திற்காகவேனும் சுற்றுப்பிரயாணமாக்வேனும் வரும் நமது சகோதரர்கள் இம்மடத்தில் வந்து தங்கலாம் என்பதை வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

S. M. தங்கவேல்
காரியதரிசி.

---

## சேலம் ஜில்லா.

### செங்குந்தர் சங்கம், மோகனூர்.

16-12-28ல் இவ்வூர் சங்கத்தின் 13-வது கூட்டம் இரவு 9-மணிக்கு திருவாளர் தலைவர் R. சபாபதி முதலியார் இவர்கள் இல்லத்தில் கூடியது கூட்டத்திற்குத்தலைச்சங்கத்தின்பிரசாரகர்கள்திரு. அ. சண்முக முதலியார் திரு- சு. திருநாவுக்கரசு முதலியார் இருவரும் விஜயம்செய்திருந்தார்கள், கூட்டத்திற்கு திரு. R. சபாபதி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள் கடவுள் வாழ்த்துக்கூறிய பின் திரு.தி.அ. சண்முக முதலியார் அவர்கள் 'சங்கத்தின் முன்னேற்ற' விஷயமாய் அநேகம் மேற்கோள்களுடன் சபையோர் ஆனந்திக்குமாறு அரியதோர் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். அதன்பின் சங்கத்தின் வரவு செலவு கணக்குகளும் முன் கூட்டத்தின் நடவடிக்கைகளும் சந்தாத்தொகையும் காரியதரிசியால் வாசிக்கப்பட்டும் வசூலித்தும் இரவு 1-மணி சுமாருக்குக்கூட்டம் இனிது கலைவுற்றது. திரு. அ. தி. சண்முக முதலியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்கு மிகவும் போற்றத்தகுந்தது.

கு. ல. சடையப்பன்,
காரியதரிசி.

---

## மதுரை ஜில்லா

### செங்குந்தர் சங்கம், மதுரை.

24-11-29 இரவு 8 மணிக்குத் தல்லாகுளம் செங்குந்த விநாயகராலயத்தில் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று திரு. ந. சி. நல்லதம்பி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அதுசமயம் இந்நகர்மதிச்சயம் செங்குந்தர்களின்சார்பாகத் திரு. K. V. இராமசாமி முதலியார் அனுப்பிய கடிதம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஷை மதிச்சயம் செங்குந்தர்களால் ஏற்படுத்தப்பட்ட கலியாணம் கமையைச்செல்லூர் செங்குந்தர்கள் ஒப்புக்கொள்ளாததினால் இருதிறத்தாருக்கும் உண்டான ஒற்றுமைக்குறைவை நீக்கும் பொருட்டு ஷை செல்லூர் செங்குந்தர்களையும் வரவழைத்து இருதிறத்தாரும் ஒப்புக்கொண்டபடி அம்மனுவின்மீது முடிவு கூற 8-12-29 தேதிக்குக் கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

8-12-29 பகல் 12 மணிக்கு ஷை சங்க நிலயத்தில் இருதிறத்துச் செங்குந்தர்களுமாக இருநூறு பேர் வரை கூடி யிருந்தனர். மதிச்சயம், செல்லூர் நாட்டாண்மைக்காரர், காரியக்காரர், சங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றுமுள்ள பிரமுகர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். திருவாளர் ந. சி. நல்லதம்பி முதலியார்கூட்டத்திற்குத்தலைமை பூண்டார். முதலாவதாக மதிச்சயம் செங்குந்தர்கள் சார்பிலும் பின்னர் செல்லூர் செங்குந்தர்கள் சார்பிலும் முக்கியஸ்தர்களால் விஷயங்கள் நீண்ட நேரம் எடுத்துச் சொல்லப்பட்டன. சங்கத்தினர் இருதரப்பினர் வாக்குமூலங்களையும் கேட்டுக்கொண்டிருந்தனர். பின்னர் முடிவுகூற தலைவரவர்கள் ஆலோசனையின்படி சங்கத்தின் பதின்மூவ ரடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியின் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள இருதிறத்தினரும் சம்மதித்ததின் பேரில் அக்கமிட்டியார் தனிமையாகக் கூடினர். அக்கமிட்டியின் ஒவ்வொரு அங்கத்தினரின் அபிப்பிராயத்தையும் கேட்டு நெடுநேரம் தீர ஆலோசித்து, இருதிறத்தினருக்குள்ளும் நீரா நிலையிலிருந்த கக்ஷி பேதத்தை ஒழித்து ஒற்றுமையையும் சமரசத்தையும் உண்டாக்கும் நன்னோக்கத்துடன் கீழ்க்காணும் ஏகமனதான. தீர்மானத்திற்கு வந்தனர்.

### தீர்மானத்தின் கருத்தாவது.

மதிச்சயம் வகையரு நம் செங்குந்தர்கள் தங்களுக்குள் செய்து கொண்ட கலியாண மகமை ஒப்பந்தப்படி மாப்பிள்ளை வீட்டாரிடம் மகமைப் பணம் வாங்க வேண்டியதிருக்க பெண்வீட்டாரிடம் ஷை மதிச்சயம் முக்கியஸ்தர்களில் ஒருவர் பணம் முதலில் வாங்கின நிமித்தம் அவ் வொப்பந்தம் முற்றிலும்அமுலுக்குக்கொண்டுவரப்படவில்லையென இக்கமிட்டி கருதுவதால் பெண் வீட்டாரிடமே திரும்பவும் ஷை மகமையை வாங்கிக் கொள்ளவேண்டு மெனவும் இனி நடந்து வரவேண்டிய கலியாண மகமை விஷயத்தில் இருதிறத்தினருக்குள்ளும் போட்டி ஏற்படாமலிருக்கும் பொருட்டுக் கமிட்டியார் எடுத்துக்காட்டிய பிரகாரம் ஒப்புக்கொள்ள வேண்டு மென்பதுமாகும்,

பிறகு தீர்மானம் முழுவதும் சபையிலிருந்த இருதிறத்தாரின் முன் வாசிக்கப்பட்டது. தீர்மானத்தின் கருத்து நன்கு தலைவரவர்களால் சபையினர்க்கு விளக்கிக் காட்டப்பட்டது. அதன் பேரில் இருதரப்பாரும் அத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு அதனை வெகுவாய்ச் சிலாகித்தனர். இத்துடன் இதர சில விஷயங்களும் முடிவு செய்யப்பட்டன. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 2 மணிக்கு முடிவுற்றது.

நம்மவர்களுக்குள்தீராப்பகையையும் வேற்றுமையையும் உண்டு பண்ண விருந்த இக்கக்ஷி பேதத்தை ஒழிக்கச் செங்குந்த இளைஞர் சங்கத்தின் அங்கத்தினர்களும் தலைவரும் முன்னின்று தீவிரத்துடன் ஆற்றிய தொண்டு செங்குந்த உலகத்தால் சாலவும் பாராட்டற்பாலதாகும்

முத்து கருப்ப முதலியார்,
எஸ். மாணிக்கம்,
காரியதரிசிகள்.

### செங்குந்தர் இளைஞர் சங்கம், மதுரை.

1-1-1930ந்தேதி தல்லாகுளம் செங்குந்த விநாயகராலயத்தில் இரவு 7 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் கூடியது. தலைவர் திரு. சி. பொன்னம்பல முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். கடவுள் வணக்கம் முடிந்ததும் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறலாயின.

1. டெல்லிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த மேன்மை தங்கிய கனம் வைஸ்ராய் அவர்களது ரயில் வண்டியைச் சேதப்படுத்த முயற்சித்ததை இச்சங்கம்மிகவன்மையாகக்கண்டிப்பதோடுமேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்களும் லேடி இர்வின் அவர்களும் தெய்வாதீனமாகத் தப்பித்தது குறித்து தனது மனமார்ந்தசந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. பிரபல செங்குந்த சமூகத் தலைவரான திருவாளர் A.K.S. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அருப்புக் கோட்டை யூனியன் போர்டு பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து இச்சங்கம் தனது மனமகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

3. செங்குந்தர் இலவச வாசகசாலையை இளைஞர் சங்கமே ஏற்று நடத்திவர வேண்டுமெனத் தீர்மானிப்பதோடு, வாசகசாலைக்கு வேண்டும் சட்ட திட்டங்களைத் தயாரித்து அடுத்த கூட்டத்தில் ஆஜர் செய்யுமாறு காரியதரிசிகளை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

4. தல்லா குளத்தில் நடைபெறும் இராப் பள்ளியையும் இச்சங்கமே ஏற்று நடத்த தீர்மானிப்பதோடு அதற்கெனவரும் சந்தா, நன்கொடை போன்ற இதர வருவாய், அஃது நடைபெறுவதற்கு ஏற்படும் செலவுகள் சம்பந்தமாயும் உள்ள கணக்குகளைத் தனியாக வைத்துவர வேண்டுமெனவும் இவ்விராப்பள்ளியின் நிதியிலிருந்து இதர செங்குந்தர் பள்ளிகளுக்கோ சங்கச் செலவுகளுக்கோ ஈடு செய்யக்கூடாதெனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

5. செங்குந்தர் வாசகசாலையின் முன்னேற்றங் கருதி அதன் மேற்பார்வைக்கென சம்பளத்தில் லைப்ராரியன் (Librarian) ஒருவரை நியமித்துக் கொள்ளக்காரியதரிசிகளுக்குஇக்கூட்டம் அதிகாரமளிப்பதோடு அவ்வாறு செய்யப்படும் நியமனத்தை அடுத்த கூட்டத்தில் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகிறது.

அப்பால் மாணவர் S. V. வீரப்பன் அவர்கள் 'பெண்ணின் பெருமை' என்னும் விஷயங் குறித்து அரியதோர் உபந்நியாசம் நிகழ்த்தினர்.

திரு. எஸ். மாணிக்கம் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டுக் கூட்டம் இரவு 10 மணிக்குக் கலைந்தது.

சென்னை. கனகசபாபதி
V. Veerabhadran.
காரியதரிசிகள்.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

18-12-29 மாலை 7 மணிக்கு ஸ்ரீ ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. சு. மாயாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் சங்கங் கூட்டம் கூடிற்று. கடவுள் வணக்கம் ஆனதும், திரு. ரு. சுப்பையா முதலியார் அவர்கள் 'புலால் மறுத்தல்' என்பது பற்றி 2 மணி நேரம் பேசினர். 'பொது விஷயம்' என்பதுபற்றி திரு. நி. கு. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பேசிய பிறகு இச்சங்கத்தைத் தலைச் சங்கத்தோடு இணைக்க வேண்டுமென்றும், ஆண்டு கட்டணத்தை உடனே அனுப்பிவிட வேண்டுமென்றும், நமது இரண்டாவது மகா நாட்டிற்கு இரண்டு நபர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டு மென்றும் தீர்மானிக்கப் பெற்றன. தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

S. சோமசுந்தர முதலியார்.

---

## திருநெல்வேலி ஜில்லா

### திருநெல்வேலி செங்குந்தர் வாசகசாலை.

1-1-30 திரு. D. முத்தையா B. A. அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் வாசகசாலை ஒன்றுஇருத்தல் வேண்டுமென்றும், அதற்குச் செங்குந்த மித்திரன்,' தமிழ்நாடு, ஆனந்த போதினி முதலிய பத்திரிகைகள் தருவிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றன.' இவ்வாசக சாலைக்கு திரு. த. பழனியாண்டி முதலியார் தலைவராகவும் திரு. S. மாணிக்கவாசக முதலியார் பொக்கிஷதாராகவும், திரு. R. சோமசுந்தர முதலியார் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அநேகர் மெம்பர்களாகச் சேர்ந்தார்கள்.

D. பழனியாண்டி முதலியார்,
தலைவர்.

---

## செலம் ஜில்லா

### செங்குந்த இளைஞர் அபிவிர்த்தி சங்கம்.

### அம்மாப் பேட்டை, சேலம்.

13-12-29 மாலை 6 மணிக்கு சுந்தரமூர்த்தி மடாலயத்தில் இச்சங்கத்தின் கூட்டம் உயர் திரு. P. R. சோமசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்போது திரு. S. P. கந்தசாமி முதலியார் கடவுள் வாழ்த்து கூறிய பிறகு திரு. S. V. கந்தசாமி முதலியார் மதுபானமே நமது க்ஷீன திசைக்குக் காரணம் என்பதைப் பற்றிப் பேசி இத்துர்ப்பழக்கத்தை நம்மிடையே அடியோடு ஒழித்து விடுமாறு முயல நமது வாலிபர்களைக் கேட்டுக் கொண்டார். திருவாளர்கள் S. பழனியாண்டி முதலியார், S. P. கந்தசாமி முதலியார் இருவரும் அதே விஷயத்தைக் குறித்து விமரிசையாகப் பேசினார்கள். திரு. S. S. அர்த்தநாரி முதலியார் 'மது பானம் எவ்வாறு சுகாதாரத்தைக் கெடுக்கிறது' என்பதைப்பற்றி நன்கு விளக்கிக் காட்டினர். கடைசியாக தலைவர் அவர்களின் அழகான முடிவுரை முடிந்ததும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

*

29-12-29 மாலை 6-30 மணிக்கு ஷை மடாலயத்தில் உயர் திரு. P. R. சோமசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் சங்கம் கூடிற்று. திரு. S. S. அர்த்தனாரி முதலியார் கடவுள் வணக்கம் கூறியபின் திருவாளர்கள் அருணாசல முதலியார், ச. கந்தசாமி முதலியார், A. நாகரத்தின முதலியார், S. P. கந்தசாமி முதலியார், K. M. L. மாணிக்க முதலியார், S. S. அர்த்தநாரி முதலியார், M. முத்துசாமி முதலியார் ஆகிய பிரமுகர்கள் ஒழுக்கம், கல்வி, தொழில், கடவுள் வழிபாடு, சாஸ்திரம், ஜீவகாருண்யம், வியாபாரம், மனிதர் கடமை முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசியபின் வந்தனோபசாரத்துடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என திரு. S. S. அர்த்தநாரி முதலியார் (உபகாரியதரிசி) எழுதுகிறார்.

---

## கோவை ஜில்லா

### கோவை ஜில்லா செங்குந்தர் சங்கம்.

இச்சங்கத் திறப்பு விழாவிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் அசந்தர்ப்பத்தால் வர முடியாத படியால் கொல்லங்கோடு திரு. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள் தலைவராய் நியமிக்கப் பெற்றனர். திறப்புவிழா லண்டன் மிஷன் உயர்தரக்கலாசாலைத் தலைமை ஆசிரியராகிய திரு. M. G. சற்குணம் M. A. L. T. அவர்களால் நிறைவேற்றப் பெற்றது. அப்போது ஆசிரியர் அவர்கள் செங்குந்த சமூகத்திற்கு உயிர் நாடியாயிருப்பவர் செங்குந்த வாலிபர்களே என்றும், நமது முன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் ஊக்கம் கொண்டு உழைக்க வேண்டியவர்கள் அவர்களே என்றும், அன்னவரோடு பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறியது கவனிக்கத் தக்கது.

பின்னர் திருவாளர்கள் E. V. சிங்காரவேலு முதலியார் அவர்கள் B. A. மதுவிலக்குக் கமிட்டி காரியதரிசி கோயமுத்தூர், E. V. துரைசாமி முதலியார் மூலத்துறை, P. C. சுப்பைய முதலியார் மூவரும் முறையே சமூகசங்க ஸ்தாபனத்தின் அவசியம், கல்வி, மதுவிலக்கின் அவசியம் என்ற விஷயங்களைப்பற்றித் தெளிவாய்ப் பேசினார்கள்.



### கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

1. நமக்குப் புத்துயிரளித்து நம்மை ஒன்று சேர்த்துவரும் செங்குந்த மித்திரனை ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்கவேண்டும்.

2. கட்டாயப் படிப்பை அமுலுக்குக் கொண்டு வருவதற்கும், இலவசப் பெண்கல்வி ஆதரவிற்கும், சாரதா மசோதாவைச் சட்டமாக்குவதற்கும், மதுவிலக்கிற்கும், கவர்மெண்டார் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இச் சங்கம் நன்றி செலுத்துகின்றது. இவற்றை நம்மவர் பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டியதென்று இச்சங்கம் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஸ்தலஸ்தாபனங்களிலும், நகர - பரிபாலனத்திலும், அரசாங்க உத்தியோகத்திலும், நம்மவருக்குப் பங்கு கொடுக்குமாறு அதிகாரிகளை இச்சங்கம் வேண்டிக்கொள்ளுகிறது.

4. இச்சில்லாவிலுள்ள எல்லாக் கிராமங்களிலுமுள்ள நங்குல மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்கள் அந்தஸ்தையும் குறித்து ஒரு அறிக்கை தயாரித்துக் காரிய நிர்வாக சபைக்கு அனுப்ப வேண்டியது.

5. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் எடுக்கப்பட்ட பிரதிநிதிகளையுடைய காரிய நிருவாக சபை ஒன்றை நிருமாணித்தல்.

6. அவகாச முள்ளபோது மாணவர்களும் பெரியார்களும் கிராமங்களுக்குச் சென்று கக்ஷிப்பிரதிகக்ஷிகளை ஒழித்தும், சங்கங்கள் நிறுவியும், முன்னேற்ற வழிகளை எடுத்துப் போதித்தும் வரவேண்டும்.

கீழ்க்கண்ட காரிய நிருவாக சபை தேர்ந்தெடுக்கப்பட்டது:—

தலைவர்.

திரு. V. S. செங்கோட்டையா முதலியாரவர்கள், மால்மில்ஸ் ஏஜண்டு, கோவை.

உபதலைவர்கள்.

திரு. K. பெருமாள் முதலியார் அவர்கள், கோவை.

திரு. S. முத்துக் குமாரசாமி முதலியாரவர்கள், கொல்லங்கோடு.

பொருட்காப்பாளர்கள்.

திரு. V. V. வெள்ளியங்கிரி முதலியாரவர்கள், கோவை.

திரு. C. P. சுப்பிணி முதலியாரவர்கள், கோவை.

*

### "செங்குந்தர் நன்னெறிக்கழகம்" மருதவரை நீழல் வடமொழி நிகழ்ச்சிகள்

மலர் 11 18-5-1929ந் தேதியன்று, வடவழி சிவாநந்த இரவு பாடசாலையில் திருவாளர் நா. அங்கண்ண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஷை சங்கம் நடைபெற்றது. அவ்வமயம் "புலால் மறுத்தல்" "கடவுள் எங்கும் இருக்கிறார்" என்னும் விஷயத்தை திருவாளர் V. P. மருதப்ப முதலியாரும் சிரஞ்சீவி சுப்பையனும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

மலர் 12 23-5-1929ந்தேதியன்று மருதாபுரம் முத்துக்குமார சுவாமி இரவு பாடசாலையில் ஷை சங்கம் நடைபெற்றது. அவ்வமயம் வடவழி நா. அங்கண்ண முதலியார் அவைத்தலைமையின் கீழ் "புலால் மறுத்தல்" என்ற விஷயத்தை திருவாளர் V. P. மருதப்ப முதலியார் நீண்டதோர் உபந்யாசம் செய்தார். பிறகு தலைவர் முடிவுரையுடன் சபை கலைவுற்றது.

மலர் 13 17-6-29ந் தேதியன்று வடவழி சிவாநந்த இரவு பாடசாலையில் ஷை யூர் திரு. V. S. காளியண்ண முதலியார் அவைத் தலைமையின் கீழ் "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" "பெண்மக்கள் பரிதாப நிலை" என்ற விஷயங்களை முறையே திருவாளர்கள் A சுப்பிரமண்யனும் V. K. M. அப்பாவும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

மலர் 14 9-8-29ந்தேதியன்று வடவழி ஷை பாடசாலையில் ஷையூர் பெரியதனம் திரு. அய்யாவு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஷை சங்கமானது நடை பெற்றது. அவ்வமயம் "செங்குந்தர் கல்வி நிதிச்சீட்டு" என்னும் விஷயம் பற்றி திரு. V. K. M. அப்பா அவர்கள் நீண்டதோர் உபந்யாசம் செய்தார். கல்வி நிதிச் சீட்டை நமது மரபினர்கள் ஆதரிக்க வேண்டு மென்று திரு. V. S. இராமசாமி முதலியாராலும் திரு. V. P. மருதப்ப முதலியாராலும் தீர்மானம் கொண்டுவரப் பட்டது.

### ஒட்டக்கூத்தர் திருநாள்.

மலர் 15 14-9-29-ந் தேதியன்று மருதவரை நீழல் வடவழி செங்குந்தர் நன்னெறிக் கழகமானது சிவாநந்த இரவு பாடசாலையில் நடை பெற்றது.

அவ்வமயம் வேதபாராயணம் முடிந்த பின் ஷை கழகத்தின் காரியதரிசி திரு. S. இராமசாமி முதலியாரவர்கள் அன்புடன் அவைத்தலைமை வகித்தார். அற்றைப் போழ்து நமது குலத்தை நிலைநாட்டிய கூத்தர் பெருமான் திருவுருவத்திற்கு மாலை சூட்டி அபிஷேக ஆராதனை செய்து பஜனை கோஷ்டியுடன் சிவாநந்த இரவு பாடசாலைக்கு அலங்காரத்துடன் கொண்டுவரப்பட்டது.

அவ்வமயம் தலைவர் முன்னுரையில் நமது கூத்தர்பெருமான் சிறப்பை எடுத்துக்காட்டினர். பிறகு திரு. V. P. மருதப்ப முதலியார் அவர்கள் ஒட்டக்கூத்தரின் கல்வி, சிறப்பு, ஒழுக்கம் இவைகளை எடுத்துக்காட்டியதுடன் ஒவ்வொரு செங்குந்தரும் கூத்தர் பெருமானைப்பின் பற்றி நடக்க வேண்டுமென்று கூறி முடித்தார். பிறகு தலைவர் முடிப்புரைக்குப்பின் குழுமியிருந்த நமது மரபினருக்கும் நமது மரபினரல்லாத பெரியோர்களுக்கும் வந்தனமளிக்கப்பட்டு, தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்கு ஜே! ஷண்முகசுந்தர சற்குண வள்ளலுக்கு ஜே! சபாபதி வள்ளலுக்கு ஜே! நன்னெறிக்கழகத்திற்கு ஜே! என்ற ஆரவாரத்துடனும் குதூகலத்துடனும் சபை இனிதே நிறைவேறியது.

மலர் 16 20-11-29ந் தேதியன்று வடவழி ஷை பாடசாலையில் ஷை சங்கமானது திரு. நா. அங்கண்ண முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் "நமது முன்னேற்றம்" என்னும் பொருள் பற்றி திருவாளர்கள் V. P. மருதப்ப முதலியார் V. S. இராமசாமி முதலியார் V. K. M. அப்பா அவர்களால் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு, தலைவர் முடிவுரைக்குப் பின் யாவருக்கும் வந்தனமளிக்கப்பட்டுச் சபை இனிதே கலைந்தது.

V. P. மருதப்ப முதலியார்,
காரியதரிசி.

*

## வச்சனம்பாளையம் நன்னெறிச்செங்குந்தர் சங்கம்

8-12-29உ இச்சங்கத்தின் கூட்டம் பெரியதனக்காரர் அக்கிராசனத்தில் நடைபெற்றது. திரு. R. அருணாசல முதலியார் நமது மித்திரனைப் படித்து விஷயங்களை விளக்கிக் காட்டினர். தலைவர் முடிவுரையில் நம் இளைஞர்களைக்கல்வியில் கட்டாயம் பயில்விக்கவேண்டுமென வற்புறுத்திக் கூறினர்.

5-1-30உ வெள்ளி பாளையத்தில் பெரிய தனம் வெங்கிடசாமி முதலியார் அக்கிராசனத்தில்கூடிய கூட்டத்தில் திரு. E. V. துரைசாமி முதலியார் செய்த அரிய உபந்யாசத்தில் நமது மித்திரனை வீடுதோறும் தருவித்துப் படிக்கவேண்டுமென்றும் அலுமினிய பாத்திரங்களால் உண்டாகும் தீமைகளை மித்திரனில் கண்டபடித் தாமே அனுபவித்து அவற்றை நீக்கியதாகவும் சொல்லி சாரதா சட்டத்தை விளக்கிக்கூறினர். பின் நமது குள்ளத்துறையம்மன் பதிகம் அரங்கேற்றப்பெற்றது. ஜனங்கள் வேண்டுகோளுக்கிணங்கி சங்கத்தலைவர் திரு. பி. ரங்கசாமி முதலியார் அவர்கள் அப்பதிகத்தை 500 காப்பிகள் அச்சிட்டு கோவையில் சமீபத்தில் நிறுவப்பெற்றுள்ள உண்மை செங்குந்த வாலிபர் சங்கத்திற்கு நன்கொடையாக அளிப்பதாகவும், விற்று வந்த தொகை ஷை சங்கத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்றும் கூறினர்.

கலியாணத்தில் ரூ. 1-4-0 (ஒன்றேகால் ரூபா) நமது மித்திரனுக்கு அனுப்பவேண்டு மென்ற தீர்மானம் ஜாதியார் அனைவரின் கட்டளையை ஏற்றபின் நிறை வேறிற்று.

காஞ்சியில் கூடும் நமது இரண்டாவது மகாநாட்டிற்கு வந்து ஸ்ரீ காமாக்ஷியம்மனையும், நமது கணங்களையும் தரிசிக்க வேண்டுமென்று பேராவல் கொண்டு விபரம் கேட்ட சபையோருக்குக்கூடும் தேதி தெரிந்தவுடன் தெரிவித்து மகாநாட்டிற்கு அனைவரையும் தாம் அழைத்துச் செல்வதாகவும் திரு. E. V. துரைசாமி முதலியார் பதிலளித்தபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

E. V. துரைசாமி முதலியார்
காரியதரிசி

*

## குளத்துப்பாளையம் செங்குந்தர் முன்னேற்றக் கழகம்.

5-1-30ந்தேதி மாலை 8 மணிக்கு விநாயகர் ஆலயத்தில் திரு. E. V. சிங்காரவேல் முதலியார் B.A. அவர்கள் தலைமையின் கீழ் 6வது பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாணவர்கள் தேவாரம் பாடியபின் சோலையிலிருந்து விஜயஞ் செய்திருந்த தலைவர் அவர்களுக்குப் பூமாலை சூட்டி வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பெற்றது. திரு. K. கன்னியண்ண முதலியார் திரு. A. குப்புலிங்க உபாத்தியாயர், மாணவர் சடையப்பன், T. பெரிய விநாயகம், K. P. இராமசாமி, M. R. பெருமாள், முதலியோர் 'கல்வி' 'ஜீவகாருண்யம்' 'ஒற்றுமை' 'நல்லாரிணக்கம்' 'கிராமச் சுகாதாரம்' 'குடியால் வரும் கேடு' முதலிய வற்றைக் குறித்து ஜனங்களுடைய மனதைக் கவருமாறு தெளிவாக உபந்யசித்தார்கள். பின்னர் தலைவர் அவர்கள் சங்கம், பாடசாலை, கூட்டுறவு, தொத்து வியாதிகள் முதலிய விஷயங்களைக் குறித்து விரிவாக முடிவுரையில் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் 8 மணிக்கு சபை இனிது கலைந்தது. தலைவருக்கும் அயலூர்களிலிருந்து வந்திருந்த பெரியோர்களுக்கும் திரு. சிதம்பர முதலியார் இல்லத்தில் அறுசுவையுடன் விருந்தளிக்கப் பெற்றது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

*

## அவனாசி தாலூகா மருதூர் உண்மைச் செங்குந்தர் நன்னெறிக் கழகத்திறப்பு விழா

இவ்விழா 8-12-29 இரவு 8-மணிக்கு மருதூர் பெரியதனம் திரு. கு. இராமசாமி முதலியாரவர்கள் இல்லத்தில் நிகழ்வுற்றது. அற்றையம் போழ்து மருதூர் நாட்டாண்மை ...



கருப்பண முதலியாரவர்கள் அன்பின் மிக்க அவைத்தலைமைவகித்தனர். முதன் முதல் தமிழ் மறையோதலுறலும் தலைவர் முன்னுரை நிகழ்ந்தது. 'நம்மவரது பண்டைப் புகழும் தற்கால நிலைமையும்,' 'சங்கஸ்தாபன அவஸ்யமும்' என்னும் பல பெரும் விஷயங்களைப் பேசி முடித்தனர்.

பின்னர் "கல்வி" என்னும் பொருள் பற்றி இலவம்பாளையம் திரு. N. மாரியப்ப முதலியாரவர்கள் வெகு விரிந்ததோர் சொற் பொழிவு நிகழ்த்தியபின் "மதுவிலக்கு" "நம்மவர் பண்டைய தற்கால நிலைமைகள்," "ஜீவகாருண்யம்," "மார்க்கண்டேயர்" என்னும் விஷயங்களை முறையே திரு. A. அருணாசல முதலியார், வெ. பெரியண்ண முதலியார், K. இரங்கசாமி (மாணவன்) S. நடேசன் (மாணவன்) ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

கடைசியாக வடவழி திரு. S. இராமசாமி முதலியாரவர்கள் தலைச்சங்கம், பத்திரிகை, கல்விநிதி, சங்கங்களின் அவசியம், முன்னேற்றம் என்னும் விஷயங்களைப்பேசி முடித்தார். பிறகு தலைவர் முடிப்புரை வெகு விரிவாக நடந்தேறிய பின்னர் வந்தனோபசாரம் கூறப்பெற்று சபை இனிதே கலைந்தது. இடையிடையே தமிழ் மறை யோதப் பெற்றது.

இச்சங்கம் மாதாமாதம் நடத்தப்படல் வேண்டுமென்றும், செங்குந்தமித்திரனை அனைவரும் ஆதரிக்கவேண்டு மென்றும், தலைச்சங்கத்துக்கு வருடமொன்றுக்கு ஐந்து ரூபாய் அனுப்பிக் கிளைச் சங்கமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன.

சங்க நிகழ்ச்சிக்கு ஆண் பெண் இருபாலரும் விஜயம் செய்திருந்தனர்.

இம்முயற்சிகள் யாவும் வெ. பெரியண்ண முதலியாரவர்களால் நடந்தேறியது குறிக்கற் பாலது.

